ஓம் பரப்பிரம்மணே நம:

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

| | | |
|---|---|---|
| கமலம்-4. | சென்னை: சுக்கிலஹு ஆனிமீ 1உ | இதழ்-39. |
| Vol. 4. | 1929-ம்ஹு ஜூன்மீ 14உ | No. 39. |


## ஆனந்த தரிசனம்



"இருதய சுத்தம் என்றும் சிலாக்கியம்." எவனொருவன் மனம் சுத்தத்தோடிருக்கின்றதோ அம்மனம் மிகுந்த சிலாக்கியத்தை யடைகின்றது. சுத்தப்படாத மனம் அசுத்தமாகிய மாயவலையிற் சிக்கிக்கொண்டு என்றும் மீளாமல் அலைந்துகொண்டிருக்கும். மனம் அசுத்தப்படுவதற்கு ஹேதுகரம் ஸம்ஸாரபந்தமே. உலகத்தில் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் ஸம்ஸாரமே காரணம். ஸன்யாஸிகளுக்கு அத்தனை துன்பமில்லை. பரமாத்மாவைத் தியானித்தால் ஸம்ஸாரமாகிய துன்பத்தினின்று விடுபடலாம். மனமும் நல்வழியில் திரும்பும். பிள்ளையும் பெண்ணும் தாய்க்கு ஸந்தோஷத்தைக் கொடுத்தாலும், அதனால் தாயின் யௌவனம் கெட்டுவிடுவதானது ஒருவிதத்தில் துக்கத்தையும் விளைக்கின்றன. முன்னில்லாத கவலைகள் ஒவ்வொரு தினமும் பெருகிக்கொண்டே போகின்றன. ஒரு புதிய இன்பமுண்டானால் ஒரு புதிய துன்பம் தோன்றிக்கொண்டே யிருக்கும். இவை ஸம்சாரத்தில் நிகழும் ஸம்பவங்களாதலின் விவேகிகள் அதைத் துறந்து ஸந்யாசிகளாகின்றனர். அப்போதும் இருதய சுத்தம் இல்லாவிடிற் பயனில்லை; மனதைப் பரமாத்மாவினிடம் ஈடுபடுத்தினாலன்றித் துக்கம் நீங்காது. இல்லறத்தைத் துறந்து துறவியாவதிலும், இல்வாழ்விலிருந்தவாறே அதில் பற்றில்லா உள்ளத்துடன் ஸாந்தமூர்த்தியாய் இலங்குவது இன்னும் சிரேஷ்டதரமானது. இவ்வுத்தம நிலை இருதயசுத்தியால் லபிக்கவல்லது. மனம் நிர்மலமாவதற்குப் பகவத் பக்தி பிரதானம். ஆதலின் பரமேசுவரனது பாதாரவிந்தங்களை ஸதா தியானிக்கக் கடவோம்.

---

" அமிர்த குணபோதினி "யைப் பார்க்க எழும் ஆவலை சன்மார்க்கத்தின் பாதையிலும் திருப்பு. அமிர்த குணச் செல்வன்—செல்வி ஆகுக.

**“ பிள்ளை யில்லாதார் பெரும் பித்தர் ”** அன்றோ? பிள்ளையில்லாத போதும் வருத்தமே. அது பிறந்தாலும் வருத்தமே. “இதமுறல் எந்நாள் சேயால்?—என்றைக்குமே துன்பமானால்” என்றொருவர் பாடினார். ஓர் ஊரில் மிக்க அன்னியோன்னியத்துடன் கணவனும் மனைவியும் வாழ்ந்தனர். நெடு நாளாக அவர்கட்குப் புத்திரப்பேறு உண்டாகவில்லை. அதனிமித்தம் யாத்திரை செய்யப் புறப்பட்டு அநேக திவ்ய நதிகளில் மூழ்கியும், தெய்வ வழிபாடு செய்தும், விரதமிருந்தும் வந்தனர். எனினும், தாங்கள் நாடிவந்த விஷயம் கைகூடவில்லை.

***

**“ ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடே ”** என்பது போல் நமக்கு இந்த ஜன்மத்தில் புத்திரபாக்கியமில்லை போலுமென்றெண்ணி வருந்தி நின்றனர். நெடுநாட்கட்குப் பிறகு பகவானும் மகப்பேற்றை விரும்பித் தன்னைத் துதித்துநிற்கும் அடியவர்கள்பால் கிருபை வைத்தனர். பெண்மணி யும் கருதரித்து ஓராண் மகவைப் பெற்றனள். அதனை நாளொரு மேனியாக வளர்க்க வளர்ந்து வருநாளில்,

***

**“ கையிற் கிடைத்தும் களிக்க இடமில்லை ”** என்பதுபோல அக் குழந்தை பிறந்தநாள்முதல் அடிக்கடி நோய்கண்டு வருந்தியவாறிருந்தது. தங்களோடு கொஞ்சிக் குலாவியிருந்த குழந்தை வியாதியால் வருந்துவதாயின் தாய் தந்தையர்களின் மனம் படும்பாட்டைக் கூறவும் வேண்டுமோ? ஒருநாள் குழந்தைக்கு மிக்க தொந்தரையுண்டாகிவிடவே, அவர்கள் அன்னாகாராதிகளை அறவே தொலைத்து அழுத கண்ணும் சிந்திய மூக்குமா யிருந்தனர்.

***

**“ சமயத்திற்கேற்ற சாமியார் வந்தார் ”** என்பதாக அவ்வேளையில் ஒரு சாமியார் பிச்சைக்கு வந்து இவர்கள் இருக்கும் கோலத்தைக்கண்டு குழந்தை யின் கையைப் பிடித்துப் பார்த்து அபாயமில்லை யெனத் தெரிந்துகொண்டார். ஆயினும், இவ்வுத்தம தம்பதிகட்கு உலகின் நிலையற்ற வாழ்க்கைத்தன்மை யைக் குறித்து நன்மதி புகட்டிச் செல்லக் கருதி அவர்களைப் பார்த்து,

***

**“ சாகாத வீட்டுச் சாம்ப லொரு பிடி ”** கொண்டுவந்தால் உங்கள் குழந் தை பிழைக்கும்; எவ்வளவு சீக்கிரம் வருகிறீர்களோ அவ்வளவுக்கும் நல்லது என்றார். உடனே தாயும் தந்தையும் பக்கத்து வீதிக்கு ஓடி ஒரு வீட்டில் சாம்பலைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு வாசற்படியை விட்டுக் கீழிறங்கியதும் ஸ்வாமியார் சொன்னதை நினைத்துக்கொண்டு மறுபடியும் உட்சென்று, உங்கள் வீட்டில் யாராவது இறந்துபோயிருக்கின்றனரா என்று கேட்டனர்.

***

**“ துன்பத்தைத் தூண்டிவிட்டது போல ”** இவ்வார்த்தையைக் கேட்ட வுடனே அவ்வீட்டார் கண்ணுங் கண்ணீருமாய் தங்களுக்கு வேண்டியவர்க ளாயிருந்தோர் மரித்துப்போனதைக் குறித்து விஸ்தாரமாகச் சொல்லத்

---

**“ யோசித்துச் சொல்லுகிறேன் ”** என்றால், அந்தக் காரியம் சிக்கலில்—இரண்டாம் பக்ஷத்தில்—மறுக்கவேண்டிய நிலையில் இருக்கிறதென்று கருத்து.

துவக்கினர். எவ்வீட்டுக்குச் செல்லினும் மரணதேவதை புகாத இடமே இருக்கவில்லை. சாகாத வீட்டுச் சாம்பலும் கிடைக்கவில்லை. வெறுங்கையின ராய் மனது நொந்து ஸ்வாமியாரிடம் வந்தனர்.

* * *

" அவர்கள் கையைக் கொண்டே அவர்கள் கண்ணைத் துடைத்தது " போல, ஸ்வாமியார் அவர்களைக் கண்டவுடனே, " எங்கே சாம்பல்; இந்நேரமா ஒரு பிடி சாம்பல் கொண்டு வருவதற்கு; உம் உம் என் கையிற் கொட்டுங்கள்" என்றார். அதற்கவர்கள் என்ன ஸ்வாமீ, இவ்வுலகில் மரணமடையாத வீடு கூட இருக்குமா? நாங்கள் இருவரும் ஒரு பிடி சாம்பலுக்காக எவ்வளவோ பிரயாசைப்பட்டுப் பார்த்தோம். எமனேறாத வீட்டைக் காணோம்; என் செய்வோமென்றனர். ஸ்வாமியார் அவர்களைக் கருணையோடு நோக்கி அருகழைத்து,

* * *

"கிட்டாதாயின் வெட்டென மற" என்பதுபோல் பிராப்தமில்லாததற்கு வருந்தாது மறந்து உள்ளதைக்கொண்டு திருப்திகொள்ள வேண்டும்; இக் குழந்தை உங்களுடையதானால் கட்டாயம் பிழைக்கும்; இதற்குக் கொஞ்சம் வேப்பெண்ணெய் உள்ளுக்குத் தந்தால் குணமாய்விடும்; இந்த வலிப்பு குழந் தைக்குத் தீங்கு செய்யாது; வாழ்க்கையில் இதுபோன்ற எத்தனையோ சோத னைகள் ஸம்பவிக்கலாம். இதற்கெல்லாம் நாம் வியஸனப்படுவதிற் பயனில்லை. எதையும் சகித்தே செல்லவேண்டும் என்று தேறுதல் கூறிச் சென்றார். குழந் தைக்கு வந்த பிணியும் இரண்டுதினங்களில் விலகிற்று. இதனால் எந்தக் காரிய மும் நம் இஷ்டப்படி செய்ய இயலாதென்றும், எல்லாம் ஈச்வர நியதியின் படியே தான் முடியுமென்றும் அறிந்துகொள்ளுகிறோம்.

* * *

"பாபஞ் செய்யாதிரு மனமே, நாளைக்—கோபஞ் செய்தே எமன் கொண்டோடிப் போவான்" என்றார் ஓர் பக்தர். எமவாதனையினின்றும் விடுபடுவதற்கே அநேகர் யோகிகளாகின்றனர். யோகம் என்றால் சேர்க்கை; வியோகம் என்றால் பிரிவு. பற்பல சக்திகளையும் ஒன்றாய்ச் சேர்க்க முயல் வோர் யோகிகளெனப்படுவர். யோகத்தின் முக்கிய கருத்து மனதையோரே விடத்திற் சேர்க்கவேண்டுமென்பது. குரங்காட்டுவோன் கயிற்றால் அதைக் கட்டித் தன் வசப்படுத்தாவிட்டால் அது அவன் சொற்படி கேட்டுக் கூத்தா டாது. உபாத்தியாயரின் சேர்க்கையினின்றும் விலகுவோனின் கல்விக்கு ஹானியுண்டாகிறது. பதியுடன் ஒன்றுபட்டிராது வெளியேறும் பெண்ணுக் குத் தோஷம் ஸம்பவிக்கின்றது. இவ்விதம் சேர்க்கையினின்றும் விலகி யோடும் ஜீவராசிகள் படும் துயரத்தைச் சொல்லி முடியாது. ஸதா சலித்துக் கொண்டிருக்கும் மனதை ஓரிடத்தில் கட்டிவைக்க யோகிகளால்தான் முடியும். அவர்கள் சரீரத்தைத் தங்கள் இஷ்டப்படி வைத்துக்கொள்ளவும், பிராணசக்தியை ஓரிடத்தில் நிறுத்தவும் திறமையுடையவர்கள். ஒவ்வொரு இந்திரியத்திலும் மனம் செல்லாவிட்டால் உலக வியாபாரமே இல்லாமற்

---

பத்திராசிரியரின் காகிதக்குப்பையும், வைத்தியரின் சீசாக்கள் குப்பையும், சக்கிலியனின் தோல் குப்பையும் அவற்றின் மதிப்பும் அவரவர்களோடு முடிவு.

போம். அதற்காக மனதை இழுத்து நம்முடைய சொற்படி நடக்கும்படி செய்வது முக்கிய கடமை. இதுதான் யோகத்தின் கருத்து. பக்தியோகமும் எளிதல்ல. சிவ சிவ என்று வாயாற் சொல்லிக்கொண்டே மனதைப் பாப விஷயங்களில் அலையவிடுவது என்ன பிரயோஜனத்தைத் தரும்?

* * *

"மனிதர் தம்மை மானிலம் புகழும்." எப்படி யிருந்தாற் புகழும்? ஸ்ரீ பகவானுடைய திருவடிகளை மறவாதிருந்தால் மட்டுமே உலகம் போற்றித் துதிக்கும். மறவாதிருத்தற்கு வகையென்ன? மனதை முற்றிலும் பகவானிடத்தில் பதியவைத்து மற்ற விஷயங்களை மறப்பதே. ஒரு மனிதன் நம்மிடம் பேசுகையில், அந்நேரத்தில் வெகு தூரத்திலுள்ள நண்பனின்மீது நினைவு தோன்றி, நமது மனதை அங்கே ஓட்டிவிடுகிறோம். நம்மிடம் பேசுபவனோ இதை யுணராது தான் சொல்வதை யெல்லாம் நாம் கேட்பதாக எண்ணுகிறான். நாம் அவன் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டாலும் நமது மனம் அவற்றைக் கிரகிக்கவில்லை. அவன் பேசியது எதுவுமே நமக்குத் தெரியவில்லை. காதை ஒரு வீடென்று எண்ணிக்கொள்வோம். நம்மிடம் பேசியவனை ஒரு கடிதம் கொணர்ந்தவன்போலக் கொள்வோம். அவன் காதாகிய வீட்டுக்குள்ளே நுழைகிறான். ஆனால், அவன் கொணர்ந்த கடிதத்தை ஏற்றுக்கொள்ள மனமாகிய எஜமானன் அங்கு இல்லை. ஆதலின் கடிதம் எஜமானனிடம் போய்ச் சேராமலும், எஜமானனும் கடிதத்தின் விஷயங்களை அறியாமற் போகவும் நேருகின்றது. இவ்விதமே நாம் உலக விஷயங்களின் மத்தியிலிருந்தாலும், நமது மனதைப் பகவானிடம் ஓட்டிவிட்டால் பிரபஞ்ச மாயை நம்மை எதுவும் செய்ய முடியாது. இத்தகைய பக்குவவிகளை மானிலம் புகழக் கேட்கவும் வேண்டுமோ?

* * *

"மனங்கொண்டது மாளிகை" என்பர். இந்த மனமானது கர்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, ஆக 10-இந்திரியங்களுக்கும் இராஜாவாய் அவ்விந்திரியங்களின் வழியே குணதோஷம் விசாரிக்கிறதாய் ஹிருதய கமலத்தின் மத்தியிலிருக்கிறது. இதன் தொழில்——ஸாத்வீகப்பிரவிருத்தி, இராஜஸப்பிரவிருத்தி, தாமஸப்பிரவிருத்தி யென்று மூன்று வகைப்படும். வைராக்கியம், க்ஷமை முதலியன ஸாத்வீகப் பிரவிருத்தி. காமம் குரோதம் முதலியன ராஜஸப்ரவிருத்தி. சோம்பல், நித்திரை முதலியன தாமஸப்ரவிருத்தி. மேலே கூறிய மூன்று வகைப் பிரவிருத்திகளாலும் புண்யம், பாபம், வீண் காலப் போக்கு ஆகிய இப்பலன்க ளுண்டாகின்றன. தாமஸப்ரவிருத்தியாகிய சோம்பல், நித்திரை முதலியவற்றால் ஆயுட்காலம் வியர்த்தமாகிறது. ராஜஸப்ரவிருத்தியாகிய காமக் குரோதாதிகளால் பாபம் ஸம்பவிக்கிறது. ஸாத்வீகப்ரவிருத்தியால் புண்யம் லபிக்கிறது. பகவத் பக்தி செய்வதற்கு ஸாத்வீகரே அருகராவார். ஆதலின், நாம் ஸாத்வீக குணஸம்பன்னர்களாகி, ஸர்வலோக நாயகனும் மாயா சொரூபியுமாகிய ஸ்ரீ பகவானுடைய திவ்ய திருவடிப் போதுகளை என்றும் மறவாதவர்களாய், இப்பிரபஞ்சத்தில் மறுபடியும் பிறவாதவர்களாகக்கடவோம்.

மாயனிருதாள் மறவாதார்
மண்ணிலென்றும் பிறவாதார்.

'அறிந்தவன் துணியலாம்.'

# அமிர்தகுணபோதினி

சுக்கில௵ ஆனி௴ 1௳

## சிலந்தியின் சலியா உழைப்பு.

—(:O:)—

புத்திமான்கள் கண்டு வியக்காத பொருள் ஒன்று மில்லை. அறிவில்லாதவர்களுக்கு எதுவும் வியப்பா யிராது. அறிவுள்ளவர்கள் முதலில் எதையாவது பார்த்தாலும் வாசித்தாலும் அப்பொழுதே அவர்களுக்கு அது ஸ்வாரஸ்யமாய்ப்பட்டு ஆச்சரியமுண்டாக்கிக் கடைசியில் பரமானந்தமாய் முடியும். புத்தியீனர்களுக்கு விஷய பரியாலோசனை யென்பதே கிடையாது. தம்மைச் சுற்றியுள்ள சிறப்புகளொன்றையும் காண்கிறதில்லை. நன்றாய் ஆலோசித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவது புத்தியீனமான அற்பச் செயலன்று. ஆச்சரியப்படுவது அறியாமையின் காரியமென்று சிலர் சொல்லுவார்கள். அது அவ்வளவு சரியல்ல ; அறிவில்லாதவர்களுக்கு ஆச்சரியந் தோன்றுமோ ?

புஸ்தகங்களைப் படிப்பதனால் மாத்திரந்தான் அறிவு உண்டாகுமென்பதில்லை ; கடவுளுடைய அளவற்ற சிருஷ்டிகளின் ஆச்சரியங்களை ஆராய்ந்தறிவதாகிய படிப்பினால் உண்டாகும் அறிவும் ஞானமும் மிகச் சிறந்தவை. பிராணனுள்ளளவும் சிருஷ்டிப் பொருள்களை யார் ஒருவன் பரிசோதிக்கப் புகுகின்றானோ, அவனுக்குப் பேரானந்தமும் பேரறிவும் பெருகுமென்பதற்குச் சந்தேகமில்லை. சாதாரணமாய் ஒவ்வொரு நிமிஷமும் நமது புறக்கண்ணுக்குத் தென்படும் ஜீவவர்க்கங்களிலும் மூலவர்க்கங்களிலும் எவ்வளவோ மாட்சிமைகள் மறைந்திருக்கின்றன. அவைகள் ஏன் நமக்குத் தெரியவில்லை யென்றாலோ அவற்றைப் பலதரம் பார்த்திருப்பதால் அது ஒரு வியப்பாய்த் தோன்றுவதில்லை. மேலும்,

---

கவலையோடு உட்கார்ந்திருக்கையில் சமுத்திரக் கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்று எதிரில் இருப்பவன் அழைக்கிறான். அவன் உல்லாஸம் அப்படி அழைக்கிறது. கவலைப் புழுவுக்கு அந்தப் பாக்கியம் இல்லையே..

அவைகளைத் தெரிந்துகொள்ள நமக்கு ஆஸ்தையும் அக்கறையுமில்லாததும் ஒரு காரணம். முழுமனதோடும் பூரண சிந்தையோடும் சிருஷ்டிகளை ஆராய்ந்தறிவதாகிய காரியத்தில் நாம் பிரவேசித்து அவைகளை ஊற்றமாய்க் கவனியாவிட்டால், அந்த மாட்சிமைகள் நமது அகக்கண்ணுக்குப் புலப்படமாட்டா.

இதற்குச் சாதாரணமான ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக்கொள்வோம். சிலந்திப்பூச்சி எவ்வளவு அற்பமானது? ஜீவ ஜந்துக்களில் சேர்ந்ததென்றுகூட நாம் அதை மதிப்பதில்லையே. பொறுமை யென்ன, உழைப்பென்ன, தைரியமென்ன—இவை போன்ற மேம்பட்ட குணங்கள் அதனிடத்தில் தங்கியிருக்கின்றன. இந்த லட்சணங்களை யாராவது ஒருவனிடத்தில் கண்டால் நாம் அவனை மிகவும் மகிழ்ந்து கொண்டாடுவோமல்லவா? இப்படி நாம் மேலாகக்கொண்டிருக்கும் குணங்கள் சிலந்திப் பூச்சியினிடத்தில் இருக்குமாயின், அதை நாம் எவ்வளவேனும் இழிவானதென்று நினைக்கலாகாதே. உலகத்தில் வித்வான்கள் கண்டு விசேஷமாய் சிந்திக்கத்தக்கவை பலவுள. அவைகளுள் சிற்ப விசித்திரமொன்று. அந்த சிற்ப சாஸ்திரத்தில் மிகுந்த தேர்ச்சி யடைந்திருப்பவர்களுடைய திறமையும் சிலந்திக்கு இந்த விஷயத்திலிருக்கிற சூட்சும புத்திக்கு ஈடாகமாட்டாது. அதனுடைய வேலையின் ஒழுங்கும் செய்நேர்த்தியும் அவ்வளவு ஆச்சரியப்படத்தக்கதாயும், நிகரற்றதாயும் இருக்கிறது.

சிலந்திப்பூச்சிகளில் பல ஜாதிகளுண்டு. அவைகளுள் தோட்டச் சிலந்தியும், எட்டுக்கால் பூச்சி யென்கிற வீட்டுச் சிலந்தியும் முக்கியமானவை. அவைகள் முறையே தோட்டங்களில் செடி கொடிகளிலும் வேலிகளிலும் வீடுகளில் ஜன்னலுட்புறத்திலும் வெளிப்புறத்திலும் நூற்கூடு அல்லது நூற்கோட்டையைக் கட்டிக்கொள்ளுகின்றன. அந்தக் கூடு சக்கரவடிவமுள்ளது. அச்சக்கரத்தின் திடத்தையும் திருத்தத்தையும் பார்த்தால் இரேகாகணிதச் சக்கரமும் தோற்றுப்போம். வெளிப்புறத்து நூல்கள் மாத்திரம் விசேஷமாய் வட்டமாயிருப்பதில்லை; முக்கோண வடிவாயிருக்கும். சக்கரத்தின் மத்தியஸ்தானத்திலிருந்து வெளிப்புறத்து நூல்களுக்கு வண்டிச் சக்கரத்தின் குடத்திலிருந்து கால்கள் வட்டை (சுற்றளவு) பரியந்தம் போயிருப்பதுபோல நூல்கள் ஓடுகின்றன. அதே மத்திய ஸ்தானத்தைச்சுற்றி ஏகமத்திய சக்கரங்கள் ஒன்றின்பின்னொன்று விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கும். சிலந்தியின் நூற்கோட்டை பெண்பாலார் செய்யும் விசித்திரமான தையல் வேலை

---

எடுத்த பேச்சுக்கெல்லாம் சத்தியம்—சத்தியம் என்பவர்கள் சத்தியச் சொல் எந்த நேரத்திற்கு—எந்தத் தீராத விவாதத்திற்குப் பிரயோகிக்கப்பட வேண்டிய மாண்புள்ள பொருள் என்பதை அற்பமும் அறியாதவர்களே!

களைப் பார்க்கிலும் மேன்மையாயும் நேர்த்தியாயுமிருக்கும். அந்த நூல் கோட்டைக்கு உபகரணங்கள் என்னவென்றாலோ, சிலந்தி தன்னுடைய அவயவங்களினின்று உண்டாகிற அநேகமாயிரம் நுட்பமான நார்களைக்கொண்டு நூல்களை நூற்று, அந்த நூல்களினால் வலையைப் பின்னுகின்றது. சாதாரணமாய் வீடுகளில் கட்டியிருக்கிற கோட்டையின் நூல்கள் ஒவ்வொன்றும் முந்நூறு நானூறு நார்களால் ஆனவையென்று சொல்லுகிறார்கள். வலையின் மத்தியஸ்தானத்திலிருந்து சிலந்தியின் இருப்பிடத்திற்கு நூல்வழி ஒன்றுண்டு. வலையில் ஒரு ஈ அகப்பட்டுக்கொண்டால் தட்சணமே அந்த நூல் கொஞ்சம் அசையும். அந்த அசைவை அறிந்து சட்டென்று நூல் வழியாய் ஓடி கோட்டையின் மத்தியில் போயிருந்து கொண்டு எந்த நூலில் ஈ சிக்கிக்கொண்டிருக்கிறதோ அதைக் காலினால் உணர்ந்து கண்டுபிடித்து அங்கே ஓடி ஈயைப் பட்சித்து விடும். இரை தேடுவதில் சிலந்திக்கு கண்பார்வையைவிட ஸ்பரிச உணர்ச்சியே பிரதானம்.

வீட்டுச் சிலந்தி தன் வலையில் ஒரு ஈ அகப்பட்டுக்கொண்டால் திடீரென்று முரட்டுத்தனமாய் அதன்மேல் பாய்ந்து வாயினால் கவ்வி தன்னுடைய ஸ்தானத்துக்குக் கொண்டுவந்து அப்புறம் அதைப் புசிக்கும். தோட்டச்சிலந்தி முதலிய உயர்ந்த ஜாதிச் சிலந்தியோ, அப்படியல்ல; இருப்பிடத்திற்கு ஸமீபத்தில் அகப்பட்டுக்கொண்டாலும் சரி, தூர அகப்பட்டுக்கொண்டாலும் சரி, ஒழுங்குப்படி முதல் முதல் கோட்டையின் மையத்துக்குப்போய் ஈ மாட்டிக்கொண்டிருக்கிற நூலைத் தெரிந்துகொண்டு அங்கேயே போய் அதைக்கொன்று தின்றுவிடும். ஈ சிறிதாயிருந்து இருக்கிற இடம் தெரியாமற்போனால், மத்தியஸ்தானத்திலிருந்து நூல்களைச் சுற்றிச் சுற்றி இரண்டு மூன்று தரம் பிடித்து அசைத்து அது இருக்கிற இடத்தை அறிந்துகொள்ளும். ஒரு குளவி வலையில் சிக்கிக்கொண்டு அதை நேராகப் போய் அடிப்பது தனக்குத் தீங்காய் முடியுமென்று கண்டால், அந்தப்பக்கமும் நகரவொட்டாமல் இந்தப்பக்கமும் நகரவொட்டாமல் அதை நன்றாய் வலையில் மாட்டிவிட்டு அது சகல பலமும் ஒடுங்கி ஓய்ந்துபோய் தானாய்ச் சாகிற பரியந்தம் காத்துக்கொண்டிருக்கும். அல்லது அவ்வளவு பெரிய ஜந்துவலையைச் சின்னாபின்னமாய் இழுப்பதனால் நூல்கள் அறுந்து வலைக்கு அபாயம் வருமென்று தோன்றினால், அது எந்த நூல்களில்

---

எல்லாம் பெண்ணரசாட்சிதானப்பா! பிச்சைக்காரனுக்கோ, வீடுதேடி வந்த விருந்தாளிக்கோ, வேறு எவருக்கோ — பிடி சோறுகூட வீட்டுப் பெண்கள் நல்ல மனது வைத்தால்தான் கிடைக்கும்! ஒவ்வொன்றையும் உள் நுழைந்து அடுப்பங்கரை வரையில் போய்ப் பானையில் இருக்கிறதா இல்லையா வென்று பார்க்கப் புருஷர்களால் முடிகிறதா?

சிக்கிக்கொண்டிருக்கிறதோ அந்த நூல்களை அறுத்துவிட்டு அதைத் தப்பிப்போகும்படி விட்டுவிடும்.

"சின்னூல் பலபல வாயாலிழைத்துச் சிலம்பிபின்னும்
அந்நூலருந்தி விடுவதுபோல வரங்கரண்டம்
பன்னூறுகோடி படைத்தவையாவும் பழம்படியே
மன்னூழிதன்னில் விழுங்குவர்போத மனமகிழ்ந்தே"

என்று கடவுளுண்டாக்கிய இயற்கையறிவினால் சிலம்பி செய்கிற அற்புதத் தொழில் அவருடைய படைப்புச் செயலுக்கு ஒருவாறு ஒத்திருக்கிறதென்று தமிழ்நாட்டுக் கவிஞரும் பாடியுள்ளார்.

தன்னுடைய இனத்தில் ஒன்று வலையில் மாட்டிக்கொண்டால் அது இப்படியெல்லாம் பண்ணுகிறதில்லை. வலையின் நூல்கள் எல்லாவற்றையும் கால் நகங்களால் பிடித்து அசைக்கும்; அப்போது அபாயத்திலிருந்த சிலந்தி ஓடிப்போகும். தப்பி ஓட முதலில் கொஞ்சம் இடம் கொடுக்கும்போது தப்பி ஓடாமல் அது எதிர்க்கவேண்டுமென்கிற அபிப்பிராயங் கொள்ளுமாயின், இரண்டும் கால்களை நன்றாய்ப் பரப்பிக்கொண்டு வாயைத்திறந்து ஒன்று மற்றொன்றுக்கு எமனைப்போன்ற பயங்கரமான பார்வையை உடைத்தாகி முன் கால்களால் மெல்ல மெல்ல அணுகும். அவ்விரண்டுள் எது முதல் முதல் மற்றொன்றின்பேரில் பாய்ந்து கடிக்கின்றதோ அதுதான் ஜெயமடையும். கடிபட்ட சிலந்தியோ அப்படியே சுருட்டிக்கொண்டு இறந்துபோகும்.

எல்லாவித பூச்சிகளுக்குள்ளும் சிலந்தியைப்போல் சூதும் தந்திரமுமுள்ள பூச்சியேயில்லை. தாய்ச் சிலந்தி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து குஞ்சுகள் வெளிப்படுகிற நாள் முதல் ஆயுசு பரியந்தம் இதர அபேட்சையில்லாமல் தங்களை மற்ற ஜந்துக்களிடத்தினின்று காத்துக்கொள்ளுகிறதுந் தவிர, சில ஜந்துக்களைத் தாங்களே கொல்லவும் கொல்லுகின்றன. வட்டமான நூல்வலை ஈ பிடிப்பதற்கு மிகவும் வசதியானது; அப்படிப்பட்ட வலைகள் கட்டிக்கொண்டிருக்கும் சிலந்திகள் அதிசீக்கிரத்தில் கொழுத்துப் பருக்கின்றன. சிலந்திகள் தோலுரிப்பதுண்டு; அதற்கு இரண்டு மூன்று நாள் பிடிக்கும்; அந்தக் காலத்தில் மாத்திரம்தான் பலம் ஒடுங்கி சுறுசுறுப்பின்றி அடங்கிக் கிடக்கும். தோலுரித்தபிறகு அவயவங்கள் தளதளவென்று பிரகாசித்துக்கொண்டு மிகவும் அழகாயிருக்கும்.

சாயங்கால வேளையில் தோட்டச் சிலந்தி தன்னுடைய மறைவிடத்தைவிட்டு நூல் கோட்டையின் மத்தியில் வந்து உட்கார்ந்து

---

அந்த சினிமா பார்த்து வந்து பிறகு நாடகத்திற்குச் செல்லவேண்டும் என்கிறான் சீமானுடைய புத்திரன். அவனுக்கு உலகக் கவலை ஏது? வீட்டிற்குள் போனதும் சோறு தயார்! செலவுக்குப் பணம் பெட்டியிலே தயார்!

நூல்களின்பேரில் காலைப் பரப்பிக்கொண்டிருக்கும். நூல் அசங்கினதும் அசங்காததுமா யிருக்கும்போதே பளிச்சென்று வலையிற் சிக்கிக்கொண்டிருக்கிற ஜந்துவின்மேற் பாய்ந்து அதைக் கொன்று விழுங்கிவிடும். நூல்களைப் பழுதுபார்க்கிறதும் சாயங்காலத்தில் தான். சிற்றுயிரிலக்கண சாஸ்திரத்தை அறிந்த சில வித்வான்கள் சிலந்தியின் வலை நூல்கள் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகப் போடப்படுகின்றனவென்றும் சொல்லுகிறார்கள்; இவர்கள் உண்மையாகப் பார்த்து இப்படி உரைக்கிறார்களென்று கொண்டாலும் கொள்ளலாம். ஒரு நிமிஷமாகிலும் சும்மா யிராமல் சிலந்திப்பூச்சி தன்னுடைய வலையின்பேரில் இடைவிடாத கவலையுள்ளதாய் அதை எப்போதும் செவ்வைப்பண்ணிக்கொண்டே யிருக்கும். மழைகாலம் ஸமீபித்ததென்று காட்டும் குறிகளை அறிந்துகொண்டு மழைகாலத்தில் ஈக்கள் தங்குமிடமில்லாமல் அங்குமிங்கும் அலைந்து தன்னுடைய இடத்துக்கு வந்து சேருமென்கிற தைரியத்துடனே வலையைச் செம்மையாய் ஒழுங்குபடுத்தி வைக்கும்.

தோட்டச் சிலந்தி இப்படிக் குசாலாய்ப் பொழுது போக்கிக்கொண்டு சௌக்கியப் பிராணியா யிருக்க, வீடுகளிலிருக்கும் சிலந்திகள் அநேகம் பேருக்காகிலும் நூல்வலை என்று ஒன்றைக் கட்டிக்கொண்டு எப்போதாவது ஒரு ஈ தப்பித்தவறி வந்து விழப் போகிறதாவென்று பார்த்தபடியே அதிக பொறுமையோடு பட்டினியாகவே அநேகமாய்க் காலத்தைத் தள்ளுகின்றன; அப்படியும் பசி தாளாவிட்டால் தன் ஜாதியிலேயே சிறிதான பூச்சிகளைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொன்று தின்றுவிட அஞ்சுகிறதில்லை.

சிலந்தியில் குதித்துக் குதித்து ஓடுகிற ஒரு ஜாதியும் உண்டு. இதற்கு நூல்வலை கட்டவேண்டுமென்கிற கவலையே கிடையாது. வலையில்லாமலே இது ஆகாரத்தைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது. புலி ஆட்டின்மேல் பாய்கிறாப்போலே, ஈக்குத் தெரியாமல் அதன் பக்கத்தில் ஒரு பாய்ச்சல் பாயக்கூடிய தூரத்தில் மறைந்திருந்து சமயம் பார்த்து அதன்மேல் விழுந்து ஒரு விழுங்காய் விழுங்கிவிடும். வேட்டையில் பிரியமுள்ளவர்கள் இந்தப் பூச்சி செய்கிற உபாயங்களை யெல்லாம் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு அவைகளை அநுஷ்டித்தால் நல்ல வேட்டையாடலாம்.

சிலந்தியில் இன்னும் எத்தனையோ ஜாதிகளுண்டு, மனித வர்க்கத்தில் ஜாதிபேதம் கூடாதென்று விஸ்தாரப் பிரஸங்கங்கள்

---

இந்திய சட்டசபையில் இப்போது ஜனப் பிரதிநிதிகளாய் இருப்பவர்கள் தங்களால் ஒரு விரல் அசைக்கவும் முடியவில்லை யென்கிறார்கள். ஆனால், இனி வரும் புதுத் தேர்தலுக்குப் புறப்படுகிறவர்களோ தாங்கள் வெகு வேலை செய்துவிடப்போவதாய்ச் சொல்வது அவர்கள் கௌரவ லாபம் பெறவே.

செய்வோர் இவ்வித சிறு பூச்சிகளினிடையிலும் ஜாதிபேதங்கள் வலுத்து நிற்பதற்கும், அவைகளைப் போக்கமுடியாமல், அந்தந்த ஜாதிக்குத் தகுந்தபடி குணபாவங்களும் செயல்களும் பேதப்பட்டிருப்பதற்கும் என்ன பதில் சொல்லுவார்களோ? சிலந்தியினுடைய புத்திகூர்மையையும், செய்கைத் திறமையையும் ஆராய்ந்தறிவோமானால், மனதுக்கு இன்பமும் ஆச்சரியமும் உண்டாவது மன்றி, புத்தி விகாசமும் உண்டாகும். சிலந்தியினால் மனிதனுக்கு விசேஷமாகத் தொந்தரவில்லை. ஏதோ ஓரிரண்டு ஜாதிச் சிலந்தியின் கடி நோவைத் தருகின்றதாம்; அதுவும் அபாயமானதல்ல. சிலந்தியினாலுண்டாகும் பெருத்த லாபம் என்னவென்றால், ஈக்களை நாசமாக்குகிறது தான். ஈக்கள் பெருத்துப்போனால் மனிதனுக்குச் சகிக்கக்கூடாத உபத்திரவ முண்டாகும். ஒரு குதிரையின் மாமிசத்தை ஒரு சிங்கம் எவ்வளவு காலத்தில் பட்சித்துவிடுமோ, அதைவிடச் சீக்கிரத்தில் இருபது முப்பது ஈக்கள் சேர்ந்து அதன் சாரத்தை உறிஞ்சியும் பட்சித்தும் அதைச் சக்கையாக்கிவிடுமாம். இப்படிப்பட்ட பொல்லாத ஈக்களால் உண்டாகும் தீங்கைத் தணிப்பதற்கு சிலந்திப்பூச்சிகள் மிகவும் சாதகமா யிருக்கின்றன. சோம்பேரிக்குப் புத்திசொல்ல வேண்டுமானால், 'எறும்பினிடத்தில்போய் அதனுடைய வழிகளைக் கவனித்து விவேகம் கற்றுக்கொள்' என்று நல்ல குணங்களுக்கு எறும்பை உதாரணமாகச் சொல்லுகிறதுண்டு. அப்படியே சிலந்தி முதலிய அற்ப பூச்சிகளையும் சொல்லலாம்.

சிலந்தியின் குணம் அதிகமாய் விரும்பத்தக்கதா யிராவிட்டாலும், அது விடாமுயற்சிக்கு ஒப்பற்ற உதாரணமா யிருக்கின்றது. தான் கட்டிய கூட்டை யாராவது கலைத்துவிடுவார்களானால் அது மறுபடியும் கட்டிக்கொள்ளும். அது வேண்டுமென்று அதிக விருப்பமாய்க் கட்டி, வேண்டிய இரைகளும் சேகரித்துவைத்த கூடுகள் எத்தனைதரந்தான் அழிக்கப்படட்டும்; அது சிறிதும் அதைரியப்படாமல் அத்தனை தரமும் அடுத்தடுத்துக் கட்டும். முன்பு ஸ்காத்லந்து தேசத்து அரசராயிருந்த ராபர்ட்டு ப்ரூஸ் என்பவர் பல தடவைகளிலும் பகைவரண்டை தோல்வியடைந்து நிராசையாய் ஒரு மூலையில் உட்கார்ந்து யோசனை பண்ணிக்கொண்டிருக்கையில், அங்கே ஒரு சிலந்தி கூடுகட்டுவதற்குத் தொடங்குவதைக் கண்டார். அந்தச் சிலந்தி தான் கருதிய ஓரிடத்தில் தன் நூலை ஒட்டவைக்கப் பலதரமும் முயன்றது. பலதரமும் ஏமாந்துபோயிற்று. தோல்வியடைய அடைய அது தைரியம் குலையாமல் மேன்மேலும் விடாமல் முயன்று கடைசியாய்க் காரியசித்தி பெற்றது. அதனால் நற்புத்தி

---

உள்ள பொழுதைப்போக்க எவ்வளவோ வழிகள், உல்லாஸங்கள், ஸமுத்திரக் காட்சிகள், நாடக தமாஷ்கள் எல்லாம் ஏற்படுகின்றன. எட்டிப் போய் விட்ட அந்த அரை நிமிஷத்தை இழுத்துப்பிடிக்க எவராலும் முடிகிறதில்லை

போதிக்கப்பட்டவராய் அந்த ராஜா உடனே உற்சாகமாய் எழுந்து மறுபடியும் போராடி ஜெயம் பெற்ருர். இப்படி ஒரு ராஜாவுக்குக் கூட சிலந்திப்பூச்சியினுல் விடாமுயற்சியின் பெருமை இத்தன்மைய தென்று தெரியவந்தது.

ஆதலின், நாம் வருத்தங்களைக் கண்டு பின்வாங்கக்கூடாது. இந்தப் பாடம் வெகு கடினமா யிருக்கிறது; படிக்கக்கூடவில்லை யென்று நாம் ஒருபோதும் குறைகூறக்கூடாது. நாம் ஏதாவது ஒரு காரியம் செய்யவேண்டியதா யிருந்தால், நமக்குச் செய்ய நேர மில்லை யென்ருவது, வேலைசெய்து உடம்பு ஒய்ந்து போயிருக்கிற தென்ருவது நாம் சொல்லக்கூடாது. சிலந்திப்பூச்சி வேலைசெய்து ஒருபோதும் அலுத்துப் போகவில்லை யென்றும், எவ்வளவு கடின மான வேலையா யிருந்தாலும் அதைக்கண்டு எறும்பு பின்வாங்க வில்லையென்றும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். எவ்வளவு பளு வான சுமையா யிருந்தாலும் அதை எறும்பு தன் சிறு தும்பியால் இழுத்துத் தள்ளிக்கொண்டு போகும். தன் கூடு எத்தனைதரம் அழிந்துபோனுலும் சிலந்தி குறைகூருமல் விடாமுயற்சியாய் வேறொன்று கட்டிக்கொண்டே யிருக்கும். நாமும் நமது உழைப்பி லும் இந்தச் சிறு பூச்சிகளவ்வளவு விவேகமுள்ளவர்களாய் இருக் கக்கடவோம். நாம் பலதரமும் முயன்று சோர்ந்துபோகும்பொழுது சிலந்தியின் சலியா உழைப்பை நினைத்துக் கொள்வோமானுல், ராபர்ட்டு ப்ரூஸ் வேந்தரைப்போல நாமும் நமது காரியத்தில் புதிய சுறுசுறுப்புகொண்டு வெற்றி பெற்றுவிடலாம். வருந்தினுல் வராத தொன்றில்லை. முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்.

## மரங்கள் நடும் நற்செய்கை.

ஓராசாலும் வேம்பும் ஒரு பத்துபுளியும் மூன்றும்
சீருடன் விளாவும் வில்வம் மூன்றுடன் சிறந்தநெல்லி
பேர்பெரும் ஐந்து தேங்காய் பெருகுமா ஐந்தும்
யார்பயிர் செய்தா லவர்க்கில்லை நரகந்தானே.

ஒவ்வொரு மனிதனும் கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷத் தில் 1–அரசு, 1–ஆல், 1–வேலம், 3–வில்வம், 3–வௌாம், 3–நெல்லி, 10–புளி, 5–மா, 5–தென்னை ஆகிய இவ் வொன்பதுவித புண்ணிய மரங்களை நட்டுக் காப்பாற்றி னுல் நரகம் இல்லை யென்றும், இவ்வாறே வருஷா வருஷம் நட்டுக் காப்பாற்ற வேண்டுமென்றும் நீதிசாரமும், கார்த் திகைபுராணமும் தெரிவித்திருக்கிறது. இது ஆழ்ந்தகருத்து.

# சென்றுபோன நாட்கள்

## ஸ்ரீமான் ஸி. செல்வராஜ முதலியார்.
## ஸ்ரீமான் ஜீவரத்தின முதலியார்.



உண்மையான தேச பக்தர்களாயும், மேதாவிகளாயும் இருந்தும், அதிகமான பிரபலமில்லாமல் திரைக்குள் சென்றுவிட்ட பெரியோர்களைப்பற்றியே நாம் பெரிதும் பேசி வருகின்றோம். 1907-ம் வருஷத்திய பத்திரிகாவுலகில் ஸ்ரீமான் ஸி. செல்வராஜ முதலியாரின் பெயர் மிகவும் பிரபலமாயிருந்தது. எத்தனையோ சபைகளில் பேசியவர். சென்னையில் அவ்வருஷத்தில் (Nationalist) "நாஷனலிஸ்ட்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையொன்றை மிகவும் சிறப்பாக சித்திரப் படங்களுடன் நடத்திவந்தார். அத்துடன் தமிழில் "வந்தேமாதரம்" என்ற வாரம் மும்முறைப் பத்திரிகையையும் படங்களுடன் வெளியிட்டார். அப்பத்திரிகைக்கு ஆசிரியராய் ஸ்ரீமான் ஜீவரத்தின முதலியார் அமர்ந்தார். இப்பெரியார் இதற்கு முன் என்ன தொழில் செய்துகொண்டிருந்தாரோ தெரியவில்லை. ஆகா! அவரது தமிழ் நடை கற்கண்டுதான். வெகு சுருக்கமான நடை. அந்த சுருக்கத்திலேயே வேண்டிய தெளிவும் இருக்கும். அனுபவமணிகள் இடையிடையே வந்து கலக்கும். எவ்வளவு நேரம்படித்தாலும் தெவிட்டாது. அந்த நடை ஒரு தனி அழகும் மதுரமும் மிகுந்தது. அவருக்கு வயதோ 50-க்கு இருக்கும். "வந்தேமாதரம்" பத்திரிகை வெகு சிறப்புடன் நடைபெற்றது. ஆனால், ஒரு வருஷத்திற்குள் "நாஷனலிஸ்ட்", "வந்தேமாதரம்" இவை இரண்டும் நின்றுபோயின. காரணம் அப்போதிருந்த உக்கிரக நிலையே. அதன் பின்னர் ஸ்ரீமான் ஜீவரத்தின முதலியார் தமது தமிழ் நடையை எந்நூலில் அலங்கரித்தாரென்பது தெரியவில்லை. ஒருதரம் சந்தித்தவர்களை மறுதரம் பார்க்க முடியாமற் போய் விடுகிற துர்ப்பாக்கியம் மனிதனிடமிருக்கிறது. "வந்தேமாதரம்" பத்திரிகையில் சனிக்கிழமை தினம் தலையங்கம் எழுதும் வேலை நமக்கு அடிக்கடி கொடுக்கப்பட்டது. ஒரு தினம் நாம் மிக்க விசாரமாய் இருப்பதால் எழுதமுடியாதென்று கூறிவிட, ஜீவரத்தின முதலியார் வெகு பிரியமாய் நமது பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு,—"அந்த உங்களின் விசாரத்தைப் பாரதமாதாவைப் பற்றிய விசாரமாகத் திருப்பி மாற்றி ஒரு தலையங்கம் எழுதக்கூடாதா?"—என்று வேண்டினார். தக்ஷணமே நமது மனதில் சரசரவென்று விஷயங்கள் தோன்றிக் கொள்ளவும் உடனே தலையங்கம் எழுதி முடித்து அவரிடம் தந்துவிட்டு, அவர் எவ்வளவு பக்குவமாய் நம்மைத் தூண்டிவிட்டு வேலை வாங்கினாரென்று வியப்புற்று நின்றோம். அத்தகைய மேதாவியின் பிந்திய ஜீவியம் தெரிய முடியவில்லை. ஸ்ரீமான் செல்வராஜ முதலியார் அதன் பிறகு லாகூரில் "பஞ்சாபி"

---

தாங்கள் இழந்துபோன வேலையைச் சிலர் தாங்களே விட்டு விலகியதாயும், ராஜிநாமா செய்துவிட்டதாயும் பெருமையாய்ச் சொல்லி அளப்பார்கள்

பத்திரிகையின் உதவி ஆசிரியராயும், பிறகு சென்னையில் தினசரியான "மதராஸ் ஸ்டாண்டர்டு" பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். செல்வராஜு முதலியார் ஒரு பி. ஏ. பட்டதாரியல்ல. ஆனால், பல பி. ஏ.-க்கள் அவரிடம் கற்றுக்குட்டிகளாய்க் காத்துநின்றனர். சிநேக குணம் உள்ளவர். மகா கல்விமான். தற்போது அவர் எங்கு இருக்கிறாரென்பது தெரியவில்லை. இவ்விருவரும் ஒருகாலத்திற் செய்த தேசத்தொண்டானது அக்காலத்திற்கு எவ்வளவோ அவசியமானதாக இருந்தது.

---




பத்திராசிரியர்களுள் சிறந்த ஐயா, 20-4-1929.

* * * சென்ற வருடாந்தக் கூட்டத்தில் தங்களை எமது சபையின் பரிபாலகராக நியமிக்கப்பட்டு ஏகமனதுடன் தேறியதால் இந்த ஸ்தானத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்றே நம்புகிறேன். எமது மாதாந்தரக் கூட்டத்தில் தங்களது அபிப்பிராயத்தையும், தங்களது பதில் கடிதத்தையும் ஸமர்ப்பிக்கவேண்டுமாதலால் தயைசெய்து தாமதியாமல் தக்க பதில் எழுத வேண்டுகிறேன். * * சபையின் வருடாந்தக் கூட்டத்தில் ஸ்ரீ முத்து ஆச்சாரி யவர்களை ஆதரணைக் கர்த்தராக நியமிக்க, அவர் அன்போடு ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டனர். நமது "அமிர்த குணபோதினி"யும், "பிரஜாநுகூல"னும் தாங்களும் எல்லா நலமும் பெற்றோங்க இறைவன் அருள் பாலிப்பாராக.

மு. வடிவேல் பத்தர்,
கௌரவ காரியதரிசி "சரஸ்வதி சபை", டர்பன், நெட்டால்.

[இது வெகு தூரநாட்டினின்றும் வந்துள்ள கடிதமாதலின் பத்திரிகையில் பதிப்பிக்கின்றோம். நம்மைப் பரிபாலகராக நியமித்துக்கொண்ட பாரத சந்தானங்களின் அன்புக்கு நமது வந்தனங்களைத் தெரிவிக்கின்றோம். இதையொட்டி நாம் குறிப்பிடவேண்டியதொன்றுளது. சபை அல்லது சங்கத்துக்கே வராமலும், அது எவ்விதம் நடைபெறுகிறதென்பதையே தெரியாமலும் இருக்கிற சில பெரிய மனிதர்களைத் தலைவர்களாகவும், அக்கிராஸனாதிபதிகளாகவும், பரிபாலகர்களாகவும் சில இடங்களில் நியமித்துக் கொள்கின்றனர். இந்தப் பெரிய தலைகள் வந்துகவனிக்கும் வேலை எதுவுமேயில்லை. அவர்களும் ஒன்றும் செய்வதில்லை. பெயருக்குமட்டும் கௌரவ ஸ்தானங்களை ஏற்று நிற்பதன்றி, இவர்களால் ஒரு உழைப்பும் சபைக்குக் கிடைப்பதில்லை. சில லாட்டரி சீட்டுகளில் இவ்விதமே பெரிய மனிதர்கள் தலைமையாயிருந்து நடத்துவதாக அவர்களின் பெயரை வீணுக்குச் சேர்க்கப்படுகின்றன. இந்த வீண் பொம்மைகளைத் தலைமை ஸ்தானத்தில் நியமிப்பதைவிட, நன்கு உழைப்பவர்களைத் தேர்ந்தெடுப்பது சிலாக்கியமன்றோ? வெகு தூரதேசவாசியாகிய நாமும் ஒரு வீண் பொம்மைபோலவே இச்சபைக்கு ஒருமுறைகூட வந்து போகாத நிலையில் அத்தனை தூரத்திலுள்ளோமென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ப-ர்.]

# மௌன விடை சக்கரம்

உன்னிடம் பேசியவர்களுக்கும், உன்னைக் கேட்டவர்களுக்கும் நீ சொல்லும் விடையாக இந்த "விடைசக்கரத்"திலுள்ள ஒரு எண்ணைக் காட்டுக. சக்கரத்தில் விடை எண் இல்லாதபோது மௌன மாகிவிடுக. அதற்கு மெதுவாகப் பிறகு பதில் சொல்லலாமென்பது கருத்து.

| | | |
|---|---|---|
| 1. சுகமா? வா | 18. பிசகு உன்மீதே | 35. நிச்சயமில்லை |
| 2. பொறு, சகி | 19. அது சரி இல்லை | 36. இன்னும் யோசி |
| 3. ஆமாம், உண்டு | 20. ஈசன் செயல் | 37. ஆகா அப்படியே |
| 4. அஞ்சேல் | 21. பேச நேரமில்லை | 38. லாபந்தான் |
| 5. போய் வா | 22. கால பேதமே | 39. நஷ்டமுமுண்டு. |
| 6. முடியுமா? | 23. என் ஆத்திரம் | 40. மிகு வறுமை |
| 7. முடியாது | 24. நல்ல நாளல்ல | 41. யோசித்துச் சொல்லுகிறேன் |
| 8. சம்மதமே | 25. உதவுகிறேன் | |
| 9. சரிதான் | 26. என்பாவம் விடா | 42. என்னை நம்பு |
| 10. நாளை வா | 27. கூடுமோ யாதோ | 43. கோள்வேண்டா |
| 11. நம்பி ஏமாறுதே | 28. சினம் வேண்டா | 44. நீ மண் குதிரை |
| 12. பணமில்லை | 29. இரவல் முடியா | 45. கூட வருகிருயா |
| 13. கடனில்லை | 30. அது அன்பினல் | 46. அது எப்போது |
| 14. இது சமய உதவி | 31. ஏமாற்றவா? | 47. எல்லாம் கபடம் |
| 15. தருவதெப்போ | 32. வீண் கலகமேன் | 48. அது அந்த நாள் |
| 16. குறைத்து சொல் | 33. பழிவாங்குவேன் | 49. அது பொறுமை |
| 17. விலை அதிகம் | 34. பயணம் உறுதி | 50. அது அதிர்ஷ்டம் |

**உதாரணம் :**—வெகு யோசனையுடன் எழுதிக்கொண்டிருக்கும் சமயத்திலும், தபாலுக்கு அவசரமாய் வேலை செய்துகொண்டிருக்கும்போதும் ஒருவன் பேசுவதற்காகப் பக்கத்தில் வந்து உட்காருகிறுன். அவனுக்கு 21-வது எண்ணைக் காட்டுக. இவ்விதமே புஸ்தக இரவல் கேட்டுத் தந்திரமாக அதைக் கொண்டுபோய்விட நினைக்கிறவனுக்கு 29-ஐயும், ஊர் போய் பணம் அனுப்பிவிடுகிறேன், ரயிலுக்குச்செலவுக்கு இல்லை யென்பவனுக்கு 13-ஐயும், ஒரு கடன் பத்திரத்தில் ஜாமீன் கையெழுத்து போடும்படி கெஞ்சுபவனுக்கு 41-ஐயும், பிரிந்து வேறு குடும்பமாகப் போய்விடுகிறே னென்பவனுக்கும், கோபக் கடிதத்தை யனுப்புகிறே னென்பவனுக்கும் 36-ஐயும், அவர்கள் உன்மீது எவ்வளவோ அன்பா யிருந்தார்களே என்று கேட்பவனுக்கு 48-ஐயும், அவர் வியாபாரம் இவ்வளவு பெருகியது எப்படி என்பவனுக்கு 50-ஐயும், அவன் உன் காரியத்தில் அவ்வளவு சிரத்தையாயிருப்பானேன்—அவன் இங்கு அடிக்கடி வர ஏன் இடந்தருகிருய்—என்பவனுக்கு 30-ஐயும், இரண்டு பெண்டாட்டிக்காரன் தன் திண்டாட்டத்தை வந்து சொல்லுகையில் 18-ஐயும், உன் நன்றியை மறந்து துரோகிகளானோர் நலிவதைப்பற்றி உன்னிடம் வந்து சொல்பவனுக்கு 26-ஐயும், காட்டிவிட்டு வாய்திறவாமல் மௌனமாகிவிடுக. தானகவே அவன் உன் பதிலைத் தெரிந்துகொண்டு எழுந்து போய்விடுவான்.

# மூளைக்கு வேலை.

## I

## விடுகதை வினா?

அந்தமுள்ள புவியிலொரு மரத்தின் பேரும்
அலைகடலில் வாழுமொரு சீவன் பேரும்
விந்தை பெரு பட்டணம்பேர் வெகுகாலப்பேரும்
விளங்குமொரு பிள்ளைபேர் மெல்லியாள் பேரும்
சந்ததமு மிந்தவகை ஆறுங்கூட்டி
நற்றமிழால் நடுவெழுத்தைச் சார்ந்து பார்க்க
சுந்தரஞ்சேர் ஸ்ரீவைகுண்டந் தன்னில் வாழும்
தூய ரங்கநாதனென்று செப்பலாமே.

இந்த விருத்தத்தில் கேட்டுள்ள ஆறு பதங்களும் மூன்று எழுத்துள்ள பதங்களா யிருக்க வேண்டும். அந்தப் பதங்களின் நடு யெழுத்துகளை முதலிலிருந்து முறையே வாசித்தால் "ரங்கநாதர்" என்று ஆகும்.

R. இராமச்சந்திரன்.

## II

## எழுத்து மாற்றுச் சொற்கள்.

1. பூ த ந் ச ண கா ர் தி ன் ச ம ர ந்
2. த தி த ந் போ ம் ரோ ய் பி ச ர
3. ம ர தி அ மா ய் ஞே ய ம்
4. ச ஞ் வி த ர ம நோ ரி ச
5. மா த து வே கு த மி வ ட

## III

வைகாசி மாத ஸஞ்சிகையில் 105-ம் பக்கம் வெளிவந்துள்ள விடுகதை வினவுக்கு "பாகவதம்" என்பது விடை.

105-ம் பக்கமுள்ள எழுத்து மாற்றுச் சொற்களின் விடை:—

1. கானரஸ கோகிலம். 2. தேவமட மின்னர். 3. சடைமுடி மாவுரி ராமன். 4. சீதா ராம நாதன். 5. சம்பந்த நாயகன்.

## IV

சந்தா நெம்பர் 5984. தி. ஆ. மூக்கைய பிள்ளை அவர்கள் 106-ம் பக்கமுள்ள விடுகதை வினவில் 5-வதில் கதம் என்பது நூரம் என ஆகாதென்றும், காதம் வேறு கதம் வேறு என்றும், ஆதலின் பீமன் கையிலுள்ள ஒரு ஆயுதம் என்று கதம் என்பதைக் குறிப்பிடவேண்டுமென்றும் எழுதுகிறார்.

---

ஒரு முக்கிய சங்கதியைப் பேசவந்து சில விஷயங்கள் சொல்லுகிறார்கள் பிறகு என்னவோ அவசரமாய்ப் பாதியில் எழுந்துபோய் விடுகிறார்கள்!

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

REGISTERED TRADE MARK

# ஹா ! கோணலே ! மனவேறுபாடே !!



நீ மூன்று உலகத்தையுமே முழுப் பூசை கொண்ட ஒரு மாயாவி சாமியார். மனவேறுபாடாகிய நீ மட்டும் ஒருவனிடம் தோன்றிக்கொண்டாயானல், அவனே இன்னொருவனிடம் தன் வீட்டைக் "குப்பைக்காடு" என்று கேவலப்படுத்தி வீட்டிலுள்ளவர்களேயும் பழித்துக் காட்டத் தொடங்கிக்கொள்வான். ஹா ! மனவேறுபாடே ! நீ நன்மை தின்மை இரண்டிலும் வந்து நிற்கிருய். வஞ்சகம், மோசம், பித்தலாட்டங்களுக்கும் வழி தெரிவிக்கிருய் ! சுயநலத்தையும் பெருக்குகிருய் ! சண்டை கலகங்களேயும் நாடவைக்கிருய் ! பிரிக்கிருய் ! ஜன்மப் பகை யாக்குகிருய் ! ஆவதும் உன்னுலே ! அழிவதும் உன்னுலே ! புது உறவுகளும் உன்னுலே ! பகைகளும் உன்னுலே ! சச்சரவுகளும் உன்னுலே ! புதுக் குடித்தனங்களும் உன்னுலே! கொலே, பழி பாவங்களும் உன்னுலே! புண்ணியமும் மோக்ஷமும் உன்னுலே ! சோதனைகளும் நரகமும் உன்னுலே ! நாசம்—மோசம்—நேசம்— பாசம்— தோஷம் யாவுமே உன்னுலே !

***

தன் கணவனையன்றி மற்றவரை நினையாத பதிவிரதையைப் போலத் தன் வழிபடு கடவுளை யன்றி வேறெந்த மூர்த்தியையும் வணங்காத ஒருவனது உறுதியும் அவன் தன்னிலே கொண்ட மனவேறுபாட்டின் ஒருவித பக்குவம்தான். சிலர் எல்லா சாமிகட்கும் ஒரு கும்பிடு போட்டுப் பேதம் கருதாதிருப்பதும் அவர்கள் தம்மளவில் கொண்ட ஒருவித ஸமரஸ மனே வேறுபாடுதான். தங்களின் ஜீவனர்த்த வருமானத்திற்காகவே கோயிலேச் சுற்றித் திரிவது இன்னெருவித மனேவேறுபாடு. சிலர் பிற மததூஷணைகளில் பெரிய புலி ! அதை ஒரு மகா புண்ணியம் என மதிப்பவர்கள் ; அந்த வகை எண்ணத்துடனேயே வேற்று மதஸ்தர்களும் தங்கள் மதத்தைப் பழிக்கத்தொடங்கினல் உடனே கர்ஜிப்பார்கள் ! இது ஒரு மனேவேறுபாடு ! வேதாந்த நூல்களே அடுக்கி வைத்துக்கொண்டு கடைசிவரையும் படிக்காமலே போவதும் ஒரு வித மனே வேறுபாடு !

---

எவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் சகித்துக்கொண்டு சிவனே ! என்று தன் வயிற்றுப் பிழைப்புக்கான வேலையைச்செய்து தீரவேண்டியிருக்கிறது.

இனி, குடும்பத்திலுண்டாகும் மனோ வேறுபாடுகளோ அப்பப்பா! போதும் போதும்! உழைத்து நாலு காசு கொண்டுவரக்கூடியவன் ஒரு குடும்பத்திலிருந்தால், எல்லாம் உன்னைச் சேர்ந்தவர்கள் தானே, நீ வேண்டாமென்றால் அவர்களுக்குத் திக்கு யார் என்று அவனைத் தட்டிக் கொடுத்து எல்லா செலவுகளும் செய்யவைத்து, நெடுங்காலம் வரையில் ஒரு காசும் சேர்க்க முடியாமலே போய் அந்த உழைப்புக்காரன் திண்டாடும்போது, அவன் மனைவிமீது ஏற்பட்ட துவேஷத்தை அவனிடம் காட்டிக்கொண்டு அவனை அடியோடு வெறுத்து விரோதிக்க ஆரம்பிக்கிறார்கள். இவர்களோடு அவன் உப்பைத் தின்றவர்களும் சேர்ந்து கொள்கிறார்கள். அவனை நாயினுங் கேடாக வெகு கேவலப்படுத்தி விடுகிறார்கள்! உழைத்துக் களைத்து இளைத்த அவனோ தன் மானம் சிந்தி மண்ணுவதை நோக்கிக் கண்ணீர் விடுகிறான்! இப்படி இவனிடத்தில் நன்றி காட்டாமற் போவதும் துவேஷ புத்தியினாலுண்டான ஒரு மனோ வேறுபாடுதானே! இதிலிருந்தும் விழித்துக்கொண்ட அந்த உழைப்பாளி கையில் ஒரு காசு தானும் நிற்காமல் செலவிட்டபடியே இருந்தால், தன்னை நம்பிய குழந்தைகள் போகும் கதி யென்னவென்று யோசிக்கத் தலைப்பட்டு, அதுமுதல் கொஞ்சம் தூர ஒதுங்கியவனாய் நாலு காசு மிச்சம் சேர்க்க ஆரம்பிக்கிறான். இது திடீரென்று தோன்றிய விழித்துக்கொண்ட மனோ வேறுபாடு! இப்படி அவன் தூரப்போய்விடவே, முன்பு எதிர்த்துக்கொண்டவர்கள் ஆசாமி ஜாக்கிரதையாய் விட்டானென்று தெரிந்துகொண்டு இப்போது அவனுக்கு வெகு நல்ல மனிதர்களாகக் காட்ட வருகிறார்கள்! உழைப்பாளிகொண்ட புது மனோ வேறுபாடு இதிலெல்லாம் மயங்காமலே போய்விடுகிறது. இதில் வஞ்சகரெவர், சத்தியவந்தரெவர் என்பதைக் கடவுள் அறியாமலா போகிறார்? அறிந்தே அததற்குத் தக்கவாறு படியளந்துவிடுகிறார். இது ஒரு வேடிக்கை!

***

நல்லது நினைத்து செய்யப்போய் மாட்டிக்கொள்ளுகிற கதைகள் அநேகமுண்டு. விகடன் ஒரு கதைமட்டும் இங்கே அவிழ்க்கிறேன். கையில் காசற்ற ஆண்டியாய் ஒரு கிழவி சாகிறாள். அவளது அந்தியத்தில் ஆதரித்தவனின் கையில் அந்த சமயம் வரவு ஏதும் இல்லாதுபோக, தன்னிடம் இருந்த ரூபாயை முக்கியஸ்தர் கையில் தந்துவிடுகிறான். இதனிடையில் சொள்ளி வைப்பது யார் என்ற கேள்வி புறப்படுகிறது. அவரவர்கள் தந்திரசாலிகளாய் விலகிவிடுவதில், அவர்களுக்குள்ள யோசனைப்புத்திகள் ரூபாயைக் கொடுத்தவனுக்கு இல்லாமல், தன் பேதமைத்தனத்தால் தான் கொள்ளி வைப்பதாக ஒப்புக்கொள்கிறான். பிறகு இருக்கிறதையா கதை! கருமாதி நாள் வருகிறது. எல்லா செலவும் தன்னிடம் ஒரு காசைப் பெற்று மற்றதெல்லாம் தானேசெய்த அந்த முக்கியஸ்தரே இப்போதும் செய்வார் என்று நம்பிவிடுகிறான். பந்துக்கள் கூடிவிடுகின்றனர். போன கிழவியால் வளர்க்கப்பட்டவன் வருகிறான். முக்கியஸ்தர் அவனிடம் என் கையில் காசுஇல்லை, எவன் கொள்ளி வைத்தானோ அவன் தான் செலவு

---

இல்லாத ஏழைக்கு இரவில் முனிஸிபல் விளக்கே வெளிச்சம் காட்டும் கருவி. அவன் டைனமோடார்ச்சு லைட் வாங்கி அந்த வெளிச்சத்தில் நடந்து ஒய்யாரமாய்ச் செல்ல பணத்திற்கு எங்கே போவான்? யார் தருவார்?

செய்யவேணும் என்று கையை விரிக்கிறார். அப்போதுதான் இந்தப் பிச்சாண்டிக்கு-தான் வலிய கொள்ளி வைக்கப்போனதில் வந்த அவதி இவ்வளவென்று தெரிகிறது! பந்துக்கள் முன்னால் ஒரு உத்தமன் அவமானப்பட்டுவிடுகிறான்! இப்படியே நல்லது செய்யப் போய் திட்டு வாங்குவதற்கும், அகப்பட்டுக்கொள்வதற்கும் காரணம் அடுத்திருப்பவர்கள் அநியாயமாய்ப் பேதப்பட்டுப் போன மனோ வேறு பாடுதான்!

***

இன்னும் குடும்பங்களிலே சிலர் தங்களின் மனோ வேறுபாட்டைக் குறித்த சில சமயங்களில் மட்டுமே காண்பித்துவிட்டு, பிறகு அதை மறைத்துக்கொண்டுகுலாவும் விஸ்வாசக் கொக்குகளாய் இருக்கிறார்கள்! இவர்கள் ஆபத்தான காலங்களில் மெதுவாக நழுவி வேடிக்கை பார்ப்பவர்கள்தான். பிழைப்பு சம்பந்தமான கவலையால் ஏங்குவோரின் மனோ வேறுபாடு ஒருவிதமாக, பிழைப்பு சம்பந்தப்படாத—எல்லா சொத்து முள்ளவனும் தனது கவலைகளால் அதற்கு மேற்பட்ட மனோ வேறுபாடுகளில் உருகுகிறான். இது கவலைகளைத் தானே வலிய உற்பத்தி செய்து தருவித்துக்கொள்ளுகிற பேத புத்திக்காரனின் மனோவேறுபாடு! இவன் சாதாரணமாக வயிற்றைக் கலக்கினாலும் வாந்தி வந்தாலும் எவரோ வீட்டில் தனக்கு மருந்து வைத்துவிட்டார்களென்பான். வாந்தி எடுத்தது பச்சை நிறமா யிருக்கிறதென்பான். இது சந்தேக மனோவேறுபாடு! இப்படியே தன் மனைவியின் கற்பைச் சந்தேகிக்கிற மனோவேறுபாடும் வெகு பொல்லாங்குகளைச் செய்துவிடுகிறதப்பா.

மனோ வேறுபாடுதான் மனஸ்தாபத்துக்கு மூல காரணம். அந்த வேறுபாட்டால் மனதைக் கெடுத்துக் கொள்ளாமல் அடக்குபவரே அதிக காரியங்களைச் செய்யவல்லவர். ஆனால் இப்படி அடக்குவது மிகவும் கடினமே. அநுபவசாலிகளான சிலருக்கு மட்டுமே அது சாத்தியம். அவர்கள் தான் எந்த மனஸ்தாபங்களிலும் தங்களின் மனம் வேறுபாடு கொள்ளாத படி செய்துகொண்டு வெகு நிதானமாய்ச் சகித்துச் செல்லுகிறார்கள்.

***

நெடுந்தூரத்தில் உள்ள ஒருவன் தான், தன் மனைவி தனது பக்கத்தி லில்லாமல் ஒண்டிமரமாய் உறங்குகிறானென்றால், அவன் உறங்குகிற வீட்டிலேயே மனைவியைப் பக்கத்தில் வைத்துக்கொண் டிருப்பவனும் ஒண்டிமரமாய்த் தனிப்படுக்கையில் உறங்குவானேன்? முந்தியவன் பிழைப்புக் கவலையால் மனோவேறுபாடு பெற்று வெளியூர் வந்து உறங்குகிறான். பிந்தியவனோ தன் மனைவியோடு ஒரு பெருஞ் சண்டைபோட்டுவிட்டு அந்தக் கோபத்தாலுண்டான மனோ வேறுபாட்டால் இப்படி ஒண்டி மரமாய் உறங்கப் பார்க்கிறான்!

***

மனோ வேறுபாட்டால்தான் குடும்பப் பிரிவினை! மனோ வேறுபாட்டால் தான் மாமி மருகிகள் ஜென்மப் பகையாவது! மனோ வேறுபாட்டால்தான் மாற்றாந்தாய் கொடுமை! மனோ வேறுபாட்டால்தான் பெரியப்பனும் சிற்றப்பனும் சொந்த அப்பன்போல் இல்லாமற் போவது! கடன்காரனுக்குக் கடுக்கா காண்பிப்பதும், மோசம் செய்ய நினைக்கிறதும். மனோ வேறு

---

இந்த சம்பளம் போதாதா என்றால்—காளைக்குப் பாயிற்படுத்து வேலைக்குப் போகாவிடில் குடும்பத்தை ஸம்ரக்ஷிக்க வேண்டுமே. அதற்கு வழியாய் அப்போது உதவும்படி யிருக்கவே அதிக சம்பளம் கெஞ்சிக் கேட்பது.

பாட்டால்தான். மூத்தவன்பேருக்கு எழுதிய சொத்துக்களை இளையவன் பேருக்கு மாற்றுவதற்கும் மனோவேறு பாடேகாரணம். கேட்டபடிமுதலாளி சம்பளத்தை உயர்த்துவதும் அவனும் பிழைக்கட்டுமென்ற நல்ல எண்ணத் தாலுண்டான மனோவேறுபாடுதான். தன் பந்துக்கள், தூர பந்துக்கள் என்று பேதம் நினைப்பதற்கும் மனோ வேறுபாடே பெருந் தூண்டுதலாகி றது. நாளை பணம் தருவதாகச் சொன்னவன் பிறகு இல்லையென்று கையை விரிப்பதும் அவன் நெஞ்சிலே உண்டான புதிய மனோ வேறுபாட் டால்தான்.

***

கண் 'ஆப்ரேஷ'னுக்கு 150-ரூபா பீஸ் பேசி, பணமும் முழுதும் பெற் றுக்கொண்டு ஒரு நாள் குறிப்பிட்டு அன்று வரும்படி டாக்டர் சொல்லுகி ருர். ஐயோ! அன்று நோயாளியின் மருமகள் கண்மூடிவிட, அந்த விவ ரத்தை டாக்டருக்குச் சொல்லி யனுப்பிவிட்டு, மூன்ரும் நாள் நோயாளி டாக்டரிடம் வருகிருன். டாக்டரோ நோயாளியை வெளியில் தள்ளிவிட்டு, "உன் மருமகள் இறந்து விட்டதற்காக நீயும் இறக்கவில்லையே, உயிருடன் தானே இருக்கிருய், ஏன் அன்றே வரவில்லை, நான் உன்னைப் பார்க்கமாட்டேன்" என்று கதவை மூடிக்கொள்கிருர். சில டாக்டர்கள் இப்பேர்ப்பட்ட கல் நெஞ்சுடையவர் கள். கர்மவசத்தால்தான் அவர்களி டம் போக நேருகிறது. இது அதிக வித்தையினுடையவும், அதிகபிரபலம், அதிக வருமானம் இவைகளினுடைய வும் பெருமையால் ஏற்பட்ட மனோ வேறுபாடு!

வீட்டுக்கு வந்திருக்கும் விருந் தாளி எந்த கலக சச்சரவிலும் சம்பந் தப்படாமல் எல்லார்க்கும் சமாதானம் சொல்லி எங்கும் நல்லவனு யிருந்து விட்டுச் சென்றுவிடப் பார்க்கிருன். இது அவனுடைய தந்திரமான மனோ வேறுபாடு. இவனைத் தனது அத்யந்த ஆப்தனுக நினைத்து உபசரிக்கிற அந்த வீட்டுக்காரனே இவனைத் தன் பக்க மிருந்து பேசும்படி விரும்புகிருன். இது இவனைத் தனக்கு அவ்வளவு சொந்தமாக நினைத்துவிட்ட கபடமில் லாததான மனோ வேறுபாடு. அதி கம் படித்துவிட்ட சிலருக்கு அவர் இவர் சொன்னதை மட்டுமே மேற் கோளாக எடுத்துக் காட்டத் தெரிகி றதே தவிர தனது சுயமான புத்தியு டன் அருமையான வாக்குகளை வெளி யில் கொட்டத் தெரிகிறதில்லை. இது சொந்த மூளையை உபயோகித்து விஷயத்தை விளக்குவதற்குச் சக்தி யில்லாத மனோ வேறுபாடு! நாடகத் தில் தொலைக்கிற ரூபாய்களுக்கு அரிசி வாங்கினுலும் இரண்டுநாட் பொழுது போகுமே யென்று நினைப்பவர்களு முண்டு. இது வயிற்றுக்கில்லாதவர் களின் மனோ வேறுபாடு! ஒரு தொழிற்சாலையில் வேலை வாங்குகிற வர்கள் அங்கு சிடுசிடுத்துக் கடுகடுத் தாலும், வெளியில் வந்தபிறகு வெகு அன்புடனேயே பேசுகிருர்கள். இது இடத்திற்கேற்ற குணத்தின் மனோ வேறுபாடு! கறவை மாட்டுக்கே அதிக போஷணை ஏற்படுவதுபோல, வீட் டிற்கு முதன்மையா யிருந்து சம்பா திக்கிறவனையே அதிக கவலையுடன் காப்பாற்றுகிருர்கள். இது அவன் தான் தங்களுக்குக் கதியென்று நம்பி யிருப்போரின் மனோ வேறுபாடு!

---

புது வருஷம் வந்தாலென்ன, பழைய வருஷம் போனுலென்ன? மனிதர் களுடைய துர்க்குணங்களும், பேராசையும், வீட்டுச் சண்டை கலகங்களும் அப்படியேதான் இருக்கின்றன. அவைகள் மாறுவதுமில்லை. கரைவதுமில்லை.

எவனிடம் கடன் வாங்கக்கூடா தென்றிருக்கிறுனே அவனிடமே கடன் கேட்டுப் பெறும்படி நேருவ தில்—இது வேறு கதியில்லாத நிர்ப் பந்தத்திஞலுண்டான மனே வேறு பாடு! கல்யாணப் பெண்ணும் மாப் பிள்ளையும் அவ்வளவு அழகுடன் புது மேனியாய் மாறுவதும்—அவர்க ளுக்குள் பொங்கி எழும்பும் சந்தோ ஷப் பூரிப்பிஞலுண்டாகிய மனே வேறுபாடு! தங்களின் எத்தனையோ ஊழல்களையும் அக்கிரமச் செயல்களை யும் தங்களுக்குள்ளே மறைத்துக் கொண்டு சிலர் வெளிக்கு வெகு யோக்கியமாய்க் காட்டுகிறுர்கள். இது கபடம்—மோசங்களிலே தேறிவிட்ட மனே வேறுபாடு! பொழுது விடிந்த தும் எங்கிருந்தோ ஒரு சின்ன சொல் மீறிக்கொண்டு புறப்படுகிறது; அதற் குப் பின்னே—நீ அப்படிச் சொன் ஞய், என்னை இப்படி நடத்திஞய்— என்ன தூக்கிக் கொடுத்துவிட்டது— என்கிற குறைபாடுகள் புறப்படுகிறது; இனி இதற்குப் பிறகு வாய்ச்சண்டை பிரமாதப்படுகிறது; மனஸ்தாபம் முற்றுகிறது. இது வீட்டுக்குள் ளிருந்து சண்டை பிடிக்கிறவர்களின் மனே வேறுபாடு! திடீரென்று சிலர் சம்சாரப் பற்றிலிருந்து விலகி கட வுள்மேல் தியானமாகிப் பக்திப் பர வசமாய் மாறுகிறுர்கள். இது பூர்வ சம்பந்தமிருந்து அந்தக் காலம் சந்தித் துக்கொண்டதாலுண்டான ஞான ஒளியின் மனே வேறுபாடு!

***

மனே வேறுபாடு கொண்டவர் கள் வாங்குகிற திட்டுகளுக்கும் குத் தல் சொற்களுக்கும் விகடன் கணக்கு சொல்லி முடியாது. அவனவன்— அவளவள் தங்களின் மனே வேறு பாட்டை நியாயமென்றே நினைக்கிருர் கள். நன்றியற்ற கூட்டத்துக்குச் செலவிட்டவன் விழித்துக்கொண்டு விலகிஞல், அதற்குப் பலர் வைதாலும் தன் செய்கை நியாயமென்றே அவ னுக்குப் படுகிறது. இன்னெருவன் மனே வேறுபாடு கொள்ளாதிருக்கும் போதே, கொண்டுவிட்டதாகப் பழி சுமத்துகிருர்கள்! "நீ தான் அன்னிய மனிதனைப் போய்விட்டாயே, உன் பெண்டாட்டி வார்த்தைதான் உனக் குப் பெரிதாய் இருக்கிறது" என்று குத்துகிருர்கள்! அதைக் கேட்கிற இவன் உன் வார்த்தையின்படியே நடந்து வந்தேனே தவிர, என்மனைவி வார்த்தையை ஒருநாளும் கேட்டதில் லையே என்று ஓலமிடுகிருன். இது ஒரு கண்ராவிச் சங்கதி. தெரிந்த பெண் என்று மார்பைத் தொட்டு விடுவதா? பிறகு விளையாட்டாய்த் தொட்டேன் என்ருல் அது சமாதான மாகுமா? தன்னுடைய புத்திக் குறை வான காரியத்துக்குத் தான் வருத்தப் படவேண்டியதை விட்டு,—அந்தப் பெண் தன் மார்பைத் தொட்டதற்கு இப்படிச் சண்டை போட்டாளே, அவள் எவ்வளவு மனே வேறுபாடு கொண்டவளப்பா,—என்று அப் பெண்ணைத் தூற்றுவது சரியா? ஒழுங்கு மீறி நடந்ததற்கு அந்தப் பெண் கண்டித்தால், அது ஞாயம் என்று உணருகிற புத்தி படைக்கா மல் அவளுடைய மனே வேறு அப்ப டிப் பேதமாய் பேசச்செய்தது என்று சாமர்த்தியமாய்ச் சொல்லுவதா ஒழு ங்கு? இப்படியே, ஒருவன் தன்மனைவி மிக்க கேவலமாய் நடத்தப்படுவதைச் சகியாது தன் வீட்டில் ஒரு வார்த்தை கேட்டுவிட்டால், அதற்கு அவன் மனே வேறுபாடுகொண்டு பேசிஞன் என்று அநியாயமாய் சபிக்கிறதா ஒழுங்கு?

---

ஒருவர் தமது மனக்கவலையை மற்றவர்களுக்காக விட்டுவிட முடியாது. ஆஞல் ஸந்தோஷத்தையோ தானே கொலை செய்துகொண்டு விடமுடியும்.

இன்று உறவோடு இருப்பவர்கள் நாளை பகைவராவதும், நேற்று நட்பாயிருந்தவர்கள் இன்று விரோதிகளாவதும், வீட்டுக்கு அடிக்கடி வந்து போனவர்கள் பிறகு எட்டிப் பாராமலே போய்விடுவதும், இன்னும் ஆயிரம் விபரீதங்களெல்லாம் இந்த மன வேறுபாட்டின் கோணல்களாலே தான்! இந்த மனோ வேறுபாடு தோன்றிக் கொண்டது முதல் ஒருவருக்கொருவர் ஒத்து இசைந்து ஒருமித்துப் போக இடங் கொடுப்பதே யில்லை. எங்கேரமும் கோரணிகள்தான்! கோணல்கள் தான்! ஆகவே, விகடனும் "ஆ! கோணலே! மன வேறுபாடே" என்று உரக்கக் கூவிக் கொண்டு உங்கள் முன்னாலே கொட்டுவதற்குக் கிட்டினேன். நீங்களும் இதை எட்டிப் பிடித்துக்கொண்டு மனோ வேறுபாடுகள் தோன்றாமலே காலத்தைக் கழித்துவிடும்படியாக ஆனவரைக் கும்முக்கி முக்கிப்பாருங்கள்! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

வைத்தியர் எதிரில் இல்லாவிட்டாலும், அவர் தந்த மருந்தை எறிந்து விடாமல் அவர் எதிரில் இருப்பது போல் எண்ணி உண்ணவேண்டியதாகிறது. இவ்விதமே எந்தத் தீய நினைவிலும் கடவுள் எதிரில் இருப்பதாகவே எண்ணி, பாவச் செயல்களுக்கு அஞ்சி விலகினால் எவ்வளவோ பரிசுத்தமுள்ளவர்களாவோம். கடவுளை மறந்து ரகசிய துர்ச்செயலினராய் ஆபாஸமாயுள்ள புத்திமான்களுக்குக் கணக்குண்டா?

## நன்மைக்காக உயிர் வாழ்.

நன்மைக்காக உயிர் வாழ்; ஆனால் நன்மையைப் போல் தோன்றி உன்னைத் தீமையாகிய படுகுழியில் வீழ்த்தக்கூடிய மாயவலைகளிடத்து எச்சரிக்கையாயிரு. உன்னுடைய நன்மையும் க்ஷேமமும் நீ உன் ஸகோதர மனிதர்களிடம் ஒற்றுமையாக நடந்துகொள்வதைப் பொறுத்திருக்கின்றது. ஜனங்களின் ஒற்றுமைக்குத் தீங்கு செய்யக்கூடியனவெல்லாம் தீமையாகும். எனவே, உனக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற நன்மையை நீ பாழாக்கிக்கொள்ளாதே.

ருஷ்யஞானி—டால்ஸ்டாய்.

---

என் அப்பா பதில் பேசவில்லை? உள்ள உண்மையைச் சொல்லும்போது அதைக் கேட்பவர்களுக்குப் பதில் பேச வாய் இன்றி உன்னைப்போன்ற உதட்டுறவுக்காரர்கள் இப்படித்தான் உம்மென்று மூடிக்கொள்ளுகிறார்கள்.



சாம—தான—பேத— தண்டம் என்கிற நான்கினால் ஒருவனை வசப்படுத்த முயலுவதைவிட, ஒயின்,—பீர்,—விஸ்கி,—பிராந்தி இந்நான்கினால் இன்னும் சுலபமாய் வசப்படுத்தலாமென்று மதுரைவீரசாமி கூறுகிறார்!

***

அழகான பெண்ணொருத்தியைக் காணும்போது ஏன் ஸகோதரமாகப் பாவித்து ஆநந்தப்படக்கூடாதென்று ஒருவர் கேட்டதற்கு, அந்த சமயத்தில்தான் தன் மனைவி நன்றாயில்லை யென்றும், தன் மனைவியைவிட அவள் மேன்மைப்பட்டவளென்றும் எண்ணிவிடுவதால், ஸகோதரியாக நினைக்க முடியாமற் போய்விடுகிறது என்று மற்றொருவர் பதில் சொன்னாராம்!

***

வந்த கடிதத்திற்குத் தான் பதில் எழுதப் போய் வீண் மனஸ்தாபமுண்டாகிறதென்று ஒருவர் சொல்ல, அதற்கு—அன்பு காணும் இடத்திற்கு மட்டும் கடிதம் எழுது; குற்றம் குறை பேசும் இடங்களுக்கு எதுவும் எழுதாமல் மௌனமாயிருந்துவிடு; அதுவே சமாதானத்துக்கு நல்லவழி யென்று விகடன் சொன்னானாம்!

***

கோட்சொல்லியின் கடிதத்தைப் படிக்காமலே திருப்பிவிடுவதிலுள்ள மேன்மை, அதைப் பிரித்துப் பார்ப்பதில் வராது என்று விகட சித்தாண்டி விளம்புகிறார்!

***

“அவன் ஏன் வீட்டுக்கு அடிக்கடி வருகிறான்? வராதிருக்கச் செய்” என்று மற்றொருவனுக்குச் சொல்லித் தூண்டி விடுகிறவனே, அவனை வீட்டுக்கு வரும்படி பல கடிதங்களாலும் வற்புறுத்தி வரப்பண்ணிவிட்டு, வெளிக்கு இப்படிப் பேசுகிறானென்று வஞ்சகரின் மனத்தை நன்கறிந்த உளவுகண்ட பூனையொன்று உரைக்கிறதாம்!

***

செலவுக்கில்லை யென்று மனைவி எழுதுகிற கடிதத்திற்கு மட்டும் உடனே பணம் அனுப்புகிற வீட்டுக்காரன், அந்த வீட்டிலிருந்தே மற்றவர்கள் எழுதுகிற கடிதத்துக்கு மட்டும் மௌனமாகிவிடுவதேன் என்று காமாக்ஷி கேட்டதற்கு—வீட்டுக்காரனைத் தவிர்த்து அவன் மனைவி மக்களுக்கு வேறு திக்குதிசையில்லை; அதனால் உடனே பணம் அனுப்பினான்; மற்றவர்களுக்கோ அவர்களைக் கவனிக்க மனுஷாளுண்டு; மேலும் இவனுக்கு சக்தியுமில்லை. அதனால் மௌனமானான் என்று மீனாக்ஷி பதில் சொன்னாளாம்!

## எக்காலக் கண்ணிகள்.

12. ஆராயினுஞ் சூழும்
 ஆபத்தில் கையை விட்டுப்
பாராதான் போலிருந்து
 பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

13. முழங்கசம் போடாடை சவுளி
 மூட்டை கண்டு நில்லாமல்
பழங் கந்தலைத் தைத்து
 பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

14. கோடாக் கொள்கை பூண்டு
 |பெருங்
துப்பல் துப்பலாக்கி இன்னம்
படாப் பாடு பட்டும்
 பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

15. சீராநஞ் செல்வம் வந்து
 சேர்ந்ததென்று காட்டாமல்
பாராவில் தொண்டு செய்து
 பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

**இப்படிச் சேர்க்கும்**
**பணம் விடியுமா?**



# ஆங்கில தமிழ்க்கடிதங்கள்



## Letter XVIII.

*From a Tenant to his Landlord, excusing delay of payment.*

Sir,

I have been your tenant above ten years in the house where I now live, and you know that I have never failed to pay my rent quarterly when due. At present I am extremely sorry to inform you, that from a variety of losses and disappointments, I am under the necessity of begging that you will indulge me one quarter longer. By that time I hope to have it in my power to answer your just demand, and the favour shall be ever greatfully acknowledged by your

Obedient humble servant,

*Muthu Pillay.*

## 18-ம் கடிதம்.

**குடியிருந்தவன் குடிக்கூலியின் தாமதத்தை மன்னிக்க வீட்டுக் காரனுக்கு எழுதியது.**

ஐயா,

நான் இப்போது இருக்கும் வீட்டில் பத்து வருஷத்திற்கு அதிகமாய் குடியிருக்குமிடத்தில் மூன்று மாதத்துக்கொருதரம் கொடுக்கவேண்டியபோது குடிக்கூலியை நான் ஒருநாளும் தப்பினதில்லை யென்று உமக்குத் தெரியுமே. இந்நேரம் பல நஷ்டங்களைப்பற்றியும், நம்பிவந்த மோசங்களைப்பற்றியும் இன்னமொரு மூன்று மாதத்தவணை செய்யக் கேட்கும்படி அவசரம் உண்டானதெனக்கு மிக விசனமா யிருக்கின்றது. அந்தக் கெடுவுக்கு நியாயமான உமது குடிக்கூலியைக் கொடுத்துவிட என்னாற் கூடுமென நம்பியிருக்கிறேன். இந்த சகாயத்திற்கு என்றும் நன்றியறிந்திருப்பேன்.

இப்படிக்கு, கீழ்ப்படிதலும் வணக்கமுமுள்ள உமது ஊழியன்,

**முத்துப்பிள்ளை.**

---

ஒரு காரியம் செய்ய மனிதன் என்னென்னவோ திட்டங்கள் போடுகிறான். போட்டபோது சுலபம். அதற்காக மற்றவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டபோதோ அவர்கள் சுலபத்தில் சம்மதிக்கிறதாகக் காணோம்.

இருக்கிற செல்வத்திற்குத் தக்கபடி ஆபரணங்கள், சௌகரியங்கள், சுக நினைவுகள், செலவு விரயங்கள். எல்லாம் பண இருப்பைப் பொருத்த பாகம்.

வீட்டுத் தலைவன் குளித்துச் சுத்தமாகச் சாப்பிட வருகிறான். வீட்டுப் பெண்களோ ஒரு சேவல மசித்துணியுடன் பல்விளக்காமலே தயார்செய்த காலைப் பலகாரத்தைப் பரிமாறுகிறார்கள். இப்படி முறண்பாடு உண்டா?




**இந்திய மித்திரன் :—**

ஒரு தமிழ் வாரப் பத்திரிகை. ஆசிரியர் ஸ்ரீமான் B. வேணுகோபாலன் அவர்கள். ஈப்போ (F. M. S.) விலிருந்தும் வெளிவருகின்றது. இப் பத்திரிகையை ஒருவர் வாசிக்கும் பொழுதே மிக்க பாண்டித்தியமும் ஆற்றலும் வாய்ந்த பத்திராசிரியரால் அது வரையப்படுகிற தென்பதை உணர்ந்துகொள்வார். இதன் ஆசிரியர் 1905-ம் வருஷத்தில் கோயமுத்தூரில் "கோவை ஜனாபிமானி" என்ற வாரப் பத்திரிகையை நடத்தியவர். 24-வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் ஆசிரியராய்த் திரும்பியிருக்கிறார். 'எனது நெடுங்கனவு', 'கபட சன்யாசி' முதலிய நாவல்களை எழுதியவர். "இந்திய மித்திர"னைப் பழய அன்புடனும் வரவேற்கின்றோம்.

***

**மங்கையின் முத்தம் :—**

ஸ்ரீமான் கீ. பி. சே. அவர்கள் இயற்றியது. அநேக படங்களுடன் கூடிய பக்குவமான நூல். முத்தமிடுதற்கென்றே ஒரு தனி சரித்திரம் உண்டென்று விஸ்தாரமாக இதன் ஆசிரியர் இந்நூலகத்தே செய்துள்ள ஆராய்ச்சி வியக்கற்பாலது. விவாக சுகத்தைப் பொருளறிந்த முறையில் ரஸிக ஞானத்துடன் அநுபவிக்க வல்ல ஆற்றலை இந்நூலாற் பெறலாம். "மங்கையின் முத்தம்" என்ற பெயரால் இதனை ஒரு சிற்றின்ப நூலாகக் கருத நேரினும், அதற்கான விஷயங்கள் இதிலிருப்பினும், தாயின் முத்தம், சகோதர முத்தம், பகவத் பக்தியில் தன்னை மறந்த நிலையில் தானே காதலியாதல் ஆதிய உயரிய விஷயங்களும் இதன்கண் மலிந்துள்ளன. மனத்தைக் கரைபடுத்தாத ஒரு கௌரவ நடையில் இந்நூல் அமைந்துளது. சிறுவர், சிறுமியர் இந்நூலையும், இதன் படங்களையும் காண்பது ஒழுங்காகாது. விவாகமான யௌவன தம்பதிகட்குமட்டும் இது உல்லாஸந் தரும். இதன் விலை ரூபா 2.

***

**மாதவ கோவிந்த சதகம் :—**

இது திரு. அரங்கதாஸரவர்களின் வாக்கு. சதகங்களுக்குள்ள நடையில், அவற்றிற்கான விஷயங்களுடனும், ஜனநாயக ஆட்சி ; இந்தியாவின் வறுமை முதலிய புது விஷயங்களும் புகுத்தி ஆக்கப்பெற்றுள்ளது. இதன் ஆசிரியரது கவித்வம் இனிமையும் உயர்வும் பொருந்தியது. சதகங்கள் இயற்றுவது வெகு கஷ்டமான வேலை. விலை அணா 4.

இப்புஸ்தகங்கள் "அமிர்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.

---

என்னவோ அழுக்கு வேஷ்டியும் திறந்த மார்பும் கிழிந்த துண்டுமாய் இருப்பதைப் பார்த்து—இவ்வளவுதானா என்று அலக்ஷியமாய் எண்ணிவிடாதே. உலகப் போக்கில் பழுத்த அநுபவம் பெற்றுவிட்ட பெரியோர்கள் தங்களை அலங்கரித்துக்கொள்ள அவ்வளவாகப் பிரயாசை எடுப்பதில்லை.




1. **உன் யோசனையே மேல்:—** உன் மனம் இடிந்து போகும்படி அதைரியப்படுத்திச் சொல்லும் ஒருவரின் புத்திமதி உனக்கு வேண்டாம். உன் சொந்த புத்தியைக் கேட்டு நிதானித்து உறுதியுடன் உன் கண்ணாலேய கவனித்து ஒன்றைச் செய்திட முயல்வது மேல்.

2. **கவலைப்படுவதில்லை :—** அவனால்தான் எல்லாக் காரியங்களும் ஆக வேண்டுமென்று பிரமாதமாய் அவனைப்பற்றி ஒருவன் நினைக்கிறான். நம்பியும் விடுகிறான். பிறகோ இவன் ஏமாறிக் கலங்கும்படியாகிறது. இவன் படுகிற வருத்தத்தைப்பற்றி ஏமாற்றியவன் கொஞ்சமும் கவலைப் படுவதே யில்லை.

3. **எழுதும் பக்குவம் :—** எல்லோரும் யோசிக்கலாம்—பேசலாம். ஆனால் யோசித்த, பேசிய, அவைகளை அப்படியே எழுதும் பக்குவத்தை ஒரு சில ஆசிரியர்களே பெற்றிருக்கின்றனர். அதிலும் தமது நண்பர்களது குடும்ப விஷயங்களில் நெருங்கிய பழக்கமுடைய ஆசிரியர் அந்த நண்பர்களின் அந்தரங்க வாழ்க்கையின் விவரங்களை யெல்லாம் நெருங்கிய பழக்கத்தினால் ஏற்பட்ட அறிவுடன் வெளியிடும்போது, அது இன்னும் அதிகமாக ருசிப்பதுடன், ஆசிரியருக்கும் அந்த நண்பர்களிடமிருந்து நல்ல திட்டும் குட்டும் சுடச்சுடச் சன்மானமாகக் கிடைக்கிறது.

4. **நெஞ்சில் வஞ்சகம் :—** தேனீ தன் வாயில் மதுவையும், கொடுக்கில் விஷத்தையும் வைத்திருக்கிறது. இவ்விதமே உதட்டில் மதுரமும், நெஞ்சில் வஞ்சகமும் கொண்டு எத்தனையோ மாந்தர் தேனீக்களாயுள்ளார்.

5. **ஒரு தாசிமகனின் பிரலாபிப்பு :—** அம்மா! எனக்குத் தான் ஒருவரை "அப்பா" என்று அழைக்கும் பாக்கியம் இல்லாது போய்விட்டது. என் தங்கை தமக்கை வயிற்றில் பிறக்கும் குழந்தைகளுக்கேனும் தந்தை பாக்கியம் உண்டாகும்படி அவர்களுக்கு விவாகத்தைச் செய்து வையுங்கள் என்று கண்ணீர் விட்டானாம் ஒரு தாசியின் மகன்!

6. **எல்லாம் ஒன்றே :—** படித்தறிந்த விஷயங்களை மறந்துகொண்டே போகிறவனும், படிக்காமலிருப்பவனும் ஒன்றே. சம்பாதித்ததை மிச்சம் சேர்க்காமல் உடனே செலவிட்டுக் கடன் படுவோனும், பிழைப்பின்றிக் கடன்படுவோனும் இருவரும் ஒன்றே. ஐந்து பிள்ளைகள் பெற்று மண்ணுக்குக் கொடுத்து வயிறெரியும் மங்கையும், மக்கள் இல்லாது நொந்துபடும் நங்கையும் இருவரும் தம் ஞால வாழ்வில் ஒன்றே.

7. **இந்த இரண்டு போதாதா?:—** வரவுக்குமேல் செலவு செய்யக் கைகளுக்குத் தெரியாதா? கடன் கேட்கத் தான் வாய்க்குத் தெரியாதா? இவ்

---

**சீமானே! சிரிக்கிறாயே! உன் சந்தோஷம் உனக்கு. உன் எதிரில் இருப்பவன் படும் மனக்கவலை அவனுக்கு! சிரிக்கிறவர் அழநேருவதுமுண்டு.**

விரண்டும் போதாதா?—மனிதன் தன் வாழ்வு கெட்டு மண்ணுக!

8. **இரண்டும் வேண்டும்:**—வாய் சாமர்த்தியத்தில் திறமையாகப் பேசலாம். கை சாமர்த்தியத்தில் அற்புதமான காரியங்களை முடிக்கலாம். இரண்டும் கூடியவன் பாக்கியவான்.

9. **ராஜ போஜனம்:**—ஒருவன் தனக்கு முக்கிய வேலையிருந்து, அதைச் செய்ய ஒருவனை அழைத்து, அவனால் அவ்வேலை செய்யப்படும்போது அவனை வெகுவாய் விசாரித்து ராஜபோஜனம் படைக்கிறான். வேலை முடிந்தபிறகோ சொரி பிடித்த நாயை வெளியில் துரத்திவிடுவது போல் பராமுகமாகி விடுகிறான்.

10. **எல்லாம் நிற்கும் அளவில்:**—"தம்பி" என்று கொண்டாடி அந்த மரியாதையுடன் நின்றால் அவன் ஒரு விசுவாசத் தம்பி தான். "வீட்டை விட்டுப் போடா"வென்று ஆத்திரத்தில் கத்தினால், அவன் "என்னைப் போகச் சொல்ல நீ என்ன" என்று மீறிவிடுகிறான். எல்லாம் அவரவர் நிற்கும் அளவைப் பொறுத்துத்தான்.

அதிகாரம் செய்து தலையில் குட்டுவது குமாஸ்தாவானாலும், அவர் எஜமானுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு குட்டுவதால் உட்பட நேருகிறது. தன் மீது பிரியமற்றவர்கள் அதிகாரம் செய்கையில் கணவனின் மனுஷ்யர்கள் என்ற பெயரைச் சொல்லிக் கொள்வதால் அதற்கும் உட்பட வருகிறது. தன்னை எதிர்க்கும் மனைவியானாலும், குழந்தைகளின் க்ஷேமத்துக்காக பொறுத்துக் கொள்ளும்படியாகிறது. என் செய்ய?

11. **அது இளைக்கிறதில்லை:**—மாடு இளைத்தாலும் அதன் கொம்பு இளைக்கிறதா? மனிதன் இளைத்தாலும் அவனுடைய துர்க்குணம் இளைக்கிறதா? பெருமை இளைத்தாலும் பேச்சு இளைக்கிறதா? தாசி கிழவியானாலும் தளுக்கு இளைக்கிறதா?

12. **நரித்தனம்:**—பேசிக்கொண்டிருக்கையிலேயே இவனிடம் என்னென்ன சாமான்களைக் கைப்பற்றிப் போகலாமென்றும், இந்த தடவை வந்ததற்கு என்னென்ன சுற்றிப் போகலாமென்றும் எண்ணத் தொடங்கி விடுகிறார்கள்!

T. S. குழந்தைவேல்
முதலியார்.

---

வஞ்சக மனத்தினர் தங்களின் வஞ்சகத்தை நாம் அறியவில்லையென்று எண்ணுகிறவரை ஏராளமான கடிதங்கள் எழுதுகிறார்கள். அவர்களது உள்ளத்தின் கள்ளத்தை நாம் அறிந்துவிட்டோமென்று உணர்ந்ததும், கடிதங்களை வரைந்து இனி மயக்க இயலாதென்று கண்டு நிறுத்திவிடுகிறார்கள்.

ஒரு ஹிந்து தன் வீட்டில் புசித்துப் போகும்படி ஒரு இஸ்லாமிய நண்பரை வேண்டுவதும், அவரும் புசித்துக் குலாவுவதும் சகஜமாயிருக்க, இவ்விதமே ஒரு இஸ்லாமியர் தமது ஹிந்து நண்பரைத் தம் வீட்டில் புசிக்கும்படி ஏன் அழைப்பதில்லை? அழைப்பது வழக்கத்தில் காணோம்.

# பழமொழிக் குறிப்புகள்

## 2. அற்ப குணம்.

(91-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 130. எலும்பு கடிக்கிற நாய் இரும்பு கடிக்குமா ?

**நா**ய்க்கு அதன் ஜென்மத்தில் ஏற்பட்ட எலும்பு கடிக்கிற புத்திதான் எப்போதும் யிருக்குமே யன்றி, இரும்பைக் கடிக்க எண்ணம் உண்டாகாது. அற்ப குணத்திலேயே ஊறிப்போனவர்கள் அற்பமான காரியங்களிலேயே தலையிட்டுக்கொள்வார்களே தவிர, பெரும் நோக்குள்ள புத்தி வகித்துப் பெருமையாய் ஒருநாளும் நடந்துகொள்ளமாட்டார்கள். அவ்விதம் பெருமைப்படும் வகையாய் காரியங்களைச் செய்ய ஏதோ நல்ல புத்தி தோன்றி முயன்றாலுங்கூட அவற்றைச் செய்து முடிக்கவேண்டிய ஒழுங்கும் தெரியாது. அந்த நல்ல புத்தியும் நாலு நிமிஷமே இருக்கும். எலும்பு கடிக்கிற நாய்க்கு இரும்பு கடிக்க எப்படித் தெரியும்? எலும்பைக் கடிப்பதே ஒரு கீழான செய்கை. அது எவ்வளவு கேவலப்பட்ட செய்கையானாலும் நாய் அதை விடுவதே யில்லை. இன்னும் அவ்விதம் எலும்பைக் கடிப்பதில்தான் அதற்கு அதிக பிரீதி. இவ்விதமே உதவாத எலும்பைக் கடிக்கிற குணமுள்ளவர்களும் ஆங்காங்கு சில குடும்பங்களில் இருக்கிறார்கள். இவர்களுடைய அற்ப புத்திக்கேற்ப, கலகம், கோள் கூறல், சொற்ப சங்கதிகளுக் கெல்லாம் குற்றம் கண்டு பிடித்தல், வஞ்சக புத்தி, வேற்றுமையான எண்ணம், துவேஷ நோக்கு, எதிலும் பட்டுக்கொள்ளாது விலகி நிற்கும் பான்மை, எப்போதுமே எதிர்த்து நிற்கும் தன்மை, ஒன்றுபடாமை—முதலிய ஈனத்துவமான செயல்களிலேயே கை நனைத்துக்கொண்டு இந்த அற்ப எலும்புகளையே கடித்து சந்தோஷப் படுவோராகிறார்கள். இவர்களுக்கு அன்பு, அந்நியோன்யம், குடும்ப சமாதானம், பொறுத்துக்கொண்டு போகும் சகிப்புக் குணம், பெருந்தன்மை முதலிய மேலாகியவற்றை மென்று நடித்து ருசி பார்க்கத் தேரிவதே யில்லை. அந்த மேன்பட்ட எண்ணமே உதிப்பதில்லை. அற்ப குணத்திற்குத் தகுந்தபடியே அவர்களின் காரியங்களும் வெகு அற்பமாய் இருக்கின்றன. ஒரு காசு பெறாத சங்கதியில் பிரமாதச் சண்டையை யுண்டாக்கிக் கொள்வது இவர்களின் சுபாவம். இன்னும் இவர்களைத் தட்டிக்கொடுத்தும், கோள் சொல்லி உசுப்பேற்றித் தூண்டியும் விடுவோர் இவர்களிலும் கேவலமான அற்ப புத்தி படைத்தவர்கள். இரண்டு பக்கத்துக்கும் வேண்டியவர்களாகத் தலையாட்டும் குள்ளநரிகள் இன்னும் கேவலமான அற்பத்தன்மையினர்கள். இத்தகைய ஈனர்களின் கூட்டத்தில் சிக்கிக்கொள்ளுகிற குடும்பத்தலைவன் படும்பாடு தெய்வமே அறியும். இதைவிட அவன் விலகி வெளியூர்களுக்குக் குடித்தனம்

---

பேசுகிறது சரி. முடிந்தகாலத்திற்கல்லவா அது நிச்சய வார்த்தை. எவ்வளவு பேச்சுகள் காற்றில் பறந்துபோயின ? சும்மா சும்மா பேசாதே.

போய்விடுவது மேலாகும். இத்தகைய அற்ப மதி படைத்த பதர்களின் ஈன காரியங்களைக் குறித்து நொந்துகொள்ளும்போது "எலும்பு கடிக்கிற நாய் இரும்பு கடிக்குமா" என்று சொல்லி, அவர்களுக்கு ஏற்பட்ட புத்தி அவ்வளவுதான் என்று நினைத்து மனம் தேறுவதற்கு இந்தப் பழமொழியை உபயோகப்படுத்துவார்கள்

## 131. "நாய்க்குத் தெரியுமா தோல் தேங்காய்?"

தேங்காயின்மீது நாய்க்கு வெகு பிரியமாயினும், உரிக்காத ஒரு முழுத் தேங்காயை நாயின் முன்பு போட்டால், தனக்கு வேண்டியதான தேங்காய் அதற்குள் இருக்கிறதென்று தெரிந்துகொள்ளக்கூடிய மேலான குணம் அதற்கு உண்டாவதே யில்லை. அந்தத் தேங்காயை அது லக்ஷியம் பண்ணுமலே போய் விடும். இவ்விதமே அற்பர்களுக்கு ஒருக்கால் மேலான வாழ்வும் சம்பத்தும் ஏற்பட்டபோதிலும், அதை ஒரு மேன்மையானதாகவும் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பாக்கியமாகவும் கொண்டு அனுபவிக்கும் வகை தெரியாமல் அதை உதறித்தள்ளித் தங்களின் அற்ப புத்தியைக் காண்பித்துக்கொள்ளுகிறார்கள். வலியவந்த சீதேவியை உதைத்துத் தள்ளியதுபோல தாங்கள் சுகப்படக்கூடிய நல்ல வாழ்வைத் தங்களின் அற்ப குணத்தால் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். மற்றவர்களெல்லாம் எவ்வளவோ சிடுசிடுத்துப் பேசவும், எதிர்த்து நிற்கவுமாயிருக்க, அவ்விதமெல்லாம் இல்லாமல் தன் இஷ்டப்படி தன் சொற் கேட்டு நடப்பவனைப் பிதா மதிப்பதே யில்லை. அவனைக் கேவலப்படுத்திவிட்டுத் தன்மீது சிடுசிடுத்து எதிர்க்கிற மறுதார மக்கள்மீதே பிரியம்கொண்டு அவர்கள் பக்கமே இருந்தபடி தன் குமாரனைத் தூற்றுகிறார். அந்தக் குமாரனுடன் இசைந்திருந்து சந்தோஷப்பட அவருக்கு எண்ணமே உண்டாகிறதில்லை. இவ்விதமே ஒரு பெண் தனக்குக் கிடைத்த தாலிப் பாக்கியத்தை அதை ஒரு அரிய சம்பத்தாகவும் மேன்மையாகவும் நினைத்து மகிமைப்பட்டு வாழ்வதற்குத் தெரியாமல், அந்த உத்தமனான கணவனை எதிர்த்துக்கொண்டு, "இவனிடம் வாழ்ந்த வாழ்வு போதும், இனி நான் இங்கு அரை நிமிஷமும் இருக்கமாட்டேன்" என்று ஆரவாரிக்கிறாள். கொண்ட கணவனின் மனத்தைப் புண்ணாக்குகிறாள். தான் சுகப்படக்கூடிய வாழ்வைக் கணவனிடமிருந்து பெறக்கூடியதா யிருந்தும், நாய்க்கு முழுத் தேங்காயின் அருமை தெரியாததுபோல இவளுக்கும் தன்னை மணந்த மணாளனின் சிலாக்கியம் தெரியாமல் அவனைக் கேவலப்படுத்தித் தனக்குக் கிடைத்தது மேலான பாக்கியம் என்பதை உணராமல் ஈனப்படுகிறாள். இவ்விதமே தான் பிறந்த நாள் தொட்டுத் தனக்கு நல்லது செய்து காத்து வருபவனின் நல்ல குணத்துக்கு சந்தோஷப்பட்டு நன்றியுடன் நடக்கத் தெரியாமல், அவனை எதிர்த்தும் அவன் மனத்தை நோகவைத்தும், அவனுக்கே 'சுண்ணும்பு' தடவுவதுமாகச் சிலர் நடந்துகொள்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் அல்ப புத்தியே காரணம். அல்ப புத்திக்கு மேலான எண்ணம் உண்டாவதே யில்லை. அவ்விதம் உண்டாகாமலே போய், சுகப்படக்கூடிய தங்களின் வாழ்வையும் கெடுத்துக்கொள்ளும் போது "நாய்க்குத் தெரியுமா தோல் தேங்காய்?" என்று அருமை அறியாத அவர்களின் ஈனத்தன்மையைப் பழித்துக் காட்டுவதற்கு இந்தப் பழமொழியைக் குறிப்பிட்டுச் சொல்வார்கள்.

---

நானும் வலிய சண்டைக்குப் போவதில்லை, வந்த சண்டையை இலகுவில் விடுவதுமில்லையென்கிறார் ஒரு ஸாது.

## 132. நாய் அறியுமா ஒருசந்திப் பானை ?

இவ்வாறாக, அல்ப குணம் படைத்தவர்களுக்குச் சில சமயங்களில் நல்ல புத்தியும் உண்டாவதுண்டு. அப்போது தங்களுக்குக் கிடைத்த பாக்கியத்தின் அருமை தெளிவாய்த் தெரிந்தபோதிலும், தமது அற்ப குணமே பின்னும் பெருகிப்போய் அந்த அற்பத்தன்மையிலே அந்தப் பாக்கியத்தைப் பாழாக்கிக்கொண்டும் விடுகிறார்கள். கணவனின் அருமை தெரியாமல் அவனைக் கேவலப்படுத்தித் தாய்வீடு போய்விட நினைத்த ஒரு பெண்ணுக்குச் சில சமயங்களில் நல்ல புத்தியுண்டாகி பர்த்தாவின் அருமைதெரிந்து வெகு குளிர்ந்த குணத்துடன் நடந்துகொண்டு அவன் வாய்க்கு ருசியானவிதமாகவெல்லாம் சமைத்துப் பரிமாறுகிறாள். இதுவரைக்கும் அவளுக்கு நல்லபுத்திதான். இனி இந்தப் பரிமாறுதலைவிட முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது, அவனது மதனதாகத்தைத் தணித்து அவனுடைய தேகதர்ம அவஸ்தையை நிவர்த்தித்து அவன் பிரியப்படி இருந்து ஸந்தோஷப்படுத்துதலாகும். இந்தப் பிரதானமான விஷயத்திலே தனக்கு சில நிமிஷங்களுக்கு முன் உண்டான நல்லகுணத்தை விட்டுவிட்டு அற்பகுணமே மேலிட்டவளாய்த் தன்னை எவ்வளவோ வேண்டிக் கணவன் அழைத்தபோதிலும் அவன் விருப்பத்திற்கு இணங்காமல் அந்தசமயத்தில் ஒரு பெரும் நித்திரையை உண்டாக்கிக்கொண்டு தூங்குமூஞ்சியாய்த் திருப்பித் திருப்பிப் படுத்துக்கொண்டு முணுமுணுக்கிறாள். இதைப் பார்த்துக் கணவனுக்கும் சீ! என்று மனம் விட்டு சலித்துப் போகிறது. இந்தக் கேடுகெட்ட அற்பத்தை ஏன் கட்டிக்கொண்டோமென்று மனம் வெறுத்துப் போகிறான். எவ்வளவு ருசிகரமாய்ச் சமைத்துப் போட்டாலென்ன, முக்கியமான இந்த விஷயத்திற்கு உதவாமல் மற்றதிலெல்லாம் உட்பட்டு நடந்து பயனென்னவென்று கோபமும் ஆத்திரமும் பொங்குகிறான். இப்படி அவனை வாதனைப்படும்படி வைப்பது அல்பபுத்தியல்லவா? நல்ல குணம் சில சமயங்களில் உண்டானாலும், சீக்கிரமே அது மாறிப்போய் பழயபடியே அந்த அற்ப குணமே மேலோங்கிவிடுகிறது. தனது அல்ப புத்தியால் தானும் இன்ப மனோரம்யம் அடைவதைக் கெடுத்துக்கொண்டு, கணவன் பெற நினைத்த சுகத்தையும் வீணாக்கிவிடுகிறாள். ஒருவன் தனது இஷ்ட தேவதையைப் பூஜித்து அதற்காக விரதமிருந்து தனது ஒரே வேளை உணவுக்காகச் சமையல் செய்து வைக்கிறான். அதை அவன் புசித்துப் பசியாறின பிறகு தனக்குக் கொணடுவந்து படைக்கையில் தானும் புசிக்கலாமென்று அது வரையிலும் காத்திருக்கக்கூடிய நல்ல குணம் நாய்க்கு உண்டா? இல்லவேயில்லை. அவன் ஆசாரத்துடன் செய்யும் விரதம் நாய்க்குத் தெரியாமல், அவன் சமைப்பதற்குப் பட்ட கஷ்டத்தையும் அறியாமல் அவன் வடித்திறக்கின பானையில் தன் வாயை வைத்து நக்கிவிடும். அத்துடன் அவனுடைய அவ்வளவுபாடும் வீணாகிச் சமைத்ததையும் வெளியில் எறியவேண்டியதுதான். இவ்விதமே, தனக்காக தனது கணவன் பட்டிருக்கிற பாடுகளையும் செய்திருக்கிற செலவுகளையும் தன்னைக் காப்பாற்றிவருகிற அருமைகளையும் எண்ணிப் பாராமல், அவனது விருப்பத்திற்கு இணங்காமல், முறணிக்கொண்டு,—அவன்தான் செய்த அவ்வளவும் வீண் என்று நினைத்து மனது நோகும்படியாகச் செய்துவிடுகிற ஒரு பெண்ணின் சங்கதியும்,—ஒருசந்திப் பானையில் வாயைவைத்து

---

வஞ்சகம் செய்து மறைத்துவைத்த சொத்து வெட்டிச் செலவினும் வீணுக்குமே அழிந்து ஸர்வநாசமாகும்.

விரதத்தைக் கெடுத்துவிடுகிற நாயின் ஈனச்செயலுக்குச் சமமாகவே இருக்கிறது. இது கேடுகெட்ட அற்ப குணத்தின் செயல். இவ்விதமே வீட்டிலிருப்பவர்களுக்கும் சில சமயங்களில் அற்ப புத்தி விலகி நல்லகுணமுண்டானாலும், முக்கியமான காரியத்திலே மறுபடியும் தங்களின் அற்ப புத்தியையே காட்டி விடுகிறார்கள். அதாவது அவர்களுக்கு நல்ல குணம் நீடித்து நிற்பதில்லையென்றபடி. நல்ல குணம் உண்டானாலும் தங்களின் அற்ப குணத்தால் அந்த நல்லதை யனுபவிக்கத் தெரியாமல் பாழ்படுத்திக்கொள்வார்கள் என்றபடி. இவ்விதமாக ஒன்றின் முக்கியத்தையும் அருமையையும் தெரிந்து கொள்ளாதவர்களைப் பார்த்து **"நாய் அறியுமா ஒருசந்திப் பானை"** என்று பழித்துக் காட்டும் பழமொழி யிது.

## 133. "நாய்க்குப் பெயர் முத்துமாலை, அதற்காக்கியிடுவது வரகந்தவிடு."

தவிடுகளுக்கெல்லாம் மிகவும் கடைபட்டது இந்த வரகந்தவிடு தான். இது தான் நாய்க்குக் கிடைக்கும். சுத்தமான இலையில் அன்னம் பரிமாறி நாய்க்கு உபசரித்தது எங்குமே யில்லை ; அதற்குக் கிடைப்பதெல்லாம் எச்சிலையும் எச்சில் சோறுந்தான். ஆனால் பெயர்மட்டும் முத்துமாலை ! இது போல அற்பகுணம் கொண்டவர்களுக்கு என்ன சிலாக்கியமான பெரிய பெயர்கள் இருந்தாலும், அற்பர்களுக்கு அற்ப குணம்தான் இருக்குமே தவிர, அவர்களுக்கு இட்டுள்ள ராமன், கிருஷ்ணன், கோதண்டம், ரங்காநாதம் ஸாவித்திரி, லக்ஷ்மி முதலிய தெய்வீகத் திருநாமங்களுக்குள்ள ஒரு மேன்மையை அவர்கள் கொள்ளப் போவதே யில்லை. பேர் அழகாயிருந்து என்ன பயன் ? நற்குணமல்லவோ பிரதானமாக இருக்க வேண்டும் ; அது இல்லாதபோது அற்பர்கள் என்றைக்கும் அற்பர்களேயாவர் என்பது இப்பழமொழியின் கருத்து.

> தங்களின் சுயநலத்திற்கு மத விசுவாசத்தை மேலிழுத்துப் போட்டுக்கொள்ளுதலானதுமகா பெரிய மயக்கடிகயான ஜால வித்தை. இந்த மத விசுவாசிகளிலே பழமையான மூடச்செயல்களைக் கண்டிப்போருக்கும் நல்ல வருமானம். இவ்விருவரிடத்தும் உலகம் வெகுவாய் ஏமாறி விடும். விழித்து உணர்வோர் எங்கோ ஒருவர். அவர் சொல் ஓங்குவதில்லை. அவரைப் பைத்திய மாக்கிப் பழிப்பவரை விவேகி யாக்குவர்.

(தொடரும்.)

---

அது என் அநுபவவாசகம்; சத்தியம் செய்வேன் என்கிறான். உலகத்து அநுபவம் ஒருவிதமா யிருக்கிறதா? பொல்லாத மனைவியால் ஒருவன் படும் பாட்டை உத்தம மனையாளை மணந்தவன் அநுபவ பூர்வமாய் அறியமுடியுமா ?

---

ஸமுத்திரக்கரையண்டை செல்லும்போதே எத்தகைய மனக்கவலையும் பறந்துபோம் என்கிறார்கள். கப்பலிலுள்ளவர்கட்கு ஏனோ கவலை போகவில்லை. வென்னீரில் வெல்லம் கரையுமே தவிர கவலைக் கருங்கல் கரையுமா ?



# பிரபஞ்சதரிசனம்



## அக்பர் சமஸ்தானத்தின் உன்னதம்.

### II

5821

THE MADURA TAMIL SANGAM



யமுனா நதிக் கரையில் அந்தப்புரம் கட்டப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் சலவைக் கல்லினால் சுவர் எழுப்பியிருந்தது. அந்த அந்தப்புரத்தில் அழகிற் சிறந்த பெண்கள் சேர்ந்திருந்தார்கள். அக்பர் பாதுஷாவினுடைய அந்தப்புரத்தில் ஏழாயிரம் ஜனங்கள் இருந்தார்கள், அவர்களுள் ஐயாயிரம் பேர் ஸ்திரீகள். ஒவ்வொருவருக்கும் தகுந்த சம்பளமும் இருப்பிடமும் கொடுத்து வந்தார். அவர்கள் சம்பளம் மாதத்துக்கு அறுநூறு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரைக்கும் இருந்தது.

***

ஆக்கிரா நகரத்திலிருந்து டில்லிப் பட்டணத்துக்குப் போகும் வழியில் இருபத்தினான்கு மைல் தூரத்தில் மணற்குன்றின்மீது அக்பர் ஒரு மாளிகை கட்டினார். அதைச் சுற்றிக் கட்டியிருந்த சுவரின் நீளம் ஆறு மைல். இந்த மாளிகையில் மிருகங்களைச் சண்டையிட்டு வேடிக்கை பார்ப்பது வழக்கம். இந்தச் சிங்கார மாளிகை இப்போது அழிந்திருக்கின்றது. சுவர்களும் கொத்தளங்களும் இடிந்து கிடக்கின்றன. மிகப் பெரிய சுற்றளவுள்ள ஒரு குளமும் இடிந்து கிடக்கின்றது.

***

அக்பர் பாதுஷாவுக்கு இருபத்தெட்டு வயதுவரைக்கும் பிறந்த பிள்ளைகள் ஜீவித்திருக்கவில்லை. இதன்பொருட்டு ஆக்கிரா நகரத்திலிருந்து கால்நடையாக ஆஜ்மீர் பட்டணத்துக்குப் போய் அங்கேயிருந்த பக்கிரியினுடைய சமாதிக்கு முன்பாகப் பிரார்த்தனை செலுத்தினார். ஆக்கிராவுக்கும் ஆஜ்மீருக்கும் உள்ள தூரம் இருநூறு மைல்.

***

இவ்வாறு பிரார்த்தனை செலுத்தியும் நினைத்த காரியம் நிறைவேறவில்லை. மறுவருஷம் அக்பர் பாதுஷாவானவர். தம்முடைய மனைவியை ஷேக்ஸலீம் என்ற வேறொரு பக்கிரியினிடத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். அந்தப் பக்கிரியினுடைய மகத்துவத்தால் பிள்ளைப்பேறு உண்டாகுமென்று அவரிடத்திலேயே ஊழியம் செய்துகொண்டிருக்கும்படி பாதுஷா உத்திரவு செய்தார். சில காலத்திற்குப் பிறகு அவ்விதமே குழந்தையும் ஜனனமாக, அதற்குப் பக்கிரியினுடைய பெயரையே வைத்

---

எந்த ரகரம், ழகரம் யோடுவதென்று மயங்குகையில் கையால் வேகமாய் எழுதிப் பார். பழக்கப்பட்ட கை அதை உடனே சொல்லிவிடும்.

தார். அக்பர் பாதுஷாவுக்குப் பின்பு அந்தக் குழந்தை ஜிஹாங்கீர் என்கிற நாமத்தோடு சிம்மாசனம் ஏறிற்று. ஜிஹாங்கீர் அரசர் தம்மை எப்போதும் அந்தப் பக்கிரியினுடைய அடிமையென்று சொல்லிக்கொள்ளுவார். அவர் பொருட்டுத் தம்முடைய காதைக் குத்திக்கொண்டு அடிமையின் அறிகுறியாகிய ஆபரணத்தை அதில் அணிந்துகொண்டார்.

***

அக்பர் பாதுஷாவினுடைய தேவ பக்தியால் பிறந்தவர் ஜிஹாங்கிர் ஒருவர் மாத்திரம் அல்லர்; டானியல் என்கிற மற்றொரு குமாரரும் ஒரு பக்கிரி வீட்டில் பிறந்தவர்தாம்.

***

இந்து தேசத்தில் அக்பர் அரசாண்ட காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் எலிஜபத் என்னும் இராணி அரசாண்டுவந்தார். அந்த இராணி பட்டத்திற்கு வருவதற்கு மூன்று வருஷத்திற்கு முன்னரே அக்பர் சிம்மாசனம் ஏறினர். இராணி தேகவியோகம் அடைவதற்கு இரண்டு வருஷத்துக்கு முன்னமே பாதுஷா பரகதி யடைந்து விட்டார். இராணியார் இறந்த இருநூறு வருஷமளவும் இங்கிலாந்து தேசத்தார் அவருடைய பெருமையை நினைத்து அவரை மறவாதிருந்தார்கள். இந்து தேசத்தார்களோ இருநூறு வருஷம் மாத்திரமல்ல; நாளது வரைக்கும் பாதுஷாவை மறவாதிருப்பதற்குக் காரணம் இருக்கின்றது. எலிஜபத் இராணியாருடைய பெருமைக்கும் கீர்த்திக்கும் காரணம் அவருடைய சமஸ்தானத்தில் இருந்த மந்திரிகளும் பிரபுக்களுமே. அக்பர் பாதுஷாவினுடைய ஸமஸ்தானத்திலும் பெரிய பிரபுக்கள் இருவர் இருந்தார்கள். அவர்களைப்போல் சிறந்த மந்திரிகள் இந்த ஆசியாக் கண்டத்தில் இருந்ததில்லை. ஜனங்களுடைய ஸம்ரக்ஷணைக்கு வேண்டிய உபாயங்களைப் பாதுஷாவோடு கூடிச் செய்து வந்தார்கள். அவர்கள் தாம் அபுல் பேஜல் என்பவரும், அவருடைய ஸகோதரராகிய பீஜ என்பவருமாவர். அவ்விருவரும் பாதுஷாவுக்கு அந்தரங்கமான மந்திரிகள். பாதுஷாவானவர் வேலையில்லாத காலத்தில் அவர்களோடு சேர்ந்து பொழுதைப் போக்குவார். அவருடைய அரசாட்சியைச் சரித்திரத்தில் எழுதிவைத்தவர்கள் அவ்விருவருமே. அவ்விருவருள் முதல்வர் அரசாட்சிமுறைமை நன்றாகத் தெரிந்தவர். மற்றவர் அக்காலத்திலிருந்த பண்டித ரெல்லோரிலும் சிறந்தவர். அவ்விருவரும் இருபத்தைந்து வருஷகாலம் அக்பர் பாதுஷாவுடன்கூட இருந்து அவருக்கு யோசனை சொல்லி வந்தார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து இரண்டு கிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள். அவற்றில் அந்தக் காலத்தில் இருந்த ஜனத்தொகையும், மதபேதமும், கலையும், வித்தையும், கிராமங்களுடைய வருமானமும், மற்ற வரும்படிகளும் கணக்கிட்டுச் சொல்லியிருக்கின்றன. பாதுஷாவினுடைய சரித்திரமும் எழுதி யிருக்கின்றது.

***

மேற்சொன்ன மந்திரியும் பண்டிதரும் ஒரு இஸ்லாமியருடைய குமாரர்கள். ஹிந்துக்களுடைய வேத சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றின்

---

ஆரம்பத்தில் அலக்ஷியம் செய்த சங்கதிகள் அனைத்தும் தன் கழுத்துக்கே கத்தி வெட்டாய் முடிந்துவிட்ட பிறகுதான், அடடா! முன்னாலேயே ஜாக்கிரதைப்படாமல் போய்விட்டோமேயென்று எண்ண வைத்துவிடுகிறது.

உண்மையை யறியவேண்டுமென்று பாடுபட்ட மகம்மதியர் பீஜ் என்ற அவர் ஒருவரே. காசிப்பட்டணத்திற்குச்சென்று வேதசாஸ்திரம் அறிந்த ஒரு பிராமணரிடத்தில் கற்றுவந்தார். அந்த இஸ்லாமியர் ஹிந்துமதத்தை அபிமானிக்க விருப்பமுள்ளவர் என்று எண்ணிப் பிராமணர் அவருக்குச் சகல வித்தைகளையும் சொல்லி வைத்தார். பின்பு தாம் மோசம் போனதாக அவருக்குத் தெரியவந்தது. அவர் தம்முடைய மதத்தின் உண்மையை மற்றொரு மதஸ்தருக்கு வெளியிட்ட பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்றும், அதற்கு அக்கினிப் பிரவேசமே பிராயச்சித்தமாகச் செய்துகொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்தார். இதுகண்டு பீஜ் என்பவர் தாம் தெரிந்துகொண்ட ரகசியத்தை வெளியிடுவதில்லையென்று சத்தியம் செய்தபின்பு அவர் ஜீவித்திருக்க சம்மதித்தார். அக்பர் பட்டத்துக்குவந்த பன்னிரண்டாம் வருஷமுதல், அவர் தேகவியோகம் அடைவதற்கு ஒருவருஷம் முன்வரைக்கும் அந்த இரண்டு ஸகோதரர்களும் பாதுஷாவுடன் கூடவே இருந்துகொண்டிருந்தார்கள். அந்த மொகலாயர் காலத்தில் கல்விச்சிறப்பு ஓங்கி நின்றது. பாதுஷாவினுடைய வாளைப் பார்க்கிலும், அபுல்பேஜர் என்பவருடைய பேனா மிகச்சிறந்தது என்று அக்காலத்தில் சொல்வது வழக்கம். (தொடரும்.)

## போ—வா. Go—Come

பிரபலஸ்தரான ஆங்கிலேயப் பிரபு ஒருவர் ஏராளமான நிலங்கள் இருந்தும் கடன்காரராகி ஒரு சிறு குடித்தனக்காரனிடம் கடன்கேட்கப்போக, அவனும் தருவதற்கு ஒப்புக்கொள்ள, இந்தச் சிறு நிலத்திலிருந்து எனக்குக் கடன் தரக்கூடப் பணம் எப்படி சம்பாதித்தாய் என்று அவனை வினவினர்.

அவன் சொன்னதாவது :—"ஐயா! நீங்கள் சிப்பந்திகளுக்கு—"**போய்ப் பாரும்**" என்று உத்திரவு கொடுத்துத் தூர இருந்தீர்கள். நானோ என் சிப்பந்திகளுக்கு—"**வா போவோம்**" என்று என்னுடன் அவர்களை அழைத்துப்போய் அவர்களோடு உழைத்து வந்தேன். நம்மிருவருக்கும் இதுதான் வித்தியாசம்" என்றான். இது எல்லா விஷயத்துக்கும் நல்ல புத்திமதியாகும். எதையும் தானே கவனிப்பதில் நடக்கிற வேலைபோல் பிறர் கவனிப்பதில் நடவாது. அந்தப் பிறரை நம்புவதும் வீண்—ஏமாற்றமே.

நாம் நம்பி மோசம்போனாலும், சில விஷயங்களில் நம்மை அந்த மோசம் செய்தவர்களே தங்கள் காரியங்களால் ஜாக்கிரதைப்படும்படி செய்துவிட்டதும் நமது அதிர்ஷ்டம்தான். ஆனால், நினைக்க நினைக்க துயரமுங் கூடுகிறது.




இன்று கூடிய நமது கடையில் 'வருத்தத்திலே கசப்பு தித்திப்பு உண்டா?' என்று ஆவன்னா செட்டியார் கேட்டார். "ஆம் உண்டு ; ஒருவன் மீது எரிச்சலுடனேனும், சினத்துடனேனும் கொள்ளும் வருத்தம் மனத்தைக் கசக்க வைக்கும். அவ்விதமின்றி நமக்கு நலமே புரியும் ஒருவனை அவனது உபகாரங்களுக்கு நெஞ்சார நினைத்துக் கொண்டாடும்போது, 'என் நீ இவ்வளவு பிரியம் என்மீதுவைத்து அலைகிறாய் ; உன் செயல் நன்றாயில்லை ; வருத்தப்படுகிறேன்' என்று அவனைக் குறித்துச் சொல்லுகிறோம். இந்த மாதிரியான வருத்தத்திலே—தித்திப்பு—தான் அதிகமாகக் கலந்திருக்கும். இப்படி நாம் ஒருவனைப்பற்றிச் சொல்ல, நம்மைப் பார்த்து அவன் "உன் வருத்தம் சரிதான் ; உன்னைப் போலவே நானும் ஏன் உன்மீது இத்துணை அளப்பரிய அன்பைவைத்துத் தவிக்க வேண்டும் என்று என்னிலேயே நினைத்துப் பார்த்து அதற்காகக் கொஞ்சம் வருந்தப்படவும் எண்ணுகிறேன்" என்கிறான். இது ஆசையோடும் அன்போடும் சொல்லிக்கொள்ளும் பதில் வார்த்தையாகும். இதிலே தித்திப்புதான் நிறைந்திருக்கும் என்று ஊவன்னா ரெட்டியார் உரைத்தார்.

***

"குழந்தைகளில்லாத வீட்டிலே கூட்டமேயில்லை" என்று குண்டுசெட்டியார் கூற, உடனே திண்டிவனம் பிள்ளை "அவர்களின் திருப்பாதங்கள் பதிந்திடாத பாழ்மனையில் பண்டிகை நோன்பு விசேஷங்களுமில்லை ; அவர்களின் கூச்சலும், விளையாட்டும்தான் ஒரு இல்லத்தைக் கந்தர்வலோகமாக் குவிக்கிறது என்றார்.

***

"நரகலோகம் எது" என்று நானாவையர் கேட்டார். "கொளகொளத்து வெந்து நாறிய வாய்ப்புண்ணிலே, அதற்குள் புகுத்திய தோசையின் துணுக்குகள் ஒட்டைப்பற்களின் சந்தில் நுழைந்து கொள்ளும்போது அந்த சமயம் மனிதன் படுகிற பாட்டை நரகலோக துன்பத்திற்கு ஜதை கூட்டலாம்" என்று அல்லாபிச்சை விடை நவின்றார்.

***

"பிரஸித்தி எத்தனைவகை?" என ஒருவர் வினவினார். "பிரஸித்தி இருவகை. ஒன்று தானே வலியச்சென்று தேடுகை. தான் மஹா கண்டுவிட்டதாய் எல்லோரையும் தூற்றி, அந்தத் தூற்றலிலே தன்னை வெகு கெட்டிக்

---

விலைக்கு விற்போர் நேற்று அரைத்த இட்டிலிமாவின் மிச்சத்தோடு இன்று அரைத்த மாவையும் கலந்து சீக்கிரம் புளித்துவிடச் செய்கின்றனர். இந்த மிச்சம் நெடுகச் சேர்ந்துகொண்டே போவதில் எவ்வளவோ விஷமிப்பு நேர்கிறது. எல்லாம் சுட்டுவிட்டால் அழகாய்விடுகிறதாம்!

காரன் என்று தன்னைப்போன்ற இழி குணத்தார்போற்ற, அந்த வகையிலே ஒரு பிரவித்தி பெறுதல்; யாவர்க்கும் நல்லது செய்தும், வியாபாரம் உத்தி யோகம் புரிக்தும் புகழ் தேடுதல். இவ் விதபிரவித்தியெல்லாம்தானேவேண் டிச்சென்று உண்டாக்கிக் கொள்ளும் பிரவித்தியைச் சேர்ந்தது. இது லௌகீகப் பிரவித்தியாகும். இனி, மற்றொன்றோ வைதீகப் பிரவித்தி என்பது. ஒரு ஞானி தன்னளவில ஒடுங்கி தெய்வத்தியான பரவசராய் நிற்கின்றார். உலகத்தவர்க்குத்தம்மாலா ன உதவிகள் பிரதிபலனை நோக்காது புரிகின்றார். தமது கடமையை அவர் செய்வதே யன்றி எவ்வித பிரவித்தி யையும் விரும்பவில்லை. ஆயினும் லோ கப்பிரவித்தியோ அவரையே தேடிப் போய் அடைகிறது. இது என்ன தொல்லை; எங்கு நோக்கினும் என் னைப்பற்றியேதான் பேசவேணுமா? இதில் என்ன பயன்?—என்று தமது பிரவித்தியை நோக்கி நொந்துகொள் ளுகிறார். இவ்வித வைதீகப் பிரவித்தி தூய்மை பொருந்தியது. மேலே சொன்ன லௌகீகப் பிரவித்தியோ அழுக்கும்—பொறாமையும்—கர்வமும் கபடமும்—சுயநலமும்—வீண் செலவும் நிறைந்து நாறுவதாகும்" என்று தொந்திச் செட்டியார் தொகுத்து ரைத்தார்.

***

"தூஷணையால் ஒருவரின் புகழ் குன்றுமா" என்று தாண்டவக்கோன் கேட்டார். " துவேஷம் காரணமாக ஒரு உத்தமனையோ, ஒரு ஞானியை யோ தூஷித்தலிலே அவர்களின் பெயர் கெட்டுவிடுவதில்லை. உலகினர் தூஷித்தவனையே தான் வெறுப்ப ன்றி தூஷிக்கப்பட்டவ ரிடத்து மதிப்பு குன்றார்" என்று அல்லா பிச்சை அன்போடும் தெரிவித்தார்.

***

'பூஷணையால் புகழ் விரிகிறதா? ஒருவனைச் சிலர் புகழ்ந்து மலைமேல் உயர்த்துவதாலேயே எல்லோருமே அவனைக் கொண்டாடி விடுகிறார்களா' என்று பெத்த பெருமாள் கேட்டார். 'எவ்வளவுதான் புகழ்ந்தாலுமென்ன? புகழப்படுகிறவனுடைய யோக்கியதை வெளியில் எப்படியோ வந்துவிடு கிறது. உண்மையை மறைக்க முடி கிறதில்லை. பூஷிக்கப்படுவோரின் இழிந்த மனத்தோற்றத்தை உத்தமர் கள் வெறுப்புடன் நோக்கி, எவ்வளவு பூஷணை-தடபுடல் அங்கிருப்பினும் விலகிக் கொள்ளுகிறார்கள். பாம்புத் தோலின் மீதுள்ள பளபளப்புக்குச் சமமாய் அப்பூஷணையை மதிக்கிறார் கள்.' என்று சின்னபெருமாள் சிரித் துக்கொண்டே சொன்னார்.

***

"ஜனத் தலைவர்கள் என்பவர் களிலே தந்திரிகள் உண்டா?" என்று முந்திரிக்கோனர் வினவினர். "ஆஹா எவ்வளவோ உண்டு. ஒரு ஜனத்தலைவ ரான தந்திரசாலி மற்றொரு ஜனத் தலைவரான யுக்திசாலியைப் பொறா மையோடு எதிர்க்கிறார், தூஷிக்கிறார். இது அவர்களுக்குள் நடக்கும் லாபத் தாது சண்டை! ஆனால் ஜனங்களின் முன்பாகவோ அந்த ஜனங்களைமயக்கி ஓட்பெற முயலும் விஷயத்திலோ, இந்த இருதந்திரசாலிகளான ஜனத்த லைவர்களும் ஒன்றாகக் கூடிக்கொண்டு நேர்த்தியான'பட்டுக்குல்லா' போட்டு விடுகிறார்கள்! ஒரு தந்திரியை சட்ட சபை மெம்பராக்க—உயர்த்திவிட—

---

விரததினமென்று பிராமணர்களின் பலகாரக் கடைதேடிச் சென்றால் அங்குள்ள ஆபாசம் பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை யென்று திரும்பி விடத் தோன்றுகிறது. பிராம்மணரல்லாதார் கடையோ அதைவிட மோசம்.

இன்னொரு தந்திரி வெகு வேலை செய்து அதை நிறைவேற்றி வைத்து விடுகிறார். பிறகு இந்த தந்திரியையும் சட்ட சபையிலேற்றவோ உயர்த்தவோ—ஏற்கெனவே உயர்ந்து உட்கார்ந்துகொண்டுவிட்ட தந்திரி இனி தன் வேலையைச் செய்யத் தொடங்கி அந்தப்படியே முடிக்கிறார். இவ்விதமாக ஜனங்களை மயக்குவதிலே இரு தந்திரிகளும் ஒன்று கூடிக் கொள்கிறார்கள். ஆனால் தங்கள் சுயநல லாபத்தில் மட்டும் ஒருவரையொருவர் எதிர்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்வாறு தங்களின் லாபம்—பட்டம்—பிரவித்தி இவைகளுக்காக வேண்டி உள்ளுக்குள் உழைத்துக் கொண்டு, வெளியிலோ ஜனங்களுக்காகத் தேசத் தொண்டு புரிவதாய்ப் பசப்பி ஏமாற்றுகிறார்கள். உலகமும் இந்த வெளிப் படாடோபத்தில்மயங்கிப்போகிறது" என்று மாம்பழத்தேவர் தேசாபிமான மேற்பூச்சுகளை விவரித்து விடை பகர்ந்தார்.

***

"எண்ணங்கள் பெருகியவனுக்குத் தனக்கு வந்த தபால் கவரின்மீதெல்லாம் தன் மனதில் உண்டான புதிய சிந்தனையின் அலைகளை அவ்வப்போது எழுதி வைத்துக் கிறுக்கப் புத்தி போகு"மென்று பூந்திப்பிள்ளை புகன்றார்.

***

"ஒருவனுக்கு நல்லது செய்யாமற் போனாலும், அவனைப்பற்றிக் கெடுதலான செய்திகள் கேட்டு ஸந்தோஷப்படப் பலர் எவனுக்கும் உண்டு" என்று ஊறுகாய் முதலியார் ஊரில் நடப்பதை உரைத்தார். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

**பொன்வண்டு செட்டியார்.**

## உள்ளக் கிளர்ச்சியைப் பெருக்குதல்.

**நா**ம் பெற்றிருப்பவைகளைக் கொண்டு ஆநந்திக்கப் பழகுவோமானால் நமக்குண்டாகும் சுகத்திற்கு அளவில்லை. நாம் அடைந்திருக்கும் நன்மைகளைஉற்றுஉணர்வோமானால், அவை அநந்தமென்று ஏற்படும். நம்மைச் சூழ்ந்து எப்பக்கமும் கிடக்கும் ஈசனுடைய அற்புதச் செயல்கள் அளவிறந்தன. அவைகளைக் கண்டு மகிழும்படியான சாதனம் நம்மில் வேண்டும். குணவழகை நாடாமல் அல்ப விஷயங்களில் நமது நாட்டம் சென்றுகொண்டிருந்தால் மனத் தூய்மை யுண்டாகாது. துக்கமே அதிகரிக்கும். மனோ சாந்தி நம்மை முற்றும் கைவிடும். ஞானநந்தம் அளிக்கும் நூல்கள் பலவுள. இவற்றில் சிந்தைவைத்து நமக்குள் உள்ளக் கிளர்ச்சியை விருத்தி செய்துகொண்டு, நம்மையும் நம்மைச் சூழ்ந்தவர்களையும் சந்தோஷிப்பிக்க முயல வேண்டும்.

"நாதா! தாங்கள் கோபப்படுவதுகூட, எனக்கு அதுவும் ஒருவித அழகாய்த் தோன்றுகின்றதே; நான் என்னைத் திருத்திக் கொள்ளுகிறேன்—" என்று கூறித் தன் கணவனின் கடுஞ்சினத்தை மாற்றினாள் ஒரு கல்யாணி.




# ஏழையின் செல்வம்.

தன்னில் மிகுந்த திருப்தி நிறைந்த செம்மனச் செல்வனாகிய வறிஞனொருவன், தான் இயற்கையாய்ப் பெற்றுள்ள பல சௌகரியங்களையும் தனக்குள்ள பெரும் நிதியாகக்கொண்டு வாழ்வதைப்பற்றிக் கூறுவதாவது :—

உலகீர் எனையோ உரைத்தீர் எளியனா ?
நலமா அடியேன் † நண்ணுவன் சிலவே;
தருபொருள் பலவாம் தயவாம் இயற்கை
நறுமணக் காற்றும் நற்கதி ரொளியும்,
நன்னீர் தன்னொடு நாடுஞ் சுகமும்,
உன்னிக் களிப்ப உயரிய மனமும்
இன்னன பலவொடு என்னுடை நிதியே. (1)

† நண்ணுவன்—நாடுவேன்.

கருணை நிறைந்த இயற்கையானது தரும்பொருள் அநேகம். அவற்றுள் காற்று, வெளிச்சம், நீர் முதலியவைகளையும், அவைகளை அனுபவித்து இன்புறுதற்குக் கவலை இல்லா மனமும், நலம் வாய்ந்த தேகம் ஆதியனவும் நான் பெறும் பொக்கிஷங்களாக உள்ளன. இவ்வளவும் பெற்றுள்ள என்னை எளியவனாய்ச் சொல்லுதல் சரியோ ?

பெருநிதி சேர்த்த பிசுன னெவனும் யான்
† கருந்தனம் உடையனா கருதவும் மாட்டான்
பசுந்தளிர் சோலையும் பாய் நீர் ஆறும்
‡ விசும்பிடை கண்கவர் வியக்குங் காட்சியும்
வசியுமிட மெலாம் வழங்குமென் பொருளே. (2)

† கருந்தனம்—செல்வம்; ‡ விசும்பிடை—ஆகாயத்தில்.

பிறர்க்கு இம்மியும் கொடாது சேர்த்த செல்வத்தோடு கூடிய கருமி ஒருவன் நான் பெற்றுள்ள இயற்கையின் செல்வங்களை ஒரு செல்வமாகக் கருதான். ஆயினும், அச்செல்வவான் அடையக்கூடிய இன்பத்தைவிட ஏழையாகிய நான் இயற்கையின் மூலியமாகவே கொஞ்சமும் குறையாத பூரண அழகில் எதையும் கண்டு அநுபவித்து, அந்த இயற்கைக் காட்சிகளை என் பெரிய பொருட் குவியல்களாகக் கொள்ளுகின்றேன்.

பொருளால் உறுபயன் புந்தியின் மகிழ்வும்
பெருஞ்சுக முமன்றிப் பிறிதொன் றிலேயே
அவ்விரு பயனும் அடியேன் குடிலில்
செவ்விய சோலை செம்மன மனத்திலும்
உளவால்; வேண்டுமேற் றுளவோ இனியும்? (3)

பொருளால் வரக்கூடியவை மதிப்பும் பெருஞ்சுகமும் அன்றி வேறு ஒன்றும் இல்லை. ஆயினும், அவை இரண்டும் எனது சிறு குடிசையிலும், பசுமையான பற்பல விடங்களிலும், செம்மையான என் மனத்திலும் மலிந்து கிடக்கும்போது—இனி எனக்கு வேண்டியதும் வேறுண்டோ?

என்னையின் புறத்து மினிய மகிழ்வெலாம்
என்மனத் ததிலே இயல்பா உளவே
கனவிருள் அகற்றுங் கதிரவன் ஒளிபோல்
விலைகொடு வாங்கா விலையிலாப் பொருளாம்
பலர்க்கும் உரித்தாம் பகருங் காலே—
இன்னிசைப் பாணரும் ஏவல் ஆளரும்
கன்மலை யாறும் கானமும் வெளியும்
எல்லையில் நாடும் இனிதுளேன் யானே. (4)

† பாணரும்—பாடுவோரும்.

எனக்கு மகிழ்ச்சி இயல்பாகவே உண்டு. அது சூரியவெளிச்சம் போல் பலர்க்கும் விலையில்லாமல் எளிதில் கிடைக்கக்கூடியது தான். அது எல்லோருக்கும் உரியதே.

மேலும் சுதந்தரத்தோடு இன்னிசைக் குரலில் பாடும் பறவைகளது இனங்களை எனது கவிவாணராகவும், இயற்கையானது செய்யும் வேலையையே வேலைக்காரனொருவன் எனக்கிருந்து செய்யும் வேலையாகவும், இன்னுமுள்ள மலையாறு, அழகிய வனம், விசாலமான மைதானங்கள் முதலிய எல்லா இடங்களையும் என் பொருளாகவும் மதித்து மகிழ்வடையும் இனிமையிலுள்ளேன்.

பொன்னுள காலம் போற்றிச் சூழ்வர்
உன்னிய நண்பர் உறவினர் நேசர்—
அன்னவர் அனையபே ரன்பரும் அளவில்
என்னைக் காண்பர் ஏகனாய் இருப்பினும். (5)

செல்வம் இருக்கும்போது மட்டும் ஒருவனைச் சூழ்ந்துகொண்டு போற்றிப் பிறகு பிரிந்திடுந்தன்மையரான நண்பர் உறவினர் முதலோருங் கூட ஒருவனாய்த் தனித்துள்ள என்னைக் காண்பராகில், எனது கவலையற்ற ஏகாந்தத்தைப் பாராட்டி என்னோடு இனிது குலாவி மகிழாது போகார்.

† இருடியுங் தாதரும் ‡ மிருதிப் போதரும்
மோனச் சிரேட்டரும் ஞானப் பெரியரும்
முனிவரும் அடிகளும் கனிவோடு இசைக்குங்
கவிஞரும் எந்தனக்(கு) அவியா ஞானக்
குருவாம், தோழராம், வருநிலைக் கான
வழிகாட் டியுமாம் பொழிபே ரருளாம். (6)

† இருடியும்—ரிஷியும் ; ‡ மிருதி—ஸ்மிருதி.

மகான்களின் கொள்கைகளும், ஸ்மிருதி முதலியவற்றின் தத்துவங்களும், ஞானியர், முனிவர், அடியர், கவிஞர், முதலியோரும் எனக்கு ஞான பீடமாகும்; அவர்களே என் தோழருமாவார். நான் இனி உய்வதற்கான வழிவகையுணர்த்தும் அருட்கடலுமாவார். இவர்களெல்லாம் எனக்குக் குருவாம்.

இன்னும், எனக்குள * இன்குவை பலவும்
பிறநிதி அனைத்திலும் திறமுடைத் தாகும்
என்பொருட் டென்னை யன்பாக் கொள்வார்க்(கு)
என்னரு இதயம் என்றும் உளவாம்;
இன்னன பலவோடு துன்பிலா மனத்திடை
குளிர்ச்சியும், சகித்தற் களித்துள † ஆற்றலும்
நோயிலா வாழ்வும் ‡ மீயுயர் நீர்மையும்
பெற்றதற் பின்னும் சற்றுமே
எண்ணு ஏழையா எனையோ உரைப்பீர் ? (7)

* இன்குவை—செல்வம் ; † ஆற்றல்—சக்தி; ‡ மீயுயர்—மிகவும் உயர்ந்த.

என்னை ஏழை என்று தெரிந்தும் எவர் நேசிக்க நெருங்குகின்றார்களோ அவர்களிடத்தில் யானும் குறைவிலா நன்மதிப்பு உடையவனாக நடந்துகொள்வேன். இன்னும் எனக்குப் பலபல பெருமைகளுள்ளதுபோலவும் இன்புறுகிறேன். அத்துடன் அமைதியும், துன்பங்களை எல்லாம் சகித்தற்கான சக்தியும் எனக்கு இருப்பதால் தீரனாயும் வலிமைவாய்ந்தவனாயுமிருக்கின்றேன். இயற்கையின் இனிய புதல்வனாகவும் இருந்து, நோயற்ற வாழ்வுடையவனாகவும் உள்ளேன். இன்னும் பல நிதி படைத்தோரிலும் நான் மேலானவனாகக் காண்பதால், கவலையே இன்னதென்றறியாத ஆநந்த வாழ்க்கையினனாகிய என்னைப் பிறர் ஏழை என்றழைக்க இசைவதும் கூடுமோ ? அது பொருந்துவதும் யாங்ஙனே ? யான் பெற்றுள்ள இயற்கையின் செல்வத்திற்கு நிகரானது இவ்வுலகில் வேறு ஏது ?

இஃது Charles Mackay—சார்ல்ஸ் மாக்கே என்பவரால் இயற்றப்பட்ட—The poormans riches—'ஏழையின் செல்வம்' என்ற பாவின் மொழி பெயர்ப்பு. மு. துரைப் பிள்ளை.



# நமது கதாப் பிரஸங்கி.

(120-ம் பக்கத் தொடர்ச்சி.)

"சுந்தரேச சாஸ்திரி" என்ற பெயரைக் கேட்டதும் அவர் வடிவமும் அப்படித்தானா?" என்று நேயர்கள் வினவலாம். வெண்மயிரும், பசும்பல்லும் பானை வயிறும், கருநாவற்பழத்தின் திருநிறமும் உள்ளவர் சாஸ்திரிகள். அவருக்கு இதுவரை மனைவியர் மூவர். ஒருவராவது நமது சாஸ்திரிகளோடு சேர்ந்துவாழப் பாக்கியம் செய்தவரல்லர். மூவரும் தேவருலகு சென்றுவிட்டனர். தாம் செல்லினும் தமக்கு அடையாளமாக ஓர் பிள்ளை குட்டியையாவது வைத்துவிட்டுச் செல்லலாகாதா? அவைகளும் பிறந்தபொழுதே இறந்துவிட்டன. ஆனால் சாஸ்திரிகளுக்கு உரிமைத்தேவியர் அவ்வப்பொழுது தோன்றி மறையினும், பூமிதேவியும் லேவாதேவியும் பிரியாதிருக்கின்றனர். நமது சாஸ்திரிகள் எல்லோரைப்போல இலட்சணமில்லாவிடினும், எல்லாரைக் காட்டிலும் இலட்ச இலட்சமாகப் பொருள் குவித்திருக்கிறார். அவர் பார்வைக்குக் கிழவடிவமாகத் தோற்றினும், வயது அவ்வளவு அதிகமாகவில்லை. குறைந்தது 65-க்கு மேலிராது. இத்தகைய சாஸ்திரிகளுக்கு நான்காவது மனைவியாக்கப்பட்டாள் நமது குமுதவல்லி.

***

சில வருடங்களுக்குப் பின்னர் ஓர்நாள் முருங்கையூர்ச் சாஸ்திரிகள் தமது மாமனாரகத்துக்கு வந்திருந்தார். அதுபொழுது குமுதவல்லி அவரை யின்னாரென்றறிந்து கொள்ளாது அவர் முன்னாலேயே மாதவனோடு கல்வி சம்பந்தமாகவும், வேடிக்கையாகவும் பேசிச் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தாள். அதைக்கண்ட எதிர்வீட்டு இலட்சுமியம்மாள் குமுதத்தைத் தனியே யழைத்து, "ஏண்டி! குமுதம்! உன் புருஷனுக்கு முன்னாலேயே இப்படிச் சிரித்து விளையாடுவதுதான் மரியாதையா? ஐந்தில் வருவதுதானே ஐம்பதில் வரும்!" என்று புத்தி சொல்லியனுப்பினாள். குமுதத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. சரசரவென வீட்டிற்குள் சென்றாள். "வெளியே சோபாவின்மேல் சாய்ந்துகொண்டிருப்பவர் யார்?" என்று தன் தாயிடம் கேட்டாள்.

"அடி அசடே! பெண் பிள்ளையென்றாலும் உன்னைப்போலிருக்க வேண்டும். நல்ல வேளை! வேறு எவரிடத்திலும் கேட்காமல் என்னிடத்தில் வந்து கேட்டாயே, அவ்வளவுக்கு நீ கெட்டிக்காரிதான்" என்றாள் அவள் தாயார்.

குழதம்.—அவரை யாரென்று கேட்டால் என்னென்னமோ சொல்கிறாயே.

---

இஸ்லாமிய சகோதரர்கள் ஹிந்துக்களின் ஹோட்டலில் பேதசிந்தையின்றி அன்புடன் புசிக்க, ஹிந்துக்கள்மட்டும், கிறிஸ்தவருங்கூட, இஸ்லாமியர்களின் ஹோட்டலில் புசியாததென்னவோ?

**தா**யார்.—அவரை நீ இதற்கு முன்பு பார்த்ததேயில்லையா?

குமு.—தெரிந்திருந்தால் உன்னை யேன் கேட்கிறேன்? அவரைப் பார்க்கும்பொழுது முருங்கூர் "தொந்தி தாத்தா" மாதிரி யிருக்கிறார்.

**தா**ய்.—தொந்தி தாத்தாவா? அடி, முட்டாள்! அவர்தாண்டி உன் வீட்டுக்காரர்.

குமு.—என்ன? வீட்டுக்காரரா? என் வீடு எது?

**தா**ய்.—உன் வீடு முருங்கூரி லிருப்பது.

(குமுதம் திகைத்து நின்றாள்.)

**தா**ய்.—தெரியவில்லையா? சிறு பிள்ளைகளென்றாலும் இந்தக் காலத்திலே எவ்வளவு கருத்தாயிருக்கின்றன. உன்னைப்போலவா? உன் கழுத்திலிருக்கும் 'திருமங்கிலியம்' அவர் தரித்ததல்லவா? அவர்தான் உனது புருஷன்.

குமுதத்தின் தலையில் இடி விழுந்ததுபோலிருந்தது. ஒன்றும் பேசாது வெளியே வந்து, அங்கே நின்றுகொண்டிருந்த மாதவனைக் குறிப்பாய்க் கடைக்கணித்துச் சென்றாள். மாதவனும் பின் தொடர்ந்தான். ஊருக்குக் கிழ்த்திசையில் உள்ள ஒரு தோப்பை யடைந்தனர்.

**மா**தவன்.—குமுதம்! கருமுகிலால் சந்திரன் ஒளிமழுங்கித் தோன்றுவதுபோல, இருந்தது இருந்தாற்போல் உன் முகம் மந்தகாசம் குறைந்து பொலிவது என்?

குமு.—மாதவா! நம்மை ஆண்டவன் வஞ்சித்துவிட்டான்.

**மா**.—(திடுக்கிட்டு) என்ன? வஞ்சித்தானா? ஆண்டவனா? விஷயத்தைச் சொல்; என் நெஞ்சு பிளந்துவிடும் போலிருக்கிறது!

குமு.—(கண்ணிற் கலங்கும் நீரை மறைத்துக்கொண்டு) மனதைத்திடப் படுத்திக் கொள்ளுங்கள். ஆடவராகிய நீங்கள் தான் பெண்பாலாகிய எனக்குத் தைரியம் சொல்லவேண்டும். உங்கள் நிலைமையைப் பார்க்கும்பொழுதே எனக்குப் பயமாயிருக்கிறது. எப்படிச் சொல்வேன்?

**மா**.—இல்லை, குமுதம்! சொல்லு; எனக்கு எவ்வளவு துன்பம் வரினும் சகிப்பேன். உனக்குவரின் மட்டும் சகியேனே.

குமு.—நீங்கள்தான் அதற்கு என்ன செய்வீர்கள்? நம் செயலால் இனி ஆவதொன்றில்லை; எல்லாம் அவன் செயலே. துன்பம் தங்கட்கு வந்தால் என்? எனக்குமட்டும் வரின் என்? இருவரும் சேர்ந்துதான் அனுபவித்தல் வேண்டும். எனக் கூறித் தன திருகண்களையும் கையால் மறைத்துக் கண்ணீர் பெருக்கினாள்.

**மா**தவனுக்கு விஷயம் விளங்காவிடினும் குமுதம் அழுவதைக் கண்டதும் அவனுக்கும் அழுகை வந்துவிட்டது. எனினும், மனதைத் திடப்படுத்திக்கொண்டு, குமுதத்தின் கையைப் பிடித்துக் "குமுதம்! அழாதே; விஷயம் எதுவாயினும் எனக்கு இன்னதென்றறிவி. நீ முன்பு சொன்னதுபோல் எல்லாம் ஆண்டவன் திருவுள்ளம்." என்றான்.

---

தங்கையின் புருஷன் அவளுடைய தமக்கையின் புருஷன் வந்திருக்கையில், அந்த மனிதனின் நடத்தையை வெறுத்துத் தன் மனைவியை அங்கு அதிகம் போகாதிருக்கும்படி கண்டிக்கிறான். இந்த சண்டையே எவ்வீட்டிலும் |

குமு.—(தேம்பிய வண்ணமே) மாதவரே ; சிறுவயதில் நாம் ஆடிய ஓர் விளையாட்டு நினைவிருக்கிறதா ?

மா.—நாம் ஆடிய விளையாட்டு எத்தனையோ! அவற்றுள் எதை நான் நினைப்பது ?

குமு.—எதையா ? 'பொம்மைக் கல்யாண'த்தை !

மா.—(திடுக்கிட்டு) ஆம், ஆம். அதற்கென்ன ?

குமு.—(தன் கழுத்திலிருக்கும் தாலியைத் தொட்டுக் காட்டி) இது இன்னதென்று தெரிகின்றதா ?

மா.—இதை நீ இளவயதிலிருந்தே அணிந்துகொண்டிருக்கிறாயே ? தனக்கு மனைவியென்று பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட ஒருத்திக்கு அவன் அணியும் ஒரு திருமங்கல்யம் இது ! ஆனால் உனக்கு அழகுக்காக யாருடையதோ ஒன்றை அப்பொழுதிருந்து போட்டிருக்கிறார்கள்.

குமுதம் ஒன்றும் பதில் கூற இயலாது தேம்பித்தேம்பி யழுதாள். மாதவனுக்கு விஷயம் இன்னதென்று சிறிது விளங்கியது. எனினும் ஐயமுள்ள மனதோடு, " குமுதம்! நீ விஷயத்தைச் சொல்லாது அழுவது தான் எனக்குப் பெரும் வேதனையாயிருக்கிறது. எப்படியாயினும் நடந்ததைக் கூறு " என்றான்.

குமு.—ஐயோ! ஆதியிலிருந்து நீரும் நானும் கொண்டிருந்த எண்ணம் அவ்வளவும் தவறு. நாம் பகுத்தறிவில்லாப் பேதையாயிருந்தபொழுதே என் கழுத்திலிருக்கும் இத்தாலி எனது வீட்டில் இதுபொழுதிருக்கும் முருங்கையூரார் அணிந்ததாம்.

மா.—"ஐயோ! அழிந்தேன்" எனக் கூறி அப்படியே தரையில் உட்கார்ந்துவிட்டான். குமுதத்திற்கு அப்பொழுதிருந்த அவன் நிலைமையைப் பார்க்கப் பொறுக்க முடியவில்லை. அருகேயிருந்த ஓர் மாத்தினிடம் சென்று முறையிடுவதுபோல் அம்மரத்தின்மேல் முகம் வைத்துக் கண்ணீர் ஆறுய்ப் பெருக்கினாள். இங்ஙனம் நிமிஷம் பத்து சென்றன. மாதவன் அறிவு தெளியப் பெற்றுத் தன் அருகே குமுதத்தைப் பார்த்தான். காணவில்லை. நாற்புறமும் நோக்கினான். அங்கேயோர் மரத்தோடு மரமாய்ச் சேர்ந்து நிற்றலைக் கண்டான். ஓடிச் சென்று அவளுடைய முதுகைத் தொட்டு, 'குமுதம்! என்னைப் பார்! இனி வருந்திப் பயனில்லை. நாம் புரிந்த தவம் இவ்வளவு தான். ஐயோ! உனது கண்களென்ன இப்படிக் கோவைப்பழம் போல் சிவந்துவிட்டன! எனக்கு யார் எதைச் செய்யினும் அச்சமில்லை. உனக்கு ஒரு தீங்கும் நேராதிருக்க வேண்டுமே. ஆண்டவனே! என் குமுதத்தைக் காப்பாற்று" என்று அவளுடைய இருகையையும் பிடித்த வண்ணம் ஏங்கி நின்றான். குமுதம் பாவையென அசைவற்று நின்றாள். அவள் கண்களினின்றும் வடியும் நீர்த்துளிகள் அவள் மார்பில் முத்தாரம்போல் மின்னின.

மா.—குமுதம்! ஆண்டவன் திருவுளம் வேறாக முடிந்தது. இந்த ஏழையை இனிமேல் மறந்துவிடு.

---

தன் குமாரன் செய்யும் பிடிவாதத்தை முதலில் எதிர்த்த தந்தை பிறகு பாசத்தால் அதைத் தளர்த்திவிட்டு அவன் இஷ்டத்திற்கு இணங்கிவிடுகிறார்.

குமு.—ஐயோ! எங்ஙனம் மறப்பேன்? என் கதி யிவ்வாறுகுமென ஒரு சிறிதும் நினைத்திலேனே!

மா.—நான் இனி இவ்வூரிலிருப்பின் என்னைக் காணும்பொழுதெல்லாம் உனக்குப் பெருந்துயராய் முடியும். அதன்றி நீ உன் கணவரோடு சேர்ந்துவாழ உன் மனம் ஒரு நிலை பெருது அலைதற்கும் ஏழையேன் ஏதுவாதல் கூடும். அருபெறற் பாவாய்! அடியேற்கு விடை கொடு. நான் இவ்வுலகில் உள்ளவரை உன்னை யென்றும் மறவேன்.

“சின்னஞ் சிறிய பருவத்
திருந்து சிறுவரையும்
இன்னம் பிரிந்தறியேன் உனை
யேழை விதியுடையேன்
கொன்னே என் நெஞ்சம் கொடுந்
துயரால் நல்குரவடைய
மன்னு! உன் *முன்னமும் முன்னிய
வாறு மதியுடைத்தே.”

[*முன்னம்—உள்ளம். முன்னிய வாறு—நினைத்த வகை.]

என்று புலம்பி நின்ருள் குமுதம். மாதவனும் கண்ணீர் மாலைமாலையாக வடியத்தேம்பி நின்ருன். இதற்குமேல் இவ்விருவரும் சேர்ந்து நிற்க இறைவனுக்குப் பொறுக்கவில்லை. என்றும் இல்லாத புதிய கேள்வியைக் கேட்டுக் கலங்கிய மனதுடன் வெளியே சென்ற தன் மகளைக் காணவில்லையென்று தேடிவரும் குமுதத்தின் தாயாரைச் சிறிது தூரத்திற்கப்பால் கண்டான் மாதவன். “குமுதம்! இதோ உனது தாயார் உன்னைத் தேடிவருகின்ருர் போலும்! மனதைத் திடப்படுத்திக் கொள்; எனக்கு உத்திரவு தா. ஏழையர்க்கு என்றும் இறைவன் அருள் செய்வன். செல்கின்றேன்” எனக்கூறி அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமே சென்ருன். குமுதத்தின் தாயும் வந்து சேர்ந்தனள். வாடிய முகத்தோடு நிற்கும் தன் மகளைத் தனியே கண்டாள். “குமுதம்! நீ எதற்காக இங்கு தனியே வந்தாய்? யார் உனக்கு இவ்வித புத்தி கற்பித்தது?” என்று கேட்டாள். குமுதம் ஒன்றும் பேசவில்லை. “ஏண்டி! நான் கேட்கிறது ஒன்றும் உன் காதில் விழவில்லையா? உன் மனதில் உள்ளதை நீ சொல்லாமல் எனக்கு எப்படித் தெரியும்? என மீண்டும் வினவினள். குமுதம் அளவிறந்த துயரில் மூழ்கியிருப்பினும், தன்னை இக்கதியாக்கிய பெற்றோர்மேல் ஆத்திரம் மிக்கவளாய்த் “தெரிந்து நீ செய்யக் கூடியதென்ன?” என்று எதிர் வினவினுள்.

தாய்.—நான் செய்யக்கூடியதொன்றுமில்லையா? உனக்கு எல்லாம் தெரிந்துவிட்டதாக்கும்? என்று கூறுமுன்னரே, குமுதம் “உன்னுலும் ஆகாது, இன்னொருவராலும் ஆகாது. இனி நான் இவ்வுலகில் நடைப்பிணமே; என் உயிரும் நில்லா” எனக் கூறித் தன் வீடு நோக்கி நடந்தாள். தாயும் பின் தொடர்ந்தாள்.

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

---

எந்தப் பயங்கர நிலையிலும் தைரியத்தை விடாதவனே வீரன். எவ்வித துன்பத்திலும் துயரங்கொண்டு மனதைக் கெடுத்துக்கொள்ளாதவனே ஒரு அறிந்த அநுபவசாலி. சோதனை உலகு இது. உள்ளம் சோர்ந்திடாதே.

---

ஒரு மனிதனுக்கு வேருெரு வீட்டில் நடக்கும் உபசாரங்கள் திடீரென்று ஒரே தடவையில் நின்றுவிடுவதில்லை. தினம் ஒவ்வொரு உபசாரமாகக் குறைந்து வந்து கடைசியில் அந்த மனிதனே தானுகப் புறப்பட்டுவிடும்படியாகிறது.



# பெரியாரின் மொழிகள்



(98-ம் பக்கத் தொடர்ச்சி.)

## தாக்கரே (Thackeray) அவர்களின் மொழிகள்.

399. When you and your brother are friends, his doings are indifferent to you, when you have quarrelled, all his outgoings and incomings you know, as if you were his spy.

நீயும் உன்னுடைய சகோதரனும் சிநேகர்களாக இருக்கும்போது அவனுடைய செய்கைகள் உன் மனதிற்கு எட்டுவதில்லை. சச்சரவு நேரிட்டால் அவனுடைய போக்கு வரத்துக்களெல்லாம் வேவுகாரனைப்போல உனக்கு நன்றாகத் தெரிகின்றன.

400. The best of women are hypocrities. We don't know how much they hide from us: how watchful they are when they seem most artless and confidential: how often those frank smiles which they were so easily, are traps to eajole or clude or disarm.

பெண்களுள் சிறந்தவர்கள் வேஷதாரிகளாக இருக்கிறார்கள். நம்மிடமிருந்து அவர்கள் எவ்வளவு ஒளிக்கிறார்கள் என்று நமக்குத் தெரிவதில்லை. அவர்கள் மிகமிக பேதமையாகவும், அந்தரங்கமாகவும் தோன்றும்போது எவ்வளவு உசாராய் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வளவு சுலபமான அந்த வெளிப்படையான சிரிப்புகள் எத்தனைமுறை ஏய்ப்பதற்கும், தப்பித்துக் கொள்வதற்கும், நிராயுதனாக்குவதற்கும் படுகுழியாய் இருந்தன.

401. The success or the pleasure of yesterday become of very small account when a certain morrow is in view, about which all of us must some day or other be speculating.

நாம் எல்லோரும் மனதில் எண்ணிய ஒரு குறிப்பிட்ட எதிர்காலத்தோடு ஒத்து நோக்குங்கால் சென்றுபோன ஜெயமோ அல்லது சந்தோஷமோ வெகு அற்பமானதாக மாறிவிடுகிறது.

402. Recollection of the best ordained banquets will scarcely cheer sick epicures.

மிகவும் சிறந்ததான விருந்தின் நினைவு அதிக நோயுற்றிருப்பவர்களை சந்தோஷப்படுத்தாது.

403. Reminiscences of the most becoming dresses and brilliant ball triumphs will go very little way to console faded beauties.

மிகவும் மேலானதான உடுப்புகளும், சிறந்த நாட்டியக் கச்சேரியின் ஆர்ப்பரிப்பும், அழகு மங்கியவர்களைக் கொஞ்சம் கூடத் தேற்றாது.

404. The hatred of the vice is always a progress towards virtue.

குற்றத்தை வெறுப்பது எப்போதும் நற்குணத்தில் முன்னேற்றமடைவதாகும்.

405. The idea of staring poverty and privation in

company with the beloved object, is, as we have before said, far from being disagreeable to a warm-hearted woman.

வறுமையையும், துக்கத்தையும், தான் அருமையாக நேசிக்கும் கூட்டாளியோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணம் அன்புடைய பெண்களுக்கு வெகு இஷ்டம்.

406. What is the secret mesmerism which friendship possesses, and under the operation of which a person ordinarily sluggish, or cold, or timid, becomes wise, active, and resolute, in another's behalf?

சிநேகத்தின் ரகசிய வசீகரணந் தான் என்ன? அதனுடைய இயக்கத்தால் சோம்பலும், கோழைத்தனமும், பற்று இல்லாமையுமான ஒரு மனிதன், மற்றவர் நிமித்தம் புத்தியுள்ளவனாகவும், ஊக்கம் உள்ளவனாகவும், ஸ்திரமானவனாகவும் மாறிவிடுகிறான்.

407. When don't ladies weep? At what occasion of joy, sorrow, or other business of life? and, after such an event as a marriage, mother and daughter were surely at liberty to give way to a sensibility which is a tender as it is refreshing. How much more do they feel when they love? Good mothers are married over again at their daughter's weddings.

எப்பொழுது ஸ்திரீகள் அழாமலில்லை? சந்தோஷ காலத்திலா, துக்க நேரத்திலா, அல்லது மனித வாழ்க்கையில் வேறு எந்த வேளையில்? அவர்கள் ஒருவரை நேசித்தால் அதை அவர்கள் அதிகமாக உணர்கிறார்கள். தங்கள் மகளுக்குக் கல்யாணம் ஆகும்போது மறுபடியும் தங்கட்கே கல்யாணம் ஆவதுபோல் சந்தோஷப்படுகிறார்கள்.

408. Wounds tingle most when they are about to heal.

ஆறுகிற சமயத்தில் தான் புண்கள் மிகவும் அதிகமாக வலியுண்டாக்கும்.

409. The hidden and awful Wisdom which apportions the destinies of mankind is pleased so to humiliate and cast down the tender, good, and wise; and set up the selfish, the foolish, or the wicked.

மனிதவர்க்கத்தின் விதிஸய ஒழுங்காக்கும் கடவுளின் அறிவானது, இணக்கமுள்ளவர்களையும், நல்லவர்களையும், அறிவுள்ளவர்களையும், தாழ்மைப்படுத்துவதிலும், சுயநலமுடையவர்களையும், புத்தி இல்லாதவர்களையும், துன்மார்க்கர்களையும், தூக்கி வைப்பதிலும், பிரியப்படுகிறது.

410. Be humble in your prosperity! Be gentle with those who are less lucky, if not more deserving. Think, what right have you to be scronful, whose virtue is a dificiency of temptation, whose success may be a chance, whose rank may be an ancestor's accident, whose prosperity is very likely a satire.

உன்னுடைய நல்ல அதிருஷ்ட காலத்தில் தாழ்மையாக இரு. உன்னை விடக் குறைந்த அதிருஷ்டவாளிகளிடத்தில் (தகுதி அற்றவர்களாக இருந்தாலும்) நல்லவனாக இரு. ஆசை அற்றதால் உண்டான நற்குணங்கள், அதிர்ஷ்டவசத்தால் வந்த ஜெயம், மூதாதைகளால் வந்த அந்தஸ்து இவைகளையுடைய உனக்கு மற்றவர்களிடம் அவமரியாதையாக இருக்க என்ன அதிகாரம் உண்டு என்று நினை.

(தொடரும்.)

ப. கோ. குலசேகரன்.



# பிரபஞ்ச நவீனங்கள்

1. எச். ஓ. டி. சிகிரேவ் என்பவர் (H. O. D. Segrave) கோல்டன் ஆர்ரோ (Golden Arrow) என்னும் அவருடைய மோட்டார் வண்டியில் ஒரு மணிக்கு 240-மைல் வீதம் சென்றாராம். இதுதான் உலகத்தில் வெகு வேகமானது.

2. கொஞ்சம் வயதானவர்கள் சுலபமாகப் படிப்பதற்கு ஒரு கருவி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 6"X4"—அளவில் இடை வெளியுள்ள ஒரு கருப்பு ரப்பர் துண்டை, இடைவெளியைப் படிக்கும் வரியின் மேல் வைக்க மீதியை மறைத்து அவ்வரியை மாத்திரம் ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டுகிறது. இப்படிப் படிப்பதால், வாசிப்பதற்கு சுலபமாக இருப்பதோடு கண்ணுக்குக் கெடுதியும் விளைவிப்பதில்லை.

3. குற்றவாளிகளைக்குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில், அவர்கள் உண்மையே பேசும்படியாக, 'ஸ்கோபோலமின்' (Scopolamin) என்னும் ஒரு மயக்க மருந்தைக்கொண்டு செய்யலாமென்று அமெரிக்காவில் டெக்ஸாவிலுள்ள டாக்டர் ஹவுஸ் (Dr. H. R. House) சொல்லுகிறார்.

4. இப்போது அமெரிக்காவில் பாலைப் பத்திரப்படுத்துவதற்கு கண்ணாடி புட்டிக்குப் பதிலாக 'ஸ்புரூஸ்' (Spruce) என்ற மரத்தின் நாரினால் செய்யப்பட்ட கடுதாசிகளாலாகிய புட்டியை உபயோகப்படுத்துகிறார்கள். இந்த நவீன புதிய புட்டிக்கு 'சீல் கோன்' (Seal Cone) என்று பெயர்.

5. கண்ணாடியை உலோகத்தோடு சேர்த்து பத்தவைப்பதை, உதாரணமாக, பித்தளையோடு சேர்த்து பத்த வைக்கும் முறையைக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. முதலில் கண்ணாடியின் மீது வெள்ளியத்தைத் தடவி பின்பு எந்த லோகத்தை வேண்டுமானாலும் அதன் மேல் பத்த வைக்கலாமாம்.

6. உடைக்கமுடியாத கண்ணாடி இப்போது கண்டுபிடித்திருக்கிறார்களாம். 'பைராக்ஸிலீன்' (Pyroxylin) என்னும் வஸ்துவை, இரண்டு கண்ணாடித் தட்டுகளுக்கு இடையில் இறுக்கமாகப் பிடித்திருப்பதினால் செய்யப்படுகிறது. இந்த விதத்தில் அனேக மாறுதல்களும், விருத்திகளும் செய்திருக்கிறார்கள். துப்பாக்கியால் சுட்டால் கூட உடையாதாம்.

7. சில ரசாயன வஸ்துக்களால் தாவர வஸ்துக்களுக்கு அதிக சுறுசுறுப்பை உண்டாக்கிக் காலத்திற்கு முன்பே பலன் கொடுக்கும்படி செய்கிறார்களாம். உதாரணமாக ஹெதிலியன் க்லோரோ ஹைட்ரீன் (Ethylene Chloro Hydrin) என்னும் ஒரு ரசாயன வாயுவின் உபயோகத்தால், உருளைக் கிழங்குகளை அதற்குரிய காலத்திற்கு இரண்டு மாதத்திற்கு முன்பே பலன் கொடுக்கும்படி செய்கிறார்களாம்.

ப. கோ. குலசேகரன்.

---

வீட்டில் எவருக்கு அதிக மரியாதை கொடுக்கப்படவேண்டுமோ அவர்களைக் குடும்பத்தலைவர்கள் கேவலம் செய்வது பெரிய பிசகும் தவறுதலுமாகும். அதனால் குடும்பக் கௌரவமே குலைந்து பிறர் அதிகாரம் அதிகமாகிறது.



# ஹாஸ்ய சஞ்சீவினி



**காசு மாலை:—**

**மனைவி:**—கழுத்தில் காசு மாலையைக் காணோம். வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள். நான் குளிக்கப்போனபோது— — —

**கணவன்:**—குளிக்கப்போனபோது எங்கே கழற்றிவைத்தாய்? இதற்குள் யாராவது எடுத்து மறைத்திருப்பார்கள். சரி தொலைந்ததா?

**மனைவி:**—கழற்றி மாமி கழுத்தில்தான் போட்டிருக்கிறேன். இதோ வாங்கி வருகிறேன்.

* * *

**சஷ்டி பூர்த்தி:—**

**மருமகள்:**—வாருங்கள் மாமி, உங்கள் மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் போய் உட்காருங்கள். ஒற்றைக்கண்ணால் அவரைப் பார்க்காதீர்கள். நன்றாகக் குனிந்து உட்காரவேணும்.

**மாமி:**—ஏது நீ பெரிய கிழவியாய்விட்டது? உன் அதிகாரம் பலமாயிருக்கிறதே?

**மருமகள்:**—ஆம், நான் இப்போது மாமி. நீங்கள் என் மருமகள்!

* * *

**மூக்குத்தூளின் பைத்தியம்:—**

**நாணு:**—மணியோ பத்து, ஒரு கடையும் இருக்காது. உன் பொடியில் கொஞ்சம் என் டப்பியில் போடு.

**கோபு:**—இந்நேரத்தில் ரூபாய் கிடைக்கலாம், பவுன் கிடைக்கலாம், ஒரு கண்ணாட்டியுங்கூடக் கிடைக்கலாம். ஆனால் பொடி கிடைப்பது மகா கஷ்டம். உன் டப்பியில் கொட்ட முடியாது. ஒரு சிட்டிகைப் பொடி வேண்டுமானால் கையில் வாங்கிப்போ.

* * *

**கணவனின் விடை:—**

**மனைவி:**—"அடி, என் கண்ணே" என்று அழைப்பது போல், "அடா! என் பிராணநாதா" என்று ஏன் அழைப்பதில்லை? அப்படி அழைத்தால் எவ்வளவோ அழகாயிருக்குமே!

**கணவன்:**—"அடா! குழந்தாய்" "அடா தம்பி" என்று அழைத்தால் அது அங்கு அன்பைக் காட்டும். அடி—அடா என்ற பதங்கள் தம்மிலும் சிறியோர்க்குமட்டுமே கேவலமாகவோ அன்பாகவோ வழங்குதற்கு உதவுகின்றன. இப்பதங்கள் தன்னிலும் மூத்தவர்கட்குச் சொல்லப்படுவதில்லை.

---

தான் போயிருக்கும் இடத்தில் தனக்கு வேண்டியவர்கள் வெளியூருக்குச் சென்றுவிட்டால், தனது சக்தியும் அதிகாரமும் பலஹீனப்பட்டுவிடுகிறது.

# குழந்தைகள் பக்கம்

## ஒருமித்த மூன்று வகைகள்.

1. அரசன், தேவன், மாக்-கள்
2. ஆக்கல், காத்-தல், அழித்-தல்
3. ஆதி, மத்தி-யம், அந்-தம்
4. இயற்-றமிழ், இசைத்-தமிழ், நாடகத்-[தமிழ்
5. இறந்-த காலம், நிகழ் காலம், எதிர் [காலம்
6. காற்று, பூமி, ஜலம்
7. சாக்-கிரம், சொப்-பனம், சுழித்-தி
8. சீவ ஜெந்து, பூண்டு-கள், உலோ-கங்[கள்
9. சுக்கு, மிளகு, திப்பிலி
10. சேரன், சோழன். பாண்டி-யன்
11. தன்மை, முன்-னிலை, படர்க்-கை
12. தாழிசை, துறை, விருத்-தம்
13. தூலம், சூக்கு-மம், கார-ணம்
14. நீளம், அக-லம், பரு-மன்
15. பட்சி, மிருகம், மீன்
16. மனம், வாக்கு, காயம்
17. முதல் நூல், வழி நூல், சார்பு நூல்
18. வாதம், பித்-தம், சிலேட்-டுமம்
19. சத்து-வம், இராஜ-சு, தமசு
20. சந்தி-ரன், சூரி-யன் அக்-கினி

ராதா
சீதா
தாதா
நாதா
தேவா
வாசா
மாமா
ராமா
பாமா
ஈசா
பாபா
நீதி
வீதி
பாதி
சேதி
ஆதி
பால்
கால்
வால்
நூல்

## கம்பன் பிறந்த தமிழ் நாடு.

(தொடரும்.)

# சிறுமணித்திரள்

(112-ம் பக்கத் தொடர்ச்சி.)

564. எந்தப் பக்கத்திலிருந்து எப்போது எவ்வித அபாயம் நேருமோ, முன்னதாக அதைச் சொல்வதெப்படி ?

565. நமக்கு மிகவும் இணங்கியவள் போல் தனது முகபாவனையிலும் ஸரசரூபமான அபிநயனத்திலும் தன்னைப் புலப்படுத்திக்கொள்கிற ஒரு ஸ்திரீ, யதார்த்தத்தில் நம்மை அப்படி விரும்பியவளாக இல்லாமற் போய் விடுகிறாள்.

566. பெண்களிடத்தில் நாம் கொண்டுவிட்ட காமசூசகமான எண்ணங்களால், நமக்கு நாமே—அவள் நம்மைக் காதலிப்பதாக—மோஹிப்பதாக—தப்பான விதமாய் அர்த்தம் செய்து கொண்டு வீண் அவஸ்தைக்குள்ளாகிறோம்.

567. நம்மைத் தனது பிரேம வஸ்துவாக — தனது அபீஷ்டங்களுக்கு ஆசைகளுக்கு நாயகமாக,— ஒரு பெண்மணி நம்மை நினைத்து ஸதாகாலமும் அதே தியான வழியாக அவள் இருக்கிறாள் என்பதை நாம் உணர்வதற்கில்லாமற் போனாலும், அவள் நம்மீதுகொண்டுள்ள, காட்டியுள்ள பாசம், ஆவலாதிகள் அனைத்தும் யதார்த்த ரூபமானதென்றே பிறகு தெளிவாய் ஏற்பட்டுப் போகிறது.

568. நம்மைப் பிரேமித்த ரமணியின் அந்தரங்க சிந்தனைத்தியானம் நமக்கு ஏன் புலப்படாமற் போயிற்று ? ஆகவே, நம்மை ஜகத் கர்த்தாவாகக் கருதிக்கொண்டு ஸர்வமுமே அறிந்து கொண்டு விட்டதான பான்மையில்- அக்ஞானந்தகாரத்தில் நம்மை மூழ்குவித்துப் பிழைபட்ட எண்ணம் கொள்ளக்கூடாது.

569. சந்தோஷமான வாழ்வில் கண்ணெச்சில் பட்டு எத்தனை பேர் பாழாயிருக்கிறார்கள் ?

570. உயிரோடுள்ள காலத்திருந்த பிரகாசம்—ஒருவிதஜோதி— ஆவி பிரிந்ததும் அந்தோ நீங்கி விடுகிறது. உயிரிழந்த உருவினை ஒவ்வொரு மணி நேரத்திலும் ஒவ்வொரு போட்டோபடம் பிடித்துப் பார்ப்பின் ஒன்றினும் ஒன்று மிகு கேவல ரூபமாக மாறுகின்றது.

571. ஒருவன் பிணி வசப்பட்டுப் பாயில் வீழ்ந்தவுடன் அவனது முகத்தின் அழகு குன்றிப்போய்விடுகிறது —விகாரமாகிறது. குற்றவாளியாய் அகப்பட்டுக்கொண்ட நிரபராதியின் வதனமும்கூட குற்றம் செய்த கைதியின் முகம்போல் வேறுபடுகிறது.

572. இறந்தபின்பும், நோய் வசப்பட்ட பின்பும் எடுக்கிற பொட்டகிராப் படத்துக்கும், சுகமாக இருக்குங் காலத்திலும், வியாதியில் விழா முன்னமும் எடுத்த படத்துக்கும், எவ்வளவோ பேதம் கற்பிக்கப் படுகின்றன.

573. பால்யத்திலிருந்து யௌவனத்தில் முகபாவம் வித்தியாசம் அடைவதுபோல், யௌவனத்திலிருந்து வார்த்திகத்தில் அத்தனை மாறுபாடு அடைவதில்லை.

(தொடரும்




# ஸ்ரீமதி ஜோசேப் கான்ராடின் அநுபவங்கள்.

எனது கணவர் ஒரு பழைய வீட்டில் ஒரு இருட்டு அறையில் வேலை செய்து கொண்டிருந்தார். மேஜைகளின் மீது அவர் எழுதின காகிதங்கள் எங்கும் அடுக்கப்பட்டிருந்தன. விளக்கு இரவில் வெகு நேரம் வரை எரிந்து கொண்டிருக்கும். அக்காலத்தில் அவருடைய காகிதங்களைத் தொடுவதே ஒரு பெருங்குற்றமாயிருந்தது. தலைகீழாய்க் கிடக்கும் புஸ்தகங்களை அப்புறப்படுத்துவதும் கிடையாது. காகிதங்களைக் காற்று அடித்துத் தள்ளாதபடி, யாராவது ஒருவர் பாரக்கல் கொண்டு வந்து கொடுத்தால் அது அவருக்கு மிகுந்த உதவியாகத்தான் இருந்திருக்கும். நான் அப்படிச் செய்கிறதாவது, அறையைச் சுத்தம் செய்கிறதாவது அவருக்கு முற்றிலும் பிடிக்காது. **எனது 30-வருஷ அநுபோகத்தில் ஒரு கதாசிரியருக்கு ஏகாந்தமே அவசியமெனத் தெரிகிறது.** என் அநுபவத்தில் அநேக விஷயங்களைக் கற்றறிந்திருக்கிறேன். ஒரு பெண், ஒரு ஆசிரியரது மனைவியாக வரும்பொழுது அவள் அத்தகைய கடமைகளைச் செவ்வையாய்ச் செய்ய வேண்டும். தனி இடம் மிக அத்தியாவசியமானது. நான் ஒரு ஆசிரியரைப் பார்த்திருக்கிறேன். அவருடைய படுக்கையறை சமையல் அறையைவிடச் சிறியதாயிருந்தது. மற்றொரு ஆசிரியரைக் கவனித்தேன். அவர் ஒரு பெரிய அறையை விரும்பினார்.

என்னுடைய கணவருக்கு ஒரு பௌண்டன் பேனாவைக் கொடுத்தாலும், அதை மறுத்துவிட்டு மைக்கூட்டில் மூக்கி எழுதும்படியான சாதாரணப் பேனாவை விரும்புவார். ஆசிரியர்களின் மனைவிமார் இவைகளை ஞாபகத்தில் வைக்க வேண்டுகிறேன்.

உன் கணவன் தொழிலைப்பற்றிப் பொறாமை கொள்ளாதே. அவர் தனியாக உட்கார்ந்து கொண்டு வேலை செய்யும்போது தொந்தரவு கொடுக்காதே. அவர் எழுதிக் கொண்டிருக்கும் பொழுதாவது, அல்லது அவர் இல்லாத சமயங்களிலாவது அவருடைய காகிதங்களைத் தொடவும் கூடாது. வேலை செய்யாதிருக்கும் பொழுது அவர் அறைக்குள் சென்று சுத்தம் செய்கிறதாவது கூடாது.

---

இளமையிலேயே உலகை வெறுத்த சொல் புறப்படுவது ஏன்? சகித்துத் தாங்கமுடியாத துயரத்தாலும், ஓயாத வீட்டுச் சண்டையின் வேதனையாலுமே,

அவர் வேலைக்காரியின் அஜாக்கிரதையினால் ஒரு பொத்தான் தொலைந்துவிட்டது என்று சொல்லும்பொழுது நீ அதை அவருடைய கழிவுதாள் கூடையில் கண்டாலுங்கூட சொல்லாதே. அந்த நேரத்திற்கு அவரது வார்த்தைக்கு வணங்கி நின்று பிறகு மெதுவாக அதை எடுத்துக்கொடு. அவருக்குப்பணிவிடை செய்வதிலும், சாமர்த்தியமாய் நடந்து கொள்வதிலும் தவறாதே. நீ அவருடைய அறைக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டாலும் கூட அதையும் மிதமாய் உபயோகி. அவருடைய கருணையைப்பெறவாவது, அல்லது அவரைத் தூஷிக்கவாவது அறைக்குள் செல்லாதே. இவைகளெல்லாம் ஒரு பெரிய மனிதன் அல்லது விவேகியின் மனைவியாக இருக்க விரும்பும் ஒரு பெண்மணி கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களாகும்.

ஒருவருடைய புஸ்தகத்துக்கு மிகுந்த மேன்மை உலகத்தில் இருக்கும் பொழுது அவர் அப்புஸ்தகத்தை எழுதும் சிந்தையிலேயே தமது கவனத்தையெல்லாம் செலுத்திவிட்டுத் தன்னுடைய மனைவிக்கு வேண்டிய சௌகரியங்களையோ, சிநேகிதர்களைப்பற்றியோ நினைக்க அடிக்கடி மறந்து விடுகிறார். இது மனைவியின்மேல் பாசம் இல்லாமையென்றும், அக்கரை இல்லாமையென்றும் சொல்ல முடியாது. கதையின் ஆசிரியனும், சங்கீத வித்வானும் எப்பொழுதும் ஆழ்ந்த யோசனையிலேயே இருக்கின்றார்கள். நாளாவட்டத்தில் தன் வீட்டில் இன்னொரு ஆத்மா இருக்கிறதென்பதைக் கூட மறந்து விடுகிறார்கள். அவர்கள் இம்மாதிரி சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் பொழுதுதான் சில மனைவிமார் சண்டைக்குக் கிளம்புகிறார்கள். அப்படிச் செய்வது சிந்தனையைக் கலைப்பதேயாகும். அதனால் உலகத்துக்கு மிகுந்த துன்பமும், நஷ்டமும் ஏற்படுகிறது.

ஒரு ஆசிரியருடைய புஸ்தகத்துக்கு மிகுந்த மதிப்பு ஏற்படும் பொழுது, அவருடைய மனைவிக்கும் மிகுந்த பெருமை ஏற்படுகிறது. ஒரு ஆசிரியருக்குத் தொந்தரவு கொடாமல் அவருடைய மனைவி பல வழிகளால் சிறப்பை அடையக்கூடும். இன்னும் அவர் செய்யும் வேலையின் பெருமையைத் தான் உணர்ந்திருப்பதாக மனைவி, புருஷனுக்குக் காட்டவும் வேண்டும். அவருக்கு வீட்டில் துன்பம் இல்லாதிருக்கும்படி செய்தால் தனது மற்றத் துன்பங்களெல்லாம் நிவர்த்தியானது போலாகும்.

கி. திருவேங்கடப்ப நாயுடு.

---

தந்தையின் கௌரவம் அவர் வரைக்குமே. அது அவர் பெண்ணை மணந்த மாப்பிள்ளையிடம் செல்லாது. தன் வீட்டுக்குத் தன் மகள் வராதபடி மாப்பிள்ளை தடுப்பின் தந்தை செய்வது ஒன்றுமில்லை. அவரது கௌரவங்கள் முதலியனவெல்லாம் மாப்பிள்ளையின் முன்பு பயன்படுவதில்லை.

இன்னொருவருக்காகவென்று குடும்பத்திலுள்ள ஒருவனைக் கவனிப்போர்கள், அந்த இன்னொருவர் எங்காவது சென்று விடும்போது, அந்த ஒருவனைச் சிடுசிடு என்றுபட்டு நோக நோக மிஞ்சிப் பேசி வெறுக்கிறார்கள்.

நம்பவேண்டியவர்களை நம்பாமல் எவரெவரையோ நம்புகிறார்கள். கடைசியில் நம்பாதுபோனவர்களே தங்களை அலக்ஷியம் செய்ததையும் மறந்து உதவி செய்ய முன்வருகிறார்கள். இப்படி வந்தும் அன்பு காட்டக் காணோம்!

# ரகர—றகர பேதங்கள்.

(117-ம் பக்கத் தொடர்ச்சி.)

89. **திரம்**—நிலை, **திறம்**—வலி, (89) ஐதருக்கு இங்கிலீஷ்காரரை ஜெயிக்கத் திறமில்லாமல் போனபோதும் தானே திரமாய் யுத்தகளத்தில் பாளயம் இறங்கினர்.

90. **திரை**—கடல், **திறை**—அரசிறை. (90) நம் அரசனுக்குத் திறை கொண்டுபோகத் தரைவழியிலும் திரைவழியில் சீக்கிரம் போய்ச் சேரலாம்.

91. **துரத்தல்**—செலுத்தல், **துறத்தல்**—நீக்கல். (91) நான் ஏழைகளுக்குப் பிச்சை துரத்தலை அவன் பாவி துறக்கச் செய்தான்.

92. **துரவு**—கிணறு, **துறவு**—நீங்கல். (92) துரவில் விழுந்து கிடந்தவனைத் துறவப் பண்ணப் பிரயத்தனமெல்லாம் பண்ணியும் மாளவில்லை.

93. **துரு**—களிம்பு, **துறு**—துறுகல். (93) துருப்பிடித்த கம்பியைக் குளாயிற் றுறுவின் சிக்கும்.

94. **துருவல்**—கடைதல், **துறுவல்**—புசித்தல். (94) இந்தப் புஷ்பத்தைச் சட்டியிற் போட்டுத் தேன் விட்டுத் துருவிக் காலை மாலை இருபொழுதும் துறுவல் இந்த நோய்க்குக் குணம்.

95. **துரை**—அதிகாரி, **துறை**—நீர்த்துறை. (95) ஊைமன் துரை காவிரியாற்று வெள்ளக் காட்சியைப் பார்க்கத் துறையில் வந்து நின்றார்.

96. **தூரல்**—துன்பம், **தூறல்**—மழை. (96) ஜனங்கள்படும் தூருக்குத் தக்கபடி நேற்றிரவு சற்று தூறிற்று.

97. **தெரித்தல்**—சொல்லுதல், **தெறித்தல்**—தெறிக்குதல். (97) அவன் என் விஷயத்தில் இச்சங்கத்தில் எடுத்துத் தெரித்த வகை எல்லாம் தெறித்துப் போயிற்றேயன்றி நிலையாயில்லை.

98. **நரா**—தழும்பு, **நறா**—கள். (98) மரம் நராவுறச் செய்யாவிடின் நறா அதினின்றும் ஒழுகாவாம்.

99. **நரை**—வெண்மை, **நறை**—கள். (99) நறையானது நரை நிறமாயிருக்கும்.

100. **நாரி**—பெண், பன்னாடை வாசனை, **நாறி**—கற்றாளை. (100) நாரியற்ற (வாசனையில்லாத) நாறியைக் கொண்டுவந்து நாரி (பெண்) ஒருத்தி துண்டுதுண்டாய் அறுத்து நாரியில் (பன்னாடையில்) வைத்துப் பொதிந்தாள்.

101. **நிரை**—பசுக்கூட்டம், **நிறை**—மாட்சிமை. (101) நிறை தங்கிய உத்தியாவனத்தில் நெருங்கி நின்ற நிரைக்கூட்டங்களைக் கண்டு மிரண்டான்.

102. **நிரைதல்**—வரிசையாதல், **நிறைதல்**—நிறைவு. (102) தண்ணீர் நிறைந்த செப்புக் குடங்களை இத் திண்ணையின்பேரில் நிரையாய் வை.

104. **நேரி**—நேரிவு, **நேறி**—நீதி. (104) ஏழையை வரிப்பணம் செலுத்தவில்லையென்று கிட்டி போட்டு நெரித்தல் நெறியன்று.

105. **பரத்தல்**—பரவுதல், **பறத்தல்**—பறக்குதல். (105) வேர்கள் நன்றாகப் பரத்து வளர்ந்திருந்த மரத்தில் பறவைகள் பறந்து வந்து உட்கார்ந்தன.

(தொடரும்

# சாஸ்திர நுட்பங்கள்

(48-ம் பக்கத் தொடர்ச்சி.)

இது "முற்றிற்று" என்று முன்பு தெரிவிக்கப்பட்டிருப்பினும், சமயம் வாய்க்கும் பொழுது எழுதத் தடையில்லை.

168. சிருஷ்டியில் இயற்கை யென்பது கண்டிதவாதி. அதன் சாதனங்களை அனுசரிக்கிறவர்களுக்கு ஐசுவரியமும், அசட்டை பண்ணுகிறவர்க்குத் தரித்திரமும் அழிவும் லபிக்கும். எதுவும் வீணுகப்போவது என்பது இயற்கையின் கோட்பாடுகளில் இல்லை. செடிகள் மண்ணினுலும் காற்றினுலும் போஷிக்கப்படுகின்றன. அது மடிந்தபிறகு அதன் அங்கங்கள் வெவ்வேறு பதார்த்தங்களாகப் பிரித்து மண்ணிலிருந்து கிரகித்தவை மண்ணுக்கும், காற்றிலிருந்து கிரகித்தவை காற்றுக்கும் சேர்க்கப்படுகின்றன. இவ்வியாபாரத்தில் இயற்கையானது ஒழுங்குக்கு முறணுக ஏறுவதும், தாழுவதும் கிடையாது. பாரபக்ஷமில்லாமலும், தாக்ஷணியமில்லாமலும் இயற்கையில் வேலைகள் ஒழுங்காய் ஒன்றுபோல் நடந்தேறி வருகின்றன. ஆகவே, யார் இயற்கையின் சட்டப்படி நடக்கப் பிரயத்தனப் படுகிருர்களோ அவர்களுக்குக் கூடியமட்டும் உதவி புரிகின்றது. இயற்கையை மீறுவோர் பயங்கரமான கண்டனை தண்டனை பிணிகளுக்கு உள்ளாகிருர்கள்.

169. பூந்தொட்டிகளை முதலில் கார்பாலிக் ஜலத்தில் கழுவவேண்டும். பிறகு அதன் அடியில் ஒரு துவாரம் இடவேண்டும். துவாரத்தின் மேல் ஒரு பானையோட்டை வைத்து மூடி கொட்டைப்பாக்களவு கல்லுகளையும் கரியையும் இரண்டு அங்குல கனம் போடவேண்டும். அதன்மேல் மணல் ஒரு அங்குலம் போடவேண்டும். பிறகு 2-பாகம் செம்மண் அல்லது தோட்டக்கால்மண்; கால்பாகம் மட்கிய இலை எரு; கால்பாகம் மட்கிய மாட்டு அல்லது குதிரை எரு; கால்பாகம் மணல்; இவைகளைப் போட்டு செடிகளை நடவேண்டும். தொட்டிகளைத் தலைகீழாகத் திருப்பிப் பார்க்க வடிவு கால் துவாரத்தில் வேர்படந்து வந்தால் அச்செடியை மாற்றுவது அவசியம். நிலத்திலிருந்து பிடுங்கிய செடிகளை உடனே தொட்டியில் புதைக்கவேண்டும். தொட்டியில் ஜலம் நின்ருல் செடி கெட்டுவிடும்.

170. எலுமிச்ச ரஸத்தைச் சுண்டச் செய்வதில் ஒரு பாகம் புளிப்பு அற்றுப்போகிறது. ரஸம் கொதிக்கும் சமயத்தில் சாதாரண சுண்ணும்பு நீற்றை நீராவியந்திரமூலம் சேர்த்து "சிட்ரேட் ஆப்லைம்" என்னும் சூரணம் செய்யப்படுகிறது. ஸிஸிலித் தீவிலிருந்து இங்கிலாந்துக்கு 3000-டன் சூரணம் போகிறது. சுண்டக் காய்ச்சின சாற்றைவிட இதனுல் புளிப்பு அதிகம் கிடைக்கிறது. இங்கிலாந்தில் வருஷத்தில் 6000-டன் இச்சூரணம் செலவாகிறது. இதன் விலையோ 75-லக்ஷம் ரூபாய்.

171. இப்பிரபஞ்சம் 64-வஸ்துக்களால் ஆக்கப்பட்டுள்ளதாம். இவை பூதங்களாகவும் (Elements) உலோகங்களாகவும் (Metals) பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவை அநேகமாய்த் தனித்திருப்பதில்லை. சாதாரணமாய் இரண்டு மூன்று வஸ்துக்கள் ஒன்றுபட்டு இருக்கின்றன.

(தொடரும்.)

# ஊர் வம்பு

ஊர் வம்பு; ஆம் இதுபொழுது நம் நாட்டின் கிராமங்கள் எல்லாவற்றையும் ஏழரை நாட்டு சனியன்போல் வாட்டி வருவது இதுவே. பொறாமை மிகுந்து வேலையின்றிப் பொழுது போக்கும் ஒரு சில கிராமவாசிகட்குத் தொழிலதுவே. "எவன் தன்னை மதியாது நிமிர்ந்து நடப்பவன்; எவனுக்குத் தன்னைவிட வருவாய் அதிகம் வருகிறது; இவர்கட்குத்தக்கபடி புத்தி கற்பிக்க வேண்டும்; இதற்கென்ன சூழ்ச்சி" என்பதே இப்பொறாமைப் பூண்டுகளின் சிந்தனை. அங்ஙனந்தான் தன்னை மதியாதும், அதிக வருவாயும் பெறுபவர்களை இவர்கள் நேரே நின்று வாதிட்டுத் தம்மினும் கீழாக அடக்குகின்றனரா? அஃதொருக்காலு மில்லை. அங்ஙனமிருப்பின் அதனால் எவ்வித தீமையும் நேரா. மறைவிடத்திலிருந்து சூத்திரக்கயிறு பிடித்து பொம்மைகளை ஆட்டுவிக்கும் சூத்திரதாரி போல, எளிதில் ஏமாறுங்குணமுடைய சிலரைத் தூண்டிவிட்டு தாம் மறைவிடத்தே பதுங்கியிருந்து "நாடகம்" பார்ப்பதே இவர்தம் செயல். தம்மால் தூண்டிவிடப் பட்டவர்களின் கை மேலோங்குவதாக இவர்கள் அறிந்ததும், இத்தொழில் தம்மாலேயே நடப்பதென்பதை இவர்கள்வெளிக்கு நன்கு காட்டிக்கொள்வர். அதனால் தம்மை மதியாதிருந்தவர்கள் இப்பொழுது தம்பால் வந்து அடங்கி ஒடுங்கி நின்று, "எங்களை மன்னித்து எப்படியாவது இதைச் சமரசஞ் செய்து வைக்கவேண்டும்; நாங்கள் என்ன உங்களுக்கு ஒரு எதிரா?" எனக் குறையிரந்து நிற்பார்களென்பது அவர்கள் நினைவு. அவ்வாறின்றித் தம்மால் தூண்டிவிடப்பட்டவர்களின் கைதாழ்ந்து மற்றவர்களின் கை மேனிலை பெறுவதாயின், அவர்களிடம் சென்று தாம் ஒன்றும் அறியாதவர்போலும், ஊரின்நிலைமைக்கு மிக வருந்துவதாகவும் நடித்து, "அந்தப் பயல்களுக்கு, வேண்டாம்; வீணாகக் கெட்டுப்போக வேண்டாம் என்று எவ்வளவுதூரம் புத்தி சொன்னேன். கொஞ்சமாவது என் பேச்சைக் கேட்டார்களா? அந்த முட்டாள்களுக்கு இது போதாது, இன்னமும் வேண்டும்" என நடிப்பார்கள். **தற்காலம் கிராமங்கள் அடைந்துள்ள கீழ் நிலைமைக்கு இத்தகைய பாவிகளே காரணம். நச்சுப் பூண்டுகளைப்போல் ஒருசிலர் ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வாறிருந்து வருகின்றனர்.**

இப்பொல்லாதவர்கள் சிறு விடயத்தைப் பெரிதாகவும், பெரிதைச் சிறிதாகவும் காட்டவல்லவர். "புறம்போக்கு நிலங்களிலுள்ள அந்த மரங்களை யெல்லாம் கெங்கன் மகன் மூக்கனே ஏகபோகமா யனுபவித்துவர அவனுக்குமட்டும் என்ன சொந்தம்? அவன்தானா இந்த வூரில் பரம்பரையாய் குடியிருக்கிறான்? நாமெல்லாம் ஒண்டு குடி வந்தவர்களா? நீங்கள்

---

வீட்டில் தான் இல்லாதிருக்கிற வரையில் வீட்டில் நடக்கும் எந்தக் கலகத்திலும் தனக்குக் கெட்ட பெயர் வராமல் ஒதுங்கிக்கொள்ள சுலபமாகிறது. ஆனால், இப்படித் தூரத்திலேயே என்றும் இருக்க முடிகிறதா?

இந்தவூரில் ஆள்கட்டும், பணக்கட்டும் உள்ளவர்களாக இருந்தும் என்ன பிரயோசனம்? இப்படி ஒன்றையும் கவனியாமலிருப்பதனால்தான் அந்தப் பயல் நம்மையெல்லாம் கொஞ்சமும் லக்ஷியஞ் செய்வதில்லை" என அறிவில்லாப் பேதையர்சிலரைத் தூண்டிவிடுகிறான். பிறன் வாழச் சகியாத அப்பேதையரும், "ஆம்; ஆம்! இனி அந்த மரங்களை யெல்லாம் நமக்குச் சொந்தமென்று வாதாடுவோம்; அதற்கவன் வழிக்கு வராவிட்டால் சர்க்காருக்கு மனுப்போட்டு ஏலத்திற்குக் கொண்டுவந்து விடலாம்" என்கின்றனர்.

அந்த நச்சுப் பூண்டுகளின் தொழில் இவ்வளவுதான். இனி மேல்வரும் போராட்டமும், அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களும் பெறுபவர் மற்றவர். அம்மரங்களின் வருவாய் குறைந்தது வருடத்திற்குப் பதினைந்து ரூபாயிருக்கும். அதற்கு இவர்கள் செலவுசெய்த தொகையோ மிக மிக அதிகமாகும். அம்மட்டோ? அவ்வொரு சிறு விடயந்தான் இனியென்றும் தீராப் பகைமைக்கு விதையாகும். புகையாது எரியும் நெருப்பு, மின்னலும் இடியுமின்றிப் பெய்யும் கல்மழை, விழித்திருக்கும்பொழுதே முன்னிருக்கும் பொருள் காணாது மறைதல்—முதலிய விந்தையெல்லாம் அப்பொழுது கிராமங்களில் காணலாம். களவுங் கொலையும் மிகச் சாதாரணம்.

வெயிலும் மழையும் பாராது, வேளா வேளைக்கு உணவின்றி, வேர்வை வடியத் தேடிய பொருளை அன்பு, அருள் என்பவற்றைச் சொல்லிலன்றிச் செயலில் அறியா வக்கீல்கள், சர்க்கார் குட்டிப் பூசாரிகள் இவர்கள் திருவடியிற் சமர்ப்பித்து, அவர்களுடைய திருவுளக் குறிப்பை யெதிர்நோக்கி நிற்கின்றனர் அப்பேதையர். இனி அவ்வக்கீல்களும் பிறரும், பாலுஞ்சோறும் எவ்வளவு ஊட்டி வளர்ப்பினும் தம் பாழும் வயிற்றை நிரப்புதற்குத் தன் தலைவனில்லாத சமயம்பார்த்து உறியைத் தாவ நினைக்கும் நன்றியற்ற பூனைகளைப்போல் துரும்புபோன்ற வழக்குகளைத் தூண்போலப் பெரிதாக அலங்கரித்து மேலும் வருவாயை யெதிர்நோக்கி நிற்கின்றனர். அந்தோ! இம்முறையாற் கெட்டனவும், கெடுவனவும் எண்ணிறந்த குடும்பங்கள்!

(தொடரும்.)

பே. இராமாநுஜ ரெட்டியார்.

---


# பிரஜாநுகூலன்

**எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராசிரியர்.**

இது நாவல்கள் நிறைந்த அநுபவக் களஞ்சியமான சிறந்த மாதப் பத்திரிகை. **1904**-ம் வருஷ முதல் **25**-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. வெகு ருசிகரமான அநுபவங்களுடன் அதி சிலாக்கியமாயிருக்கும். பக்கங்கள் **32**.—"அமிர்தகுண போதினி" நேயர்கள் அதன் ஆசிரியர் நடத்தும் பழமையான இப் பத்திரிகையையும் ஆதரிப்பது அவசியம். வருஷ சந்தா ரூபாய் **1**.

☞ **மானேஜர், "பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம்.**

# அமிர்த குணபோதினி
## வாழ்த்து.

**1**

அமிர்தில் இனிமை அளித்திடலால் யாரும்
அமிர்தகுண போதினியை அன்றி—அமிதமாம்
பத்திரிகை நோக்கார் பயன்தேர் அநுபவமாம்
சித்தி இலாமை தெரிந்து.

**2**

திங்கள் உதித்தவுடன் தேடியே பெற்றறிவாம்
திங்கள் உதிக்க தினந்தோறும்—மங்களம்சேர்
பொன்போல் அமிர்தகுண போதினியைப்போற்றுமினோ
மன்பேர் உவகை மலிந்து.

**3**

ஊக்கம் உலகஇயல் உள்ள படிஎடுத்தே
தேக்கி அனுபவத்தால் செப்பலால்—வாக்கில்
அமிர்தகுண போதினியை அன்றி விரும்பார்
திமிரமறு நல்லோர் தெரிந்து.

**4**

போற்றும் அமிர்தகுண போதினியை போதிய அன்
பூற்று லநுபவத்தா லுண்மையால்—சாற்றும்
இராமா நுசவள்ளற் கீடுரைக்கி லண்ணல்
இராமா நுசனே யிணை.

**5**

ஐயம் அகற்றும் அமிர்தகுண போதினியை
உய்ய வெளியிட் டுதவும்அருள்—ஐயன்
இராசகோ பால்மகிபன் என்னாளும் வாழ்க
தராதலமேல் செல்வம் தழைத்து.

**S. கண்ணபிரான் பிள்ளை.**

---

உள்ளன்பற்று வஞ்சக மனத்தினர்களா யுள்ளவர்களுக்கு, அவர்களின் வஞ்சகங்களை யெல்லாம் தாம் அறிந்திருப்பதாகக் கடிதமூலம் விளக்கிவிடுவார் சிலர்.

---

''அமிர்த குணபோதினி பிரஸ்'' 302, தங்கசாலைத் தெரு, சென்னை 1929.